The "BHARATI" Reg. No. M. 2456.

ஜூன்-ஜூலை 1931.




மாலை 3. மணி 6 & 7.

# ஓர் தேசிய
# மாதப் பத்திரிகை

ரா. நாராயணஸ்வாமி
ஆசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

# போஷகர்கள்.

10 ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C., போடிநாயக்கனூர்.

11. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

12. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

13. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பனி, Ltd., பிராஞ்சு போடிநாயக்கனூர்.

14. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

15. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி & M. L. C., போடிநாயக்கனூர்.

16. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லாபோர்டு மெம்பர், கம்பம்.

17. ,, K. முத்துச்சாமி செட்டியார் அவர்கள், மிராஸ்தார், லக்ஷ்மிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

18. ,, ஆ. ஆத. இராமனுதத் தேவர் அவர்கள், மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O., தேவகோட்டை.

19. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார், சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O., தேவகோட்டை.


20. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள், மிராஸ்தார், ஆதங்குடி, புளியால் P. O., தேவகோட்டை.

21. மெஸ்ஸர்ஸ். V. S. ராமலிங்கம் செட்டியார் & பிரதர்ஸ், கோம்பை.

22. ஸ்ரீமான் P. S. குமாரசாமி ராஜா அவர்கள், இராஜபாளையம்.

---

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.



படங்களுடன் வெளிவந்துலவும் தேசிய மாவிகை.

## பொருள் அடக்கம்.

மாலை 3. 1931 ஜூன்—ஜூலை மணி 6 & 7.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | தேசம்—ஆசிரியர், "பாரதி." ... ... | 401 |
| 2. | மஹரிஷி தேவேந்திரநாத டாகூர்— திரு. A. ராமசாமி அவர்கள் ... | 404 |
| 3. | தமிழன்னை—ஜனப். பண்டித K. அப்துல் சகூர் சாகிப் அவர்கள் ... | 418 |
| 4. | எனது குருநாதரின் கடிதம்—(மனோகரனர்) ... | 419 |
| 5. | வீரப் பெண்மணிகள்—திரு. M. சின்னச்சாமி அவர்கள் | 423 |
| 6. | புத்தகசாலை—திரு. ச. முனுஸ்வாமி பிள்ளை அவர்கள் ... | 428 |
| 7. | அமெரிக்கரின் சுதந்திரப் பிரகடனம்— திரு. K. கணேசன் அவர்கள், B. A. ... | 432 |
| 8. | மிருக ஜாதியும் பகுத்தறிவும்— திரு. G. வாசுதேவன் அவர்கள், M. A., (Hons.) ... | 437 |
| 9. | வாய் வேதாந்தம் அல்லது பிரஸங்கமாரி— திரு. வெ. இராமச்சந்திரன் அவர்கள் ... | 441 |
| 10. | வாழ்க்கைத் துணை— ஸ்ரீமதி. P. V. சரோஜினிதேவி அவர்கள் ... | 449 |
| 11. | தயானந்த மகரிஷி—திரு. எம். ஆர். ஜம்புநாதன் அவர்கள் | 456 |
| 12. | தேசீய இயக்கம்—திரு. R. K. ரங்கன் அவர்கள் ... | 463 |
| 13. | அன்பு—ஸ்ரீமதி. P. S. அரங்கநாயகி அம்மாள் அவர்கள் | 465 |
| 14. | பாலிய விவாகம்—திரு. E. V. சுப்ரமண்யம் அவர்கள் | 470 |
| 15. | ஆசிரியக் குறிப்புகள் ... ... ... 1. அறிக்கை, 2. 43-வது தமிழ் மாகாண மகா நாடு, 3. மாதர்களுக்குச் சொத்துரிமை, 4. இராஜபாளையம் ராஜா, 5. "பாரதி"யின் அன்பர் கிருஷ்ணன், 6. வாலிபர் சங்கம், 7. தேசீயப் பள்ளிகள் 8. "பாரதி" மானேஜரின் சுற்றுப் பிரயாணம், 9. சித்தையன் கோட்டையில் மக்கள் விடுதலை சேவை சங்கம், 10. நாடக நடிகர் சங்கம், மதுரை, 11. தீண்டாமைக்கு என்ன பிரச்சாரம்? 12. ஆசிரியர் ஸ்ரீநிவாசய்யங்கார் பிரிவு. | 473 |
| 16. | ஆராய்ச்சி மேடை ... ... ... | 479 |


படம்:- K. G. கிருஷ்ணன், B. Sc., (Hons.)



K. G. கிருஷ்ணன், B. Sc., (Hons.)

# பாரதி

ஓர் தேசீய மாதப் பத்திரிகை.

“எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.”—பாரதி.

ஆசிரியர்: ரா. நாராயணஸ்வாமி
உத்தமபாளையம்.

Copy Right] [Registered.

மாலை 3 | பிரஜோற்பத்தி வைகாசி-ஆனி 1931-ஹு ஜூன்மீ | மணி 6

## தேசம்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், “பாரதி.”

தேசம் என்பதில் ஒரு சக்தி இருக்கிறது; ஒரு உணர்ச்சி இருக்கிறது; உற்சாகம் இருக்கிறது. தேசம் என்று சொல்லி அதற்காக உழைத்தாலோ, ஒரு சக்தி தோன்றி, உணர்ச்சி உண்டாகி, உற்சாகம் பொங்கித் தன்னை மறந்து உழைக்கச் செய்கிறது. இதனுல் அல்லவா ‘எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே, ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே” என்ருர் நம் தேசீயக் கவிச் சக்கிரவர்த்தி பாரதியார். தேசம் விசால நோக்கம் கொண்டது; எல்லாரையும் எல்லா

வற்றையும் தாங்கி நிற்பது; பற்பல மொழியினர்களையும் பலப்பல ஜாதியினர்களையும் பல்வேறு மதத்தினர்களையும் ஒன்றாக ஒற்றுமைப் படுத்துவது. உண்மை தேசாபிமானி மதத்தையோ ஜாதியையோ கவனிக்க மாட்டான். "நீ இந்தியன் என்பதற்குப் பெருமை பாராட்டு..............கல்லாத இந்தியனும், கல்வி கற்ற இந்தியனும், பிராமண இந்தியனும், ஒடுக்கப்பட்ட இந்தியனும் எனது சகோதரர்களே" என்று விவேகானந்த சுவாமிகள் கூறியது கவனிக்கத் தக்கது. ஜாதியின் பெருமையை விட்டுவிட்டு ஒவ்வொருவரும் எங்கள் தேசம் எங்கள் தேசம் என்று பெருமையுடன் சொல்லும் பொழுதுதான், நமது மாதரு பூமி விமோசனமடையும். தேசிய உழைப்பு சந்தோஷத்தைக் கொடுக்கின்றது; சாந்தியைக் கொடுக்கின்றது. தேசத்தையே தன் தேகமாக நினைக்கிறான் நல்ல தேசபக்தன்.

இந்தியாவிலிருந்து ஒரு ஹிந்துவும் ஒரு முகம்மதியனும் ஒரு கிறிஸ்தவனும் ஒரு அயல் நாட்டிற்குச் சென்றால், அங்கு இவர்களை யெல்லாம் இந்தியர்களென்றே சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த பற்பல ஜாதியினர்கள் வட இந்தியாவிற்குச் சென்றால், இவர்களெல்லோரையும் தமிழ் நாட்டார் என்றே சொல்லுவார்கள். இது அனுபவமாயு மிருக்கிறது. தேசத்திற்குள் தான் ஜாதிகள் அடக்கம். தேசாபிவிருத்தியின்றி ஒவ்வொரு சமூகமும் முன்னேற முடியாது. ஆகையால் தேச விடுதலைக்குத் தடைகளா யிருக்கும் அனைத்தையும் அதம் செய்ய வேண்டும். 35 கோடியுள்ள இத் தேச மக்கள் அனைவரையும் பிணைத்திருப்பது தேசமல்லவா? கவனியுங்கள்! தேசியத்தைத் தெய்வமாகக் கொண்டு தேச விடுதலைக்கு எல்லா வழிகளிலும் வேலை செய்யுங்கள். இன்று நமது தாய் நாடு அடிமையாகி அவதிப்பட்டுக் கொண்டிருப்பதற்கு நமது தேசப் பற்றுக் குறைவே காரணம்.

ஜாதி அபிமானம் என்று சொல்லிச் சுய நலங்கொண்டு தேச வளர்ச்சியைக் கெடுக்காதீர்கள். வீண் துவேசங் கொண்டு ஒருவரையோ ஒரு சமூகத்தையோ தாழ்க்காது, நாமும் உயர்ந்து

198538



கொள்ள உழைக்க வேண்டும். தாழ்ந்தோருக்கு உதவி அவஸியம் செய்து அவர்களையும் உயர்த்த வேண்டும். ஜாதி அகம்பாவத்தால் நாட்டில் ஒற்றுமை குறைந்துகொண்டு வருகிறது. தேசாபிமானிகள் இக் குறைகளைப் போக்கிச் சமரசத்தைப் பெருக்க வேண்டும். ஜாதி பேதமற்று மதபேதமற்று இந்தியர் அனைவரும் பாரத மாதாவின் மக்கள்—எல்லா இந்தியரும் சகோதரர்கள் என்ற தேசிய மதத்தை—அன்பு மதத்தை மகாத்மா காந்தி அவர்களும் அவர்களுடைய சிஷ்ய கோடிகளும் ஆசார சீர்திருத்தக்காரர்களும் சமத்துவ வாதிகளும் வளர்க்க முன்னின்று தீவிரமாய் வேலை செய்யும்படி வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ்த் திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா. 1

வேதமுடைய திந்த நாடு—நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு
சேதமில்லாத ஹிந்துஸ்தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா. 2

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர். 3

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமையடி பாப்பா.—பாரதி. 4

# மஹரிஷி தேவேந்திரநாத டாகூர்.

(கவிச் சக்கிரவர்த்தி ரவீந்திரநாத டாகூரது தந்தையார்)

திரு. A. ராமசாமி அவர்கள்.

எந்த கல்விக் களஞ்சியத்தினுடைய கவித் திரனை மெச்சி ஸ்வீடன் தேசத்தார் ''நோபெல்'' ப்ரைஸ் அளித்தனரோ, எந்த விவேகப் பிரவாகத்தினுடைய சொன்மாரிக்கு உவந்து ஜெர்மனி, பிரான்சு, சீனா, ஜப்பான், அமெரிக்கா முதலாகிய அநேக மேல் நாட்டின ரெல்லாம் அடிக்கடி வருந்தி யழைத்து மிக்க உபசரிக்கின்றனரோ, எந்த இந்தியத் திலகத்தினுடைய தரிசனத்தை இராஜ ராஜாக்க ளெல்லாம் விரும்புகின்றனரோ, எந்த மூதறிஞர் உலக ஒற்றுமையை நாடி ''விஸ்வ பாரதி'' என்ற கலாசாலையை மிக்க கீர்த்தியுடன் நடத்தி வருகின்றாரோ அந்த கவிச் சக்ரவர்த்தியாகிய ரவீந்திரநாத டாகூர் அவர்களை யீன்ற காதற்றந்தையாராகிய மஹரிஷி தேவேந்திரநாத டாகூர் அவர்களின் சரித்திரத்தை சுருக்கமாக, நம் 'பாரதி'யின் வாசகர்களுக்குத் தருகிறேன்.

சாதாரணமாக ''டாகூர்'' என்றால், வங்க பாஷையில் 'ஜமீன்தார்' என்று பொருள்படும். வங்காளத்திலுள்ள ''ஜஸ்ஸூர்'' ஜில்லாவில் இந்த டாகூர்களின் சமஸ்தானங்க ளிருக்கின்றன. மஹரிஷி தேவேந்திர நாதரின் தந்தையார் பிரபல ஜமீன்தாரரும், கோடீஸ்வரரும், நியாயவாதியுமா யிருந்த துவாரகாநாத டாகூர் என்பவராவர். இவர் தம் முன்னோர்களில் ஒருவராகிய பஞ்சானன டாகூர் என்பவர், தம திருப்பிடத்தை விட்டு கல்கத்தாவில் குடிபுகுந்தனர். இவருடைய குமாரராகிய ஜெயராம டாகூர் என்பவர் அக் காலத்திலிருந்த அரசாங்கத்தாரிடம் பெரிய உத்தியோகஸ்தரா யிருந்து பாதுர்ய கட்டத்தில் ஒரு பெரிய மாளிகையைக் கட்டிப் புகழுற்றார். இந்த ஜெயராமருடைய பிர பௌத்திரர்தான் துவாரகாநாத டாகூர் என்பவர். இவர்



சமய, சமூக சீர்திருத்தத்தில் மிகுந்த பற்றுடையவர். பிர்ம்ம சமாஜ ஸ்தாபகராகிய ராஜா ராம் மோகன்ராய்க்கு வலது தோளென்னும்படி துணை புரிந்து வந்தவர். வங்காளத்தில் இவருக்கு மிகுந்த செல்வாக்கும் நன் மதிப்பும் உண்டு. இவருடைய புகழ் இந்தியாவில் மட்டுமன்றி ஐரோப்பாவிலும் வியாபித்திருந்தது. 1841-ம் வருஷத்தில் இவர் இங்கிலாந்து, பிரான்சு முதலாகிய தேசங்களுக் கேகி அந் நாட்டு மன்னர்களால் நல் வரவேற்கப்பட்டார். அன்றியும் அந் நாட்டில் ப்ரிஸ்டல் நகரத்தில் தேகவியோக மடைந்த தனது அருமை நண்பராகிய ராம் மோகன ராய்க்கு ஒரு சமாதியும் கட்டுவித்தார். இவர் பிறிதொரு முறை இங்கிலாந்திற்குச் சென்று 1846-ம் வருஷத்தில் தமது தோழரைப் போலவே லண்டன் நகரத்திலேயே உயிர் நீத்தார்.

இவருக்கு மூன்று குமாரர்கள் உண்டு. அவர்களில் மூத்தவர்தான் தேவேந்திரநாத டாகூர். மகரிஷி தேவேந்திரநாத டாகூர் 1817-ம் வருஷம் மே மாதம் பிறந்தவர். இவர் இராம் மோகன்ராய் ஏற்படுத்திய இந்தியக் கல்லூரியில் கல்வி கற்றார். இவர் கூர்ந்த அறிவுடையவராதலால், இளம் பிராயத்திலேயே வங்காளி பாஷையோடு ஆங்கிலம், பாரசீகம், சமஸ்கிருதம் முதலிய பாஷைகளையும் கற்று அவற்றில் வியக்கத் தக்க ஞானமுடையவரானார். சிறுவனா யிருக்கும் போதே தன் தந்தையாருக்கும், ராம மோகனருக்கு மிருந்த நேச முதிர்ச்சியை முன்னிட்டு இவரும் ராஜா ராம் மோகன்ராயினுடைய வீட்டிற்கு அடிக்கடி செல்லுவதும், அங்கு நடைபெறும் பேச்சு வார்த்தைகளையும், உபந்யாசங்களையும் கேட்பதுமா யிருந்து, பல தெய்வ வணக்கத்தில் வெறுப்புற்று, ஒன்றாகிய பரம்பொருள் வணக்கத்தில் மாத்திரம் விருப்புற்றவரானார். இவரது பதினெட்டாவது வயதில் இவருடைய பாட்டியார் நோயுற்று மரணதசையை யடைந்தார். கங்கைக் கரையில் உயிர் விடுவதுதான் பெரும் புண்ணியமெனக் கருதி குற்றுயிரா யிருக்கும் பொழுதே உற்றார் உறவினர் சூழ நோயாளிகளை கங்கைக் கரைக்கு—மயானத்திற்குத் தூக்கிச் செல்லுவது அந் நாட்டினரின் வழக்கம். அவ் வழக்கப்படியே இந்தப் பாட்டியாரையும் எடுத்துச் சென்றார்கள். ஆயினும் உடனே உயிர் பிரியாமல் மூன்று நாள் வரையில் உற்றார், உறவினர், குல புரோ

கிதர் முதலிய எல்லோரையும் அம் மயானத்திலேயே காவல் புரியும்படியாக இந்தப் பாட்டியாரின் உயிர் செய்து விட்டது. இஃது தேவேந்திரநாதரின் ஞானோதயத்திற்கு அனுகூலமாக முடிந்தது. அதாவது: மூன்றாவது நாள் பௌர்ணமி யானதால் சந்திரன் முழுக் கலைகளுடன் பிரகாசித்தது. நள்ளிரவில் தேவேந்திரன் தவிர மற்றனைவரும் அயர்ந்து சற்று நித்திரையின் வாய்ப்பட்டிருந்தனர். கங்கையின் கெம்பீரமான பிரவாகம் இரைச்சலின்றி அமைதியாக நழுவிக் கொண்டிருந்தது. இளங் காற்று அமைதியாக வீசியது. வானம் பரிசுத்தமாகவும், கங்கா தீரத்திலிருந்த சோலைகள் ரமணீயமாக இளங் காற்றை வரவேற்று நில வெள்ளியைத் தமது இலை நடுவே நழுவ விட்டுக் கொண்டு விளங்கியது. இந்த இயற்கைத் தோற்றத்தைத் தனித்து ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்த டாகூரின் உள்ளத்தில் ஒருவித ஆனந்தம் உதயமாயிற்று. அப்போது அங்கு அவர் சயனித்திருந்த மூங்கிற் பாயே விலை யுயர்ந்த பஞ்சணையாகவும் விளங்கியது. அப்போதுண்டான அவர்தம் மனோநிலையைப் பற்றி அவரே பிரிதோர் சமயம் கூறி யிருக்கிறார். அஃதாவது: “இச் சமயத்தில் எல்லாப் பொருள்களும் அழியத்தக்கன வென்றும் எனக்குத் தோன்றின. அப்படித் தோன்றிய வுடனே நான் பழைய மனிதனல்லாமல் புதிய மனிதனாக மாறி விட்டேன். செல்வத்தின் பேரில் வெறுப்புண்டாயிற்று. அப்போது நான் வீற்றிருந்த மூங்கிற் பாயே எனக்குத் தகுந்ததென எண்ணினேன். விலை யுயர்ந்த திண்டு திவாசுக ளெல்லாம் என் விருப்பத்தினின்றும் நீங்கின. அது வரையில் அறிந்திராத ஆனந்தம் என்னுள்ளத்தில் உதயமாயிற்று. அதற்கு முன் கடவுளென்றால் என்னவென்பதைப் பற்றியும் தெரிந்து கொள்ள முயற்சித்தவனல்லன். அந்த மயான பூமி மிகவும் சாந்தமுற்று அமைதியா யிருந்தது. அவ்வானந்தத்தைப் பொறுக்க மாட்டாமல் பரவசனாய்ப் போய் விட்டேன். அவ் வானந்தத்தை வர்ணிப்பதற்கு உலகத்தில் எந்தப் பாஷையாலும், எந்த வாக்கியத்தாலும் முடியாது” என்பனவாம். இந் நிகழ்ச்சியின் பிறகு இவருக்கு இந்த மனோ நிலை பல வருஷங்கள் வரையில் ஏற்படவில்லை. ஆயினும் இவர் அதற்காக ஏகாந்த ஸ்தானத்தி லிருந்து பல முறையும் மனோலயம் ஏற்படுவதற்காகப் பாடுபட்டும் சரிவர கைகூடாதபடியால் மிக்க வேதனையை யடைந்தார். பிறகு பரம்பொருள் வணக்



கம் நாடோறும் செய்து வந்து, தியானத்தில் மதியைச் செலுத்தி வரலானார். ஒரு சமயம் இவர் காலை முதல் மத்தியானம் வரையில் வெட்ட வெளியில் வீற்றிருந்தபடியே பரம்பொருள் தியானத்தி லீடுபட்டு வெயிலின் கொடுமையைப் பொருட் படுத்தாது உடலை மறந்திருக்க, இவரது இல்லப் பணியாளர்கள் அழகான உடலை வெயிலினின்றும் மறைக்க வேண்டி குடைகளைத் தாங்கினராம். இவருடைய 21-வது வயதில் தமது அறையில் வீற்றிருந்த பொழுது அங்கோர் ஏட்டுப் பிரதியினின்றும் கிழிந்து போன துண்டு ஒன்று விழுந்து கிடக்கக் கண்டு அதை யெடுத்து அதிலிருந்த சம்ஸ்கிருத ஸ்லோகத்தைப் பார்த்து அதன் கருத்து விளங்காமல் தனது குல குருவினிடம் சென்று கேட்க அவரால் சொல்ல முடியாமற் போகவே பிரம்ம சமாஜத்தின் முக்கிய ஆசிரியராகிய “இராமசந்திர வித்யா வாகீச”ரிடம் சென்று விளக்கம் பெற்றார். அவ் வேட்டுத் துண்டி லெழுதப்பட்டது “ஈஸாவாஸ்யோப நிஷத்”தின் சுலோக மென்றும் “ஈஸ்வரன் ஜகத்தெங்கும் நிறைந்திருப்பானாதலால், ஸர்வம் ஈஸ்வர மயமே யெனத் தெரிந்து மக்கள் பிறர் பொருளை இச்சிக்காமல் தனக்குக் கிடைத்த மட்டில் திருப்தியுற வேண்டும்” என்ற அதன் கருத்தையும் ஷைவாகீசரால் தெரிந்து கொண்டு அது முதல் உபநிஷத்துகளில் உள்ள ஆழ்ந்த பொருள்களை யுணர வேண்டி அநேக உபநிஷத்துக்களைச் சந்தேகமறக் கற்கலானார். படிப்படியாக அவருக்கு வேதாந்த விஷயங்களில் ஆழ்ந்த பற்று உண்டாகியது. தேவேந்திரநாதரின் உபநிஷத் அர்த்த ஞானத்தையும், சத்வ குணத்தையு மறிந்த பலர் அவர் ஞானி யென்றுணர்ந்து அவரிடம் வேதாந்தம் பயின்று வந்தனர்.

அதன் காரணமாக 1839-ம் வருஷத்தில் 10 பேர்களை மெம்பர்களாகக் கொண்ட “தத்துவ போதினி” என்னுமோர் சபையை நிறுவி ஒவ்வொரு வாரமும் வேதாந்த (உபநிஷத்து) அர்த்த ஆராய்ச்சி செய்து கொண்டும், மாதமொரு முறை தெய்வப் பிரார்த்தனை செய்து கொண்டு மிருந்தார். மற்றும் இந்தச் சபையின் சார்பாக “தத்துவ போதினி” என்னும் பத்திரிகையை வெளிப்படுத்தி அதற்குத் தன் நண்பராகிய அக்ஷயகுமாரதத் என்பவரை ஆசிரியராக நியமித்தார். இந்தத் தத்துவ போதினி சபையில் முதலில் வெகு சொற்பமானவர்

களை சேர்ந்திருந்த போதிலும் பிறகு வரவர நவத்வீப மகா ராஜா வாகிய ஸ்ரீ ஸ்சந்திர ராயர், பர்ட்வான் மகாராஜா முதலாகிய பிரசித்த புருஷர் பலர் சேர்ந்தனர். பெரிய தனவந்தர்களும், கல்வியாளர்களும் அங்கத்தினர்களாகச் சேர்ந்த உற்சாகத்தினால் 1842-ம் வருஷத்தில் இச் சபையின் முதலாவது ஆண்டு விழா மிகவும் சிறப்பாக நடத்தப் பட்டது.

தன்னுடைய தத்துவ போதினி சபையும் பத்திரிகையும் எவ்வளவோ சிறப்பாக நடந்து வந்தது மன்றி தானும் அவ்வப்போது பிரம்ம சமாஜக் கூட்டத்திற்குச் சென்று விஷயங்களைக் கவனித்து வரலானார். இராஜா ராம் மோகன்ராய் இங்கிலாந்திற்குச் செல்லு முன்னர் தெய்வ வழிபாடு செய்வதன் பொருட்டு பிரம்ம சமாஜத்திற்காக ஓர் மாளிகை ஏற்படுத்தி அதன் முக்கிய தலைவரா யிருக்கும்படி இராமசந்திர வித்யா வாகீசரை யேற்படுத்திச் சென்றார். இராம மோகனர் இங்கிலாந்துக் கேகியது முதலாக அச் சமாஜம் க்ஷீணதசை யடையத் தொடங்கியது. அதை யறிந்த வாகீசர் மிக்க வியாகூல முற்று சமாஜம் மறைந்து விடும் போலிருக்கிறதே யென்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

தேவேந்திரநாதரோ உபநிஷத்தின் அர்த்த சாரங்களை யெல்லாம் நன்றாய் அறிந்தவரானபடியாலும், பிரம்ம சித்தாந்தங்களை நன்குணர்ந்தவரானபடியாலும், யாதொரு உருவமு மில்லாத அன்பே—அருளே வடிவமாக வுள்ள கடவுள் தன்மையை நன்கு ஆராய்ச்சி செய்தவரானபடியாலும் தனது நண்பர்களுக் கிடையிலும் தத்துவ போதினி சபையினருக் கிடையிலும் பரம்பரை வழக்கமாக இருந்து வந்த விக்கிரக வணக்கத்தைக் கண்டித்து, ஒன்றாகிய, ஒப்பற்ற பரம்பொருளை மானசீகமாகத் தியானிக்க வேண்டுமே யன்றி பரம்பொருளின் பெயரைச் சொல்லி பொம்மைகளை வணங்குவது அனாவசியமும், கூடா ஒழுக்கமும் ஆமென்று பன்முறையும் அவர்களுக்குப் போதித்துக் கடைசியில் தனது நண்பர் குழாத்துடன் பிரம்ம சமாஜத்திற் சேர்ந்து தத்துவ போதினி சபையையும் சேர்த்து பிரம்ம சமாஜத்திற்கு பலத்தை யுண்டாக்கினார். இதனால் இராமச்சந்திர வித்தியா வாகீசருக்குண்டான மகிழ்ச்சிக்கு எல்லையே யில்லாதாயிற்று. கல்வியிலும்,



மிகுந்த செல்வத்திலும், தெய்வ சிந்தையிலும் மேம்பட்டவரும், தன் கூட்டுறவாளிகளாக மகா ராஜாக்களையும் கொண்டவருமாகிய தேவேந்திரநாத டாகூர் பிரம்ம சமாஜத்திற் சேர்ந்த பின் அச் சமாஜம் புத்துயிர் பெற்று ஏராளமான மெம்பர்களைக் கொண்டதாகி ஒரு பெரிய மதமாக விளங்கலாயிற்று. அதன் பின் அச் சமாஜத்திற்கு வேண்டிய திரவிய சகாய மெல்லாம் தானே செய்து கொண்டும் எங்கெந்த வழிகளில் அச் சமாஜத்தைப் பரவச் செய்ய வேண்டுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் அதைப் பரவச் செய்தார். அவைகளில் "தத்துவ போதினி" யென்ற பாடசாலையை நிறுவி அதில் வேதாந்த (உபநிஷத்) சாஸ்திரங்களைப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்ததும் ஒன்றாகும். பிரம்ம சமாஜத்திற்கு "ருக் யஜுர்" முதலிய வேதங்கள் பிரமாணங்களாக இல்லாமையாலும், வேதங்களை ஆதாரமாய்க் கொண்டு வாதம் புரிய வருபவர்களை வேதப் பிரமாணங்களையும், வேதத்துள் சில அசம்பாவிதங்களையும் எடுத்துக் காட்டிக் கண்டிக்க வேண்டுமென்ற கருத்துடன் தன் கூட்டத்தாரி லிருந்து நால்வரை அர்த்தத்தோடு வேதங்களைக் கற்று விரும்படி தன்னுடைய சொந்தச் செலவில் காசி க்ஷேத்திரத்திற் கனுப்பினார். மற்றும் தனது கூட்டத்தாரில் சிலர் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்த பிறகும் பழைய வழக்கமாக விக்கிரக வணக்கத்தைக் கைக்கொண்டிருந்தபடியால், அதை முற்றிலும் நீக்க வேண்டி பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தவர்களனைவரும் பிரமாணப் பத்திரிகையில் கையொப்ப மிட வேண்டுமென்று 1843-ம் வருஷத்தில் ஒரு ஏற்பாடு செய்தார். அந்தப் பிரமாணப் பத்திரிகையின் சாரம்:— "ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குக் காரண கர்த்தனான ஒப்பற்ற பரமாத்மாவும், பராத்பரனும், அத்துவிதீயனுமான ஈஸ்வர னொருவனையே மனத்தினால் மட்டும் ஆராதனை செய்ய வேண்டுமே யன்றி விக்கிரக ஆராதனை செய்யோம். நோயினால் வருந்தும் காலந் தவிர மற்ற காலங்களில் நாள்தோறும் தெய்வ வழிபாடு செய்வோம். எந்த விதமான துஷ்ட காரியங்களுக்கும் இடங் கொடாமல் நற் காரியங்களையே செய்யப் பாடுபடுவோம்" என்பனவாகும். இவ்விதமா யெழுதப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் கையொப்ப மிடுவதற்குப் பலர் பின் வாங்கினார்களாயினும்

அவர்களை யெல்லாம் வசப்படுத்த வேண்டி தேவேந்திரநாதர் தானாகவே இருபது முக்கியமான கனவான்களை முன்னிட்டுக் கொண்டு கையொப்ப மிடுவதற்காக வாகீசரின் முன் நின்றார். வாகீசர் அளவற்ற பெரு மகிழ்ச்சியொடு கையொப்பம் வாங்கினார். அதை யறிந்த சகலரும் அதில் கையொப்ப மிட்டனர்.

பிறகு சில நாட்களில் தேவேந்திர நாதருடைய தந்தையுடன் பழகினவரும், தமது முயற்சிகளில் துணையா யிருந்தவருமாகிய "இராஜேந்திர சர்க்கார்" என்பவர் தன் மனைவியும், அவள் சகோதரனும் கிறிஸ்தவப் பாதிரிகளின் உபதேசத்திற் குட்பட்டு அம் மதத்திற் சேர்ந்து கொள்ளவே தன் மனைவியை மீட்டுத் தர வேண்டு மென்று கோர்ட்டில் தாவா செய்தும் பயன்படாமற் போகவே அவர் தேவேந்திரநாதரிடம் வந்து முறையிட்டுக் கொண்டார். தேவேந்திரர் அது முதல் கிறிஸ்தவர்களின் பிரசாரத்தில் சிற்றங் கொண்டு, அவர்களுடைய மதமாற்றச் செயலை யகற்ற வேண்டு மென்ற எண்ணத்துடன் கல்கத்தாவிலிருந்த பிரசித்தமான மக்களை யெல்லாம் வருவித்துச் சபை கூட்டி கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களுக்கு இந்திய மாணவர்களை அனுப்புவதும், அவர்களுடைய உபந்நியாசங்களுக்குச் செவி சாய்ப்பதும் கூடாதென்றும் இந்திய மாணவர்களுக்காகத் தனிப் பாடசாலை ஏற்படுத்த வேண்டு மென்றும் அக் கூட்டத்தில் தீர்மானிக்கச் செய்தார். மத விஷயத்தில் தேவேந்திரருடன் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களா யிருந்தும் அந்நிய சமயத்தினரைக் கண்டிக்க வேண்டி பல ஜமீன்தார்களும், சிற்றரசர்களும், அரசியல் அதிகாரிகளும் அக் கூட்டத்திற்கு வந்து அவருடைய அபிப்பிராயத்திற்கு இணங்கி விட்டனர். அப் பாடசாலைக்காக அக் கூட்டத்திலேயே 50,000 (ஐம்பதினாயிரம்) ரூபாய்களைச் சேர்த்து விட்டனர்.

தேவேந்திரர் தமது 28-து வயதிலேயே இவ்வளவு அரிய பெரிய காரியங்களை யாற்றியபடியால் நகரவாசிகளில் மற்றும் அநேகர் வியப்புற்று பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தனர். சமாஜத்தில் ஏராளமாக ஆட்கள் சேரச் சேர சமாஜக் கொள்கை ஒரு விதமாக இருப்பதற்கின்றி அவரவர் விருப்பம் போல் திருப்பிக் கொள்ளக் கூடியதா யிருந்தபடியாலும் அதற்கு ஒரு நூல் ஆதாரவாக இருக்க வேண்டு மென்ற அபிப்பிராயம் உண்டாகி எதைப் பிரமாணமாகக் கொள்ளுவதென்ற சந்தேகமும் பலர் கொள்ளலாயினர். அவர்களில் சிலர் வேதங்களை பிரமாண



மாகக் கொள்ளலா மென்றனர். இதை அட்சயகுமாரதத் என்பவர் மறுத்து விட்டார் மற்றும் பலர் பலவாறாக வாதித்தனர் இந்த வாதங்களில் சில மாதங்கள் கழிந்தன. கடைசியில் தேவேந்திரநாதரும் அவரைச் சேர்ந்த சாஸ்திர விற்பன்னர்களாகிய சபையோரும் "வேதம், சாஸ்திரம், புராணம் முதலாகிய எந்த ஒரு நூலையும் பிரமாணமாகக் கொள்ளுவது தகாதென்றும் பகுத்தறிவைக் கொண்டு ஒவ்வொரு நூலையும் நன்கு ஆராய்ந்து எந்த நூலிலாயினும் நன்மை பயக்கத்தக்க விஷயங்களிருந்தால் அவற்றை மாத்திரம் ஏற்றுக் கொண்டு மற்றவைகளைத் தள்ளிவிட வேண்டியதே பிரம்ம சமாஜத்தின் கொள்கையா யிருக்க வேண்டு" மென்றும் தீர்மானித்தனர். பிறகு சமாஜத்தில் சேர்ந்தவர்களுக்கு தர்ம சாஸ்திரம் ஏதாயினும் வேண்டுமே யெனக் கருதி "பிரம்ம தர்மம்" என்ற ஓர் நூலை தேவேந்திரநாதர் வடமொழியில் ஓர் நாளில் மூன்று மணி நேரத்திற்குள் எழுதி முடித்தார். இந்த நூல் இப்போது தேச பாஷை பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட் டிருக்கிறது. மறு பிறப்பு, முற்பிறப்புகளில் சந்தேக முள்ளவர்கள் இந்த நூலைப் பார்த்தால் அப் பிறப்புகள் உண்டாவதற்கு மார்க்க மில்லை யென்ற முடிவுக்கு வருவார்கள்.

தேவேந்திரநாத டாகூர் மன மொன்று செய்கை யொன்று இல்லாதவராகி சொல்லுகிறபடி நடந்து கொள்ளக் கூடிய தன்மையுடையவர். இந்த விஷயத்தில் இவர் எவ்வளவு எதிர்ப்புகளுக்கும் எவருடைய தாக்ஷண்யத்திற்கும் கட்டுப்படக் கூடியவரல்ல; பயப்படக் கூடியவருமல்ல. இதற்கு ஒரே ஒரு திருஷ்டாந்தம் மட்டிலும் கூறுவோம். 1846-ம் வருஷத்தில் துவாரகாநாத டாகூர் லண்டனில் இறந்து விட்டபோது அவருக்கு உத்தரக் கிரியைகள் செய்வதைப் பற்றி பந்துக்களோடு யோசித்தார். டாகூர் வம்சத்தவர்கள் பிராமணர்களானபடியால் வேத விதிப்படிதான் உத்தரக் கிரியைகள் செய்ய வேண்டு மென்று பந்துக்க ளெல்லோரும் சொன்னார்கள். தேவேந்திரரோ பிரம்ம சமாஜிகளுக்கு வேதம் ஒரு பிரமாணமல்ல, ஆனதால் பிரம்ம சமாஜக் கொள்கைகளுக்கு விரோத மில்லாதபடி காரியங்களை நடத்த வேண்டுமென் றுரைத்தார். பந்துக்களும், மற்ற பிராமண நண்பர்களும், குலப் பெரியார்களும் பலவாறு வேத விதிப்படிதான் நடத்த வேண்டு மென்று வற்புறுத்தியும் அவ் வெல்லோருடைய மொழிகளையும் லக்ஷியம் செய்யாமல் தேவேந்திரர் சமாஜக் கொள்கைப்படி சமா

ஜத்தாரோடு சேர்ந்து தந்தையின் பெயரால் அவருடைய ஞாபகார்த்தமாக ஈஸ்வரப் பிரார்த்தனை செய்தல் மூலமாக உத்ரக்கிரியையை முடித்தார். இதனால் குலத்தார் இவரை பகிஷ்கரித்தார்கள். அதற்கும் சற்றும் அஞ்சாமல் குழப்பம் ஒழிந்ததே நன்று என மகிழ்ச்சி கொண்டார்.

இப் பெரியாருடைய தைரியத்தையும், தெய்வ சிந்தனையையும் மூடக் கொள்கைகளை மறுப்பதையும் விளக்குவதற்கு இவ் விஷயங்களே போதுமானது. ஆயினும் இவர் உண்மைச் சீலர் என்றும், மகரிஷி என்றும் கூறப்படுவதற்கு மற்றொரு முக்கியமான விஷயமுண்டு. அஃதாவது: தன் தந்தையாராகிய துவாரகாநாத டாகூர் பெருஞ் செல்வத்தோடு வாழ்ந்து அளவற்ற தான தர்மங்களைச் செய்து வந்த காரணத்தால்தான் இறக்கும் போது தன் சொத்துக்களின் பேரில் ஒரு கோடி ரூபாய் வரையில் கடனிருந்தது. அவர் ஒரு லாயராயும், உலக விவகாரங்களை நன்கு அறிந்தவராய் மிருந்தபடியால், ஒரு சமயம் தான் இறந்து விட்டால், பிற்காலத்தில் அக் கடன்காரர்கள் தமது மக்களை வற்புறுத்திப் பணத்தை வசூலித்துக் கொள்ளுவதற்கு வழியில்லாதபடியும், கடன்காரர்கள் மேற்படி சொத்துக்களின் பேரிலுங்கூட செல்லுவதற்கு மார்க்கமில்லாதபடியும் அவ்வளவு சாமர்த்தியமாக மக்களுக்காக பந்தோபஸ்து செய்து வைத்திருந்தார். துவாரகாநாதர் இறந்த பிறகு கடன் கொடுத்தவர்கள் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்பதற்கு சரியான மார்க்கமின்றித் தவித்துக் கொண்டிருந்த போது உண்மையும், ஒழுக்கமுமே வடிவமாகவுள்ள தேவேந்திரநாதர் அக் கடன்காரர்களை தாமே வருவித்து அவரவர் கடனுக்கேற்றபடியாக ஜமீன் கிராமங்களையும் மற்ற சொத்துக்களையும் ஒப்படைத்து தன் குடும்பப் பாதுகாப்புக்காகமட்டும் வருஷம் ஒன்றுக்கு 20,000 இருபதினாயிரம் ரூபாய் கொடுத்து விட்டால் போதுமானது என்று ஏற்பாடு செய்தார். இது மாத்திரமன்றி விலையுயர்ந்த ஆபரணங்களையும், உயர்ந்த உப்பரிகைகளையும், கோச்சு வண்டிகளையும், மற்றும் பல பொருள்களையும் விற்று கடன் தீர்த்தார். அந்த சமயத்தில் வேதங்களைக் கற்பதற்காகக் காசி க்ஷேத்திரத்திற்கு அனுப்பப்பட்ட நான்கு பிராமணர்களையும் இனி அதற்குச் செலவழிக்கப் பணமில்லையென்று படிப்பை நிறுத்திக் கொண்டு வந்துவிடச் செய்தார். மற்றும் தான் ஏற்படுத்திய "தத்துவப் போதினி" யென்ற பாடசாலை



யையும் நிறுத்தி அக் கட்டடத்தையும் விற்றார். பலவாறாக உரைப்பானேன்; குடும்பப் பெண்கள் ஏறிச் செல்வதற்காக ஒரு மேனாவை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றெல்லாப் பொருள்களையும் விற்றொழித்து கடனை அடைத்து பழைய செல்வச் சிறப்புகளையெல்லாம் நழுவ விட்டுச் சாதாரண மனிதனாக ஏழ்மை வாழ்விலீடுபட்டு சிந்தையற்று நிம்மதி யடைந்தார். இவ்வாறு கடன் தீர்த்தது மாத்திரமல்லாமல் தன் தந்தையார் எவரெவருக்கு எந்தெந்த தர்ம காரியத்தின் பொருட்டு எவ்வள வெவ்வளவு தொகை கொடுப்பதாக வாக்குறுதி செய்திருந்தாரோ அவரவர்களுக்கு அந்தந்தத் தொகையை வட்டியுடன் கொடுத்துத் தீர்த்து மகிழ்ந்தா ரென்றால், இவருடைய உத்தமமான குணத்திற்கு எந்த நாட்டிலாயினும் எந்தக் காலத்திலாயினும் ஒப்பிட்டுரைக்கத் தக்க மகா புருஷன் இருந்தானெனக் கூற முடியுமா? ஆஹா! தந்தை செய்து வைத்திருந்த பந்தோபஸ் தென்ன? மகன் தகர்த்தெறிந்த தாராள சிந்தை யென்ன? உலகத்தில் பலர் வேதாந்தம் படிக்கலாம், நிஷ்டையும் புரியலாம், எல்லாம் துறந்து விட்டதாக நிர்வாணமாகவும் திரியலாம், பேர் பெற்ற சந்நியாசி யாகலாம், பெரிய மடாதிபதியாகவும் விளங்கலாம், அநேகர் அடிகளில் விழுந்து வணங்கும்படியான தன்மையையும் பெறலாம், பெரிய வைராக்கியமும் பேசலாம். ஆனால் இந்த தேவேந்திரநாத டாகூரைப் போல் சகல வளங்களையும் துறந்து தந்தை செய்து வைத்த பந்தோபஸ்தையும் பாராட்டாமல் பிறருடைய மனம் புண்படாதவாறு எல்லா சொத்துக்களையும் ஒழித்து மஹானாக விளங்குவது அரிது! அரிதினும் அரிது!!

உண்மையும் உறுதியுமுடைய உள்ளமே தெய்வம்; உத்தம குணங்களே அதின் பரிவாரங்கள். இவ்வித உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட தேவேந்திரநாதர் தமது தியாக குணத்தினால் "மஹரிஷி" என்ற பெயரையு மடைந்தார். கடனுக்காக ஒப்படைக்கப்பட்ட சொத்தைப் பெற்றவர்கள் தகுந்தபடி அவற்றை ஆண்டு அனுபவிக்கவும், தங்களுக்கு வரவேண்டிய அளவு பணத்தையே வசூலித்துக் கொள்ளவும் சக்தியும், அனுபவமும் இல்லாதவர்களாகி அச் சொத்துக்களை (ஜமீன் கிராமங்களை) மறுபடி இவருக்கே திருப்பிக் கொடுத்து "எங்களுக்குச் சேரவேண்டிய கடன் தொகையில் எவ்வளவு உம்மால் கொடுக்க முடியுமோ அவ்வளவு மாத்திரம் கொடுத்தால் போதுமானது. ஜமீன் கிராமங்களை

எங்களால் நிர்வாகிக்க முடியவில்லை" என்று வேண்டிக் கொண்டனர். இதனால் நமது மகரிஷி மறுபடியும் ஜமீன்தாராகும்படி நேர்ந்து விட்டது. பிறகு தேவேந்திரர் செலவினங்களில் ஜாக்கிரதையாயிருந்து சில தினங்களுக்குள் கடன் தொகை பூராவும் செலுத்திப் பழையபடி தன் சொத்துக்களுக்கு உடையவராயினர்.

அதன் பிறகு சில நாட்களில் தேவேந்திரநாதருக்கும் அவரது நண்பர்களுக்கும் சில விஷயங்களில் மனஸ்தாபங்களேற்பட்டன. அதனால் மனத்தை ஒரு வழிப்படுத்தி சாந்த நிலைமையடைய வேண்டுமெனக் கருதி இயற்கை வளங்கள் பொதிந்து விளங்கும் இமாலய பர்வதச் சார்பிற்குச் சென்றார். 1856-ம் ஆண்டில் சென்றவர் 18 மாதங்கள் வரையில் அங்கேயேயிருந்து வேதாந்த சாஸ்திரங்களைச் செவ்வையாய் ஆராய்ந்ததுமன்றி அம்மகா பர்வதத்தின் கெம்பீரமான தோற்றத்தையும், இயற்கை வனப்புகளையும் கண்டு வியந்து பரமேஸ்வரனுடைய அபார மஹிமையைப் புகழ்ந்து நினைந்துருகி மனச் சாந்தமுற்றார். இந்தக் காலங்களில் பிரம்ம சமாஜத்தின் பிற் காலத்துப் பிரசாரகராகிய "பிரம்மானந்த கேசவ சந்திரசேன்" என்பவர் தம்முடைய 18-வது வயதில் கல்கத்தாவில் பிரம்ம சமாஜ நிபந்தனைகளுக்குட்பட்டு பிரமாணப் பத்திரத்தில் கையொப்பமிட்டு அச் சமாஜத்தில் சேர்ந்தார். மகரிஷி தேவேந்திரநாதர் இமாலயத்தினின்றும் திரும்பி வந்து தமது சமாஜத்தில் சேர்ந்துள்ள அப் புதிய வாலிபருடைய புத்திக் கூர்மையையும், கல்வித் திறமையையும், சுறு சுறுப்பாக வேலை செய்யும் திறமையையும், நற் குண நல்லொழுக்கங்களையும் புகழ்ந்து அவ் வாலிபருடன் நட்பு பாராட்டி சமாஜத்தின் முன்னேற்றத்தை நாடிப் பாடுபடத் தொடங்கினர். மஹரிஷி தேவேந்திரர், கேசவ சந்திர சேனரைப் புத்திர பாவமாகவும், சிஷ்ய பாவமாகவும் கொண்டார் அவரும் இவரை தந்தையெனவும், குருவெனவும் மதித்தார். இவ்விருவரும நாள்தோறும் இரவிலும் வெகு நேரம் வரையில் வேதாந்த விஷயங்களையாராய்ந்து கொண்டு ஞானபிவிருத்தி செய்து கொண்டு வந்தனர். இவ்விருவரின் கூட்டுறவினால் பிரம்ம சமாஜம் முன்னிலும் சற்று அதிகமாகப் பரவி ஜனங்களிடம் நன்மதிப்பையும் பெற்றது. இவர்களில் மகரிஷி வங்காள பாஷையிலும், கேசவ சந்திர சேன் ஆங்கிலத்திலும் பிரம்ம சமாஜம் பிரசங்-



கங்கள் புரிந்தனர். மேலும் அறிவில் மிக்க சிஷ்யராகிய கேசவ சந்திர சேன் புதுப் புது யோசனைகளைக் கூறி அவற்றை நடத்தையில் காண்பிக்க வேண்டி குருவினிடம் சொல்வதும், செல்வத்திற் சிறந்த குருவாகிய டாகூர் அந்த யோசனைகளை நிறைவேற்றி வருவதும் வழக்கமாயிருந்தது. 1859-வது வருஷத்தில் மகரிஷி தமது குடும்பத்தோடு கப்பலேறி சிலோனுக்குப் போகச் சித்தமான போது சேனரும் அவருடன் பிரயாணமாயினர். இந்த யாத்திரையில் குரு சிஷ்யர்களுக்கேற்பட்டிருந்த நேசப்பான்மை முன்னிலும் முதிர்ச்சியுற்றது. சிலோனிலிருந்து திரும்பி வந்தவுடன் தேவேந்திரநாதர் பிரம்ம சமாஜக் கொள்கையின்படி தமது குமார்த்திக்கு விவாகம் நடத்தினர். இந்த குரு சிஷ்யர்கள் இருவரும் சேர்ந்து 1861-ம் வருஷத்தில் இந்தியக் கண்ணாடி (The Indian Mirror) என்னும் ஆங்கிலப் பத்திரிகையொன்றை யேற்படுத்தி வெளிப்படுத்தினார்கள். தேவேந்திரநாதர் தனது அன்பார்ந்த சிடனை அவரது அறிவின் நுட்பத்திற்கேற்றபடி உயர்ந்த ஸ்தானத்தில் அமர்த்த வேண்டுமெனக் கருதி நகரத்தார் எல்லோரையும் ஒரு நாள் வரவழைத்து அவர்களின் முன்பு கேசவ சந்திர சேனரை பிரம்ம சமாஜத்தின் முக்கிய ஆசிரியனாக பட்டாபிஷேகம் செய்து வைத்து "பிரம்மானந்தா" என்ற பட்டத்தையும் அவருக்களித்து தந்த முத்திரையும், பொற்சட்டமமைத்ததோர் படமும், தான் முன்பு ஏற்படுத்திய "பிரம்ம தர்மம்" என்ற நூலும் அவருக்குக் கொடுத்து மிக்க வைபவத்துடன் அந்த விழாவை நடத்தினர். அது முதல் பிரம்ம சமாஜம் பின்னும் பல மடங்கு உயர்வுற்றுப் பரவியது.

சொற்பொழி வாற்றுவதில் இந்தியாவில் கேசவ சந்திர சேனரைப் போன்றவர்கள் மறுபடியும் தோன்றவில்லையென்பது பலருடைய அபிப்பிராயம். சேனருடைய உபந்நியாசங்களுக்கு வியப்புற்று இவர் காலத்தில் அநேகர் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தனர். எனினும் இந்த குரு சிஷ்யர்களுக்குள் பிற் காலத்தில் சற்று பிளவேற்பட்டது, எப்படியெனில், தேவேந்திரநாதர் குலக் குறியாகிய பூணூலையும் நீக்கி விட்டு அயல் சமயத்தாரோடும் பந்திபோஜனம் முதலியவை செய்துகொண்டிருந்தாராயினும், பெண்களை பொதுச் சபைகளுக்கு அழைத்தேகுதல், அந்நிய வகுப்பா-

ரோடு விவாகம் முதலியவை நடத்தி வைத்தல் முதலாகிய சிற்சில விஷயங்களில் தாராளமாய் விட்டுக் கொடுக்க மனமிசையாமல் பழங் கொள்கைகளையே அனுசரித்திருந்தார். கேசவரோ கலப்பு மணத்திலும், பெண்களுக்கு சுதந்திர மளிக்கும் விஷயத்திலும் ஊக்கமுடையவராகி மற்றும் பல நவீன கொள்கைகளில் பற்றுடையவராய் இருந்தார். இவ்வித அபிப்பிராய பேதங்களினால் அவர்கள் ஒருவரை விட்டொருவர் பிரியும்படியாய் விட்டது. அதன் பிறகு தேவேந்திரநாதர் தமது பிரம்ம சமாஜத்திற்கு "ஆதி பிரம்ம சமாஜம்" எனப் பெயரிட்டுக் கொண்டார். கேசவரோ தனது சமாஜத்திற்கு "இந்து தேச பிரம்ம சமாஜம்" எனப் பெயரிட்டார்.

இவ்வாறு அபிப்பிராய பேதம் ஏற்பட்ட பிறகு தேவேந்திரநாதர் சிறுகச் சிறுக லௌகிக விவகாரங்களை விட்டொழித்து ஏகாந்த தியானத்திலேயே காலங் கழிப்பதும் பிரதி வருஷம் இமாலய பர்வதச் சார்புக்கேகி பேரின்பத்தை யனுபவிப்பதுமாகி யிருந்தார். இவர் தமது பரிசுத்தமான வாழ்க்கையினாலும், கரையற்ற கடமையினாலும், நல்லொழுக்கத்தினாலும், நிர்மலமான சிந்தனையினாலும், ஔதாருண்யத்தினாலும், தியாக குணத்தினாலும் பொது மக்களால் "மஹரிஷி" யென்று பேர் பெற்றார். மஹரிஷி யென்னும் பெயருக்கேற்ப இவர் இமாலயச் சார்புக்கேகி ஈஸ்வரத் தியானத்திலேயே காலங் கழித்து வந்தார். பிரதி வருஷம் பிரம்ம சமாஜ வருஷோற்சவ நாட்களில் தவிர மற்ற காலங்களில் அவர் மக்களின் கண்களுக்கு அகப்படக் கூடியவரல்ல. அதனால் நாட்டு மக்களில் அநேகர் தீர்த்த யாத்திரை செய்வதைப் போல மகரிஷியைப் பார்க்க இமாலயச் சார்புக்கு சென்றுகொண்டிருந்தனர். இவர் அந்தக் காலங்களில் இந் நாட்டில் பற்பல இடங்களுக்கு யாத்திரை செய்ததுமன்றி பர்மா, சீனா முதலிய நாடுகளுக்கும் சென்று வந்தார். இந்த மகரிஷி 1905-வரு ஜனவரி மீ 19உ வியாழக் கிழமை நடுப் பகலில் இவ்வுலகத்தை நீத்து ஆன்ம சாந்தியுற்றார். மகரிஷி தேகம் நோய்வாய்ப்பட்டிருந்தகாலையும் ஈஸ்வர தியானத்தை மாத்திரம் விட்டவரல்லர். இவருக்கிருந்த செல்வத்தின் உயர்வினால் மஹா ராஜா என்ற பட்டமடைவதற்குப் பதிலாக, தனது விவேக வைராக்கியங்களால் "மஹரிஷி" என்ற பட்டம் பெற்றார்.



இந்த இராஜ யோகி பிரம்ம சமாஜத் தலைவரா யிருந்த போதிலும் இவருடைய மதத்திற்கு மாறுபட்டவர்களிலும் கூட அநேகர் இவருடைய மரணத்திற்காகப் பெரிதும் துக்கமடைந்தனர். மகரிஷியின் மரண தேகத்தை தஹனத்திற்காகக் கொண்டு சென்ற போது எண்ணிறந்த மக்கள் பின் தொடர்ந்தனர்; அன்றியும், பெரிய மனிதர்கள், பிரபுக்கள் முதலியவர்கள் ஏறிச் சென்ற வண்டிகள் மாத்திரம் ஒரு மைல் நீளம் வரையில் பின் தொடர்ந்தன. சரீரம் சந்தனக் கட்டைகளாலேயே தகனம் செய்யப்பட்டது. இந்த ராஜ ரிஷியின் சரித்திரத்தைப் படிக்கும் போதும், கேட்கும் போதும் குடும்பத்தோடிருந்து ஆத்ம சந்நியாசிகளான முக்தர்களாகிய வசிஷ்டர் முதலிய பிரம்ம ரிஷிகளின் சரித்திரமும் ஜனகர் முதலிய ராஜ யோகிகளின் சரித்திரங்களும் நினைவிற்கு வரும்.

இவருடைய மக்களில் மூத்தவராகிய திவிஜேந்திரநாத டாகூர் பண்டிதத் தன்மை பெற்று சில வேதாந்த நூல்களை யெழுதினார். இரண்டாவது புத்திரராகிய சத்தியேந்திரநாத டாகூர் பெரிய உத்தியோகங்களைச் செய்து சில வருஷங்களுக்கு முன்பு பென்ஷன் பெற்றுக் கொண்டார். மூன்றாவது குமாரனாகிய ஜ்யோந்திரநாத டாகூர் என்பவரும், நான்காவது குமாரராகிய ரவீந்திரநாத டாகூர் அவர்களும் வங்காளி பாஷையில் அநேக புத்தகங்களை யெழுதினார்கள். குமாரத்தியாகிய ஸ்ரீமதி. சுவர்ணகுமாரி தேவியும் பல அழகிய வசன நூல்களை யெழுதிப் புகழ் பெற்று வங்காளியில் 'பாரதி' யென்ற பத்திரிகையை நடத்தியும் வங்காளத்தில் சிவில் சர்விசில் பெரிய உத்தியோகங்களைச் செய்து வருகிற "கோஷா" என்பவருக்குத் தாயாருமானார். தேவேந்திரநாத மஹரிஷி போல்பூரில் மரங்களடர்ந்த பிரதேசத்தில் ஒரு மரத்தடியில் வீற்றிருந்தபடியே தேகவியோக மடைந்தபடியால் அந்தப் பரிசுத்தமான இடத்தைப் பலருடைய ஞானபி விருத்திக்கு மார்க்கமுடையதாகச் செய்ய வேண்டுமென்றும், தந்தையார் அடைந்த சாந்திக்கு அறிகுறியாகவும் தமது இளங் குமாரரும் கவிச் சக்ரவர்த்தியுமாகிய டாக்டர். ரவீந்திரநாத டாகூர் அவர்கள் அவ் விடத்தில் "சாந்தி நிகேதனம்" என்ற கலாசாலையை யேற்படுத்திப் பெரு முயற்சியுடன் அதைப் போற்றி வளர்த்து வருகிறார். சாந்தி நிகேதனத்தை யறியாதார் உலகத்தில் எவருமிலரன்றோ? ஆகவே இப்போது தேவேந்திரநாத மஹரிஷி சாந்தி நிகேதனமாக விளங்குகிறார் என்று கருதுவோமாக.

# தமிழன்னை.

ஜனாப். பண்டித K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்.

(கட்டபொம்மன் காதை மெட்டு)

சங்க மிருந்தவ ளெங்களன்னை
சந்ததம் வாழ்பவ ளெங்களன்னை
பங்க மிலாதவ ளெங்களன்னை
பாரினை யாண்டவ ளெங்களன்னை 1

பொதிகை வளர்ந்தவ ளெங்களன்னை
புனித மிருந்தவ ளெங்களன்னை
நிதிமிகப் பெற்றவ ளெங்களன்னை
நீணிலம் வாழ்பவ ளெங்களன்னை 2

இனிமைப் பெயரின ளெங்களன்னை
இசையிற் களித்தவ ளெங்களன்னை
தனிமை போனிற்பவ ளெங்களன்னை
தாயென் றழைப்பவ ளெங்களன்னை 3

காரணந் தந்தவ ளெங்களன்னை
கலைபல கண்டவ ளெங்களன்னை
ஆரண மோர்ந்தவ ளெங்களன்னை
அன்பு நிறைந்தவ ளெங்களன்னை 4

தண்மை செறிந்தவ ளெங்களன்னை
தகைமை நிறைந்தவ ளெங்களன்னை
திண்மை மிகுந்தவ ளெங்களன்னை
தியாகங்க ளீந்தவ ளெங்களன்னை 5

வீர மிகுந்தவ ளெங்களன்னை
விண்ணோர் புகழ்ந்தவ ளெங்களன்னை
சாரந் தருபவ ளெங்களன்னை
சமரிற் றிகழ்பவ ளெங்களன்னை 6

காவியம் விண்டவ ளெங்களன்னை
காவலர்க் கொண்டவ ளெங்களன்னை
பாவலர்க் கண்டவ ளெங்களன்னை
பண்ணில் நிலைத்தவ ளெங்களன்னை 7

நீதி வகுத்தவ ளெங்களன்னை
நீணிதி தந்தவ ளெங்களன்னை



சாதிப் பிரிவில ளெங்களன்னை
சமூகம் நிறைந்தவ ளெங்களன்னை 8

சொற்சுவை தந்தவ ளெங்களன்னை
சோர்வை யகற்றுவ ளெங்களன்னை
பொற்குவை யீபவ ளெங்களன்னை
புண்ணிய மிக்கவ ளெங்களன்னை 9

கற்பு நிறைந்தவ ளெங்களன்னை
கலியைத் தகர்ப்பவ ளெங்களன்னை
பொற்பு மிகுந்தவ ளெங்களன்னை
பொய்ம்மை யிலாதவ ளெங்களன்னை 10

தாரணி தந்தவ ளெங்களன்னை
தமிழர் தொழுந்தெய்வ ளெங்களன்னை
"பாரதி" வாழ்பவ ளெங்களன்னை
பங்கயச் சீரடி பாடுமின்னே. 11

---

# எனது குருநாதரின் கடிதம்.

(மனோகரனார்)

## IV

பாரதப் புத்திரர்களே! பாரதப் புதல்விகளே!!

நீங்கள் பாரத பூமியிற் பிறந்ததற்காகப் பெருமை பாராட்டுங்கள். எத்தனையோ பேர் அன்னை பாரதியின் அணி வயிற்றில் அவதரிக்க அருந்தவ மியற்றுகின்றனர். உங்கள் தாய் நாட்டின் நாகரீகம் உலகில் மிகவும் பழமையானது. உண்மையில் முதன் முதலில் நாகரீகத்தை உலகத்திற்கு ஊட்டியது உங்கள் தாய் நாடென்பதை எண்ணிப் பாருங்கள். உங்கள் அறிவுப் பொக்கிஷமாகிய வேதத்தின் அடி முடியைக் கண்டவர் யார்? வேதம் அபௌருஷேயம் என்பதன் கருத்தென்ன? வேதம் அனாதி என்பதன் தாத்பர்ய மென்ன? மனிதனின்றி வேதம் பிறந்த தென்று? அல்ல; அல்ல. மனிதன் எப்பொழுது?, எங்கே? முதலில் தோன்றினான், என்பதைக் கூற முடியாததைப் போலவே, வேதம் யாரால்? எப்பொழுது? முதலில் கூறப்பட்டது என்பதும் கூற முடியாம லிருப்பதாலேயாம். அத்தனைப் பழமையான வேத சாஸ்திரங்களையும், கலை ஞானங்களையும் கொண்ட பெருமை ஆரியா வர்த்தத்திற் கன்றி வேறு எந்த நாட்டுக்குளது? உங்கள் சாஸ்திரங்கள், உங்கள் கலைகள், உங்கள் சிற்பங்கள், உங்கள் சமூக அமைப்புகள், உங்கள் அரசியல் நிர்மாணங்கள், உங்கள் ஒழுக்க முறைகள், உங்கள் தத்துவ ஆராய்ச்சிகள் இன்று நேற்று ஏற்பட்டவை யெனக் கருது

இன்றீர்களா? இன்று ஜெர்மன் பண்டிதர்களும், அமெரிக்க ஆராய்ச்சியாளர்களும், ஆங்கில ஞானிகளும், பிரஞ்சு மேதாவிகளும், இத்தாலிய தத்துவ வாதிகளும் இந்தியாவை நேசிப்பதன் காரண மென்ன? ஆரியர்களாகிய உங்கள் மூதாதையர் அரிதிற் றேடிவைத்த அறிவுப் பொக்கிஷத்தை அவர்கள் கொள்ளை கொள்ள அல்லவா? உலகமே இன்று உங்கள் பாரத நாட்டின் மீது நாட்டம் வைத்திருப்பதன் காரணம் யாது? உங்கள் அன்னை பாரதி செல்வத்திற் சிறந்தவள்; அறிவுக் கிடமானவள்; அழகின் மிக்கவள்; அகில ஐசுவர்யங்களுக்கும் உறைவிட மானவள்; இயற்கைச் செல்வங்களில் இனிது பெருத்தவள்; மலைவள முற்றவள்; நிலவளம் நிரம்பியவள்; நீர் வளம் பூத்தவள்; குடி வளம் மிகுந்துக் குலுங்கிடும் குணத்தவள். என்னே பெருமை! என்னே வளமை!! தேன் குடத்தை எறும்புகள் மொய்ப்பது போல் இத்தகைய இந்தியாவை அயல் நாட்டாரனைவரும் மொய்ப்பதில் அதிசய மென்ன? ஆங்கிலேயர்கள் இங்கு அடிவைத்த காரணம் என்ன? இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிச் செல்லுவதற் கல்லவா? நீங்கள் மோட்டார் சவாரிகளில் மோகங் கொள்ளுகிறீர்கள்; சைக்கிள் சவாரியில் இச்சை வைக்கிறீர்கள்; மான் செஸ்டர் துணிகளில் மனம் நாட்டுகிறீர்கள்; அயல் நாட்டுப் பொருள்களில் ஆசை காட்டுகிறீர்கள். அவற்றால் உங்கள் தாய் நாட்டுச் செல்வம் அமெரிக்காவையும், இங்கிலாந்தையும், பிற அயம் நாடுகளையும் தேடி யோடிக்கொண் டிருப்பதைக் கவனித்தீர்க ளில்லை.

ஒரு காலத்தில் இந்தியாவின் மென் துயில்கள் ஐரோப்பிய நாட்டு மகளிர்தம் உடலை அழகு படுத்திய மாண்பினை யறிவீர்களா? உலகில் தோன்றிய சமயங்கள் அனைத்திற்கும் ஆதி புருஷர்கள் எங்கே அவதரித்தார்கள்? உங்கள் ஆசியாக் கண்டத்தி லல்லவா? உலகில் பெரும் பகுதியார் கொண்டுள்ள பௌத்த சமயத்தின் மூல கர்த்தாவாகிய கௌதம புத்தர் தோன்றிய புண்ணிய நாடெது? இந்தியா அன்றோ? சங்கரர், மத்வர், இராமாநுஜர் போன்ற சமயாசாரியராகிய புண்ணிய புருஷர்களைப் பெற்ற கண்ணிய நாடெது? அர்ச்சுனன், அபிமன்னன், அரவான், சிவாஜி; பிரதாப சிம்மன், பிருதிவி முதலிய சூரர்களைப் பெற்ற வீர நாடெது? சகரான், மாந்தாதர், சந்திர குப்தன், அசோகன் முதலிய முடி மன்னர்கள் தோன்றிய குடி நிலம் யாது? இராணி துர்க்காவது, பத்மினி பாய், ஜான்ஸி ராணி, மங்கம்மாள் போன்ற வீர மாது சிரோமணிகள் உதித்த மாண்புடை நாடெது? உங்கள் பாரத நாடன்றோ? உங்கள் பண்டைப் பெருமையை ஒரு முறை எண்ணிப் பாருங்கள். நீங்கள் ஆட்டு மந்தையில் வளர்ந்த சிங்கக் குட்டிக ளென்பதைச் சிந்தித் துணருங்கள். உங்கள் உடலில் வீர ரத்தம் பாய்ந்து ஓடுகிறதைக் கவனித்துப் பாருங்கள். உங்கள் பழம் பெருமைக ளனைத்தும் மங்கிப் போக, பிரிட்டிஷ் ஏகாதி



பத்தியத்தின் கீழ் அடிமை வாழ்க்கை யெய்தி, மறுமைக் கிலக்காகி, அல்லலுறும் அன்னை பாரதியின் அடிமைத் தளைகளை இன்னும் எத்தனை நாட்களுக்குக் காத்துப் பூசித்து வருவீர்கள்? விடுதலை யென்பது உங்களுக் கில்லையா? சுதந்திரத்தின் சுவையை மறந்து போனீர்களா? அடிமை வாழ்வில் அரச போகந் துய்ப்பதினும், சுதந்திர வாழ்க்கையில் துன்பங்களை ஏற்பது மேலென்பதை யறியீர்களா? விடுதலை பெற வழி கோலுவதற்கு உங்களுக்கு அறிவில்லையா? ஆற்ற லில்லையா? அனுபவ மில்லையா? அன்றி உங்களுக்கு வழி காட்டுஞ் சிறந்த தலைவர்க ளில்லையா? ஏன் தயங்குகிறீர்கள்.

உங்களிடையில் ஜாதி சமயப் பிணக்குகளா! உயர்வு தாழ்வுக் கூற்றுகளா! தீண்டாமை போன்ற வேற்றுமைகளா! அந்தோ பாவம், அடிமைகளுக்குள் இத்தனைப் பூசல்களா? ஹிந்து என்றால் யார்? மகம்மதிய ரென்றால் யார்? சைவர் என்றால் யார்? வைணவ ரென்றால் யார்? பௌத்தர் என்றால் யார்? கிறிஸ்தவ ரென்றால் யார்? தீண்டப் படாதா ரென்றால் யார்? அனைவர்களும் மனிதர்களே யன்றோ? மஹம்மதிய ரிடத்திலும், ஹிந்துக்க ளிடத்திலும், தீண்டப் படாதா ரிடத்திலும் வெவ்வேறு ரத்தமா ஓடுகிறது? பாரத தேவியின் திரு வயிற்றில் உதித்தவ ரனைவரும் சகோதரர்க ளன்றோ? அடிமை வாழ்க்கையிலுள்ள உங்களிடையில் உயர்ந்தவர் யார்? தாழ்ந்தவர் யார்? "சுதந்திர முடையார் உயர்ந்தோர், அஃதில்லாதார் தாழ்ந்தோர்" என்பதிலாயினும் உண்மை இருக்கக் கூடும். எனவே உங்களிடையில் உள்ள புறச் சமய வேற்றுமைகளை மறந்து விடுங்கள். சாதிச் செருக்கை விட்டொழியுங்கள். மக்களை மக்கள் அடிமை கொள்ளும் வழக்கத்தை அறவே யகற்றுங்கள். ஆண்களோடு பெண்களுக்கும் சம சுதந்திர மளியுங்கள் நாட்டு விடுதலையில் நாட்டங் கொள்ளுங்கள். உங்கள் ஒப்பற்ற தலைவராம் காந்தி யடிகளாரின் சாந்த வழியைப் பின் பற்றுங்கள். வல்லபாய் படேலின் வாழ்க்கை நிலையை வாழ்த்தி நில்லுங்கள். மாளவியாவின் மன உறுதியினை மனத்தில் கொள்ளுங்கள். ஜவஹர்லாலின் ஜன நாயக முயற்சியை ஜன்மத்தில் மறவாதீர்கள். சுபாஷ் போசுவின் சுதந்திரப் படையில் சூழ்ந்து முன் வாருங்கள். அன்சாரியாரின் அரிய உழைப்புக்கு ஆக்கந் தேடுங்கள். சக்கிரவர்த்தியின் சலியா முயற்சியைச் சடுதியில் பற்றுங்கள்.

கீதையில் பகவான் என்ன கூறுகிறார்? "உன் கடமையை நீ செய். அதன் பலாபலன்களை எண்ணாதே. மறத்தைக் கொன்று அறத்தை வளர்க்கவும், அடிமை வாழ்க்கையைத் துறந்து சுதந்திரம் பெறவும் விடுதலைப் போரை விரைந்து செய்." இதுவே பகவான் கூறிய உபதேசம். அதையே நீங்களும் செவி கொள்ளுங்கள். மகாத்மாவின் ஆணைவழி நின்று அறப் போரை நடத்துங்கள். அஹிம்சா தர்மத்தினின்றும் வழுவாதீர்கள். காந்தி

ரஸ் கட்டளையின்படி ஆக்க வேலைகள் அனைத்தும் இனிது இயற்றுங்கள். "பகவத் சிங்" போன்றவர்களின் தியாகமும், வீரமும் உங்களிடையில் வளரட்டும். ஆனால் அவர்கள் கொண்ட ஹிம்சை வழி உங்கள் நாட்டையே விட்டு நீங்கட்டும். நீங்கள் கொண்ட சத்தியாக்கிரகப் போரின் அருமை பெருமைகளை உலகமே இன்று கவனித்துக் கொண்டிருக்கிறது. உங்களைப் போன்று அடிமை வாழ்க்கை யெய்தி யுள்ள கொரியா, பிலிப்பைன் முதலிய நாட்டினர் அனைவரும் உங்கள் வெற்றியை எதிர் நோக்கி நிற்கின்றனர். உலக சமாதானத்தை நிலை நிறுத்துவான் தோன்றிய ஜினிவா சர்வ தேசச் சங்கமும் இனி உலக சமாதானத்தை ஹிம்சை யற்ற வழியில் நிலை நிறுத்துவதற்கு உங்களிடம் பாடம் கேட்கப் போகிறது. அருங்குணச் செல்வர்களே! மூடக் கட்டுப்பாடுகளை உதறித் தள்ளுங்கள். உலகப் பரப்பை உற்று நோக்குங்கள். சாஸ்திர ஆராய்ச்சியின் வன்மையால் பிரபஞ்சமே ஒரு குடும்பமாகவும், ஒரு வீடாகவும் விரைவில் மாறப் போகிறதென்பதை நினைவுறுங்கள். அதற் கிணங்கி நடக்க இப்பொழுதே உங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள். உங்கள் முன்னணி வேலை நாட்டு விடுதலையைச் சாதிப்பதென்பதை மறவாதீர்கள். அதற்கு எவ்வெவ் வகையில் உங்களால் துணை புரிய—உழைக்க முடியு மென்பதை உறுதி செய்யுங்கள்.

வட்ட மேஜை மகாநாடு உங்களுக்கு என்ன சாதித்துவிடப் போகிறது? அக் கூட்டத்தில் காந்தி யடிகளார் கிளத்தும் கோரிக்கைகளைப் பிரிட்டிஷார் அப்படியே ஒப்புக் கொள்ளுவார்க ளென்பதற்கு உறுதியென்ன? இந்தியர்கள் சமாதான முயற்சிகளுக்கு என்றும் சாதகமாயிருப்பவர்க ளென்பதை நிரூபிக்கவே காந்தி யடிகளார் இச் சமாதான உடன்படிக்கைக்கு இணங்கி யிருக்கிறார். வட்ட மேஜை மகா நாட்டில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படு மென்பதை நம்புகிறீர்களா? அச் சபையின் ஆரம்பக் கூட்டத்தில் ஆங்கிலேயர்கள் சிலர் முஸ்லீம் தலைவர்களைத் தூண்டி விட்டு ஒற்றுமைக்கு ஊறு விளைத்ததை மறந்து போனீர்களா? அவர்கள் இன்று இங்கிலாந்தை விட்டுச் சென்று விட்டார்களா? அவர்கள் இனியும் அவ்வாறு தூண்டுவதற்குப் பின்னடைவார்க ளென நினைக்கிறீர்களா? அவர்கள் ஆட்டி வைக்கும் முறையில் ஆடுவதற்கு நம்மில் ஆட்கள் இருக்கும் வரையில் சமாதான மேது? மகாத்மாஜீதான் என் செய்வார்? எனவே வட்ட மேஜை மகா நாட்டின் மோகங் கொண்டு உங்கள் நிலையைத் தளர்த்திக் கொள்ளாதீர்கள். இனி வரும் எதிர்கால சத்தியாக்கிரகப் போருக்கு ஆயத்தமா யிருங்கள். சுதந்திர மென்பது ஒருவர் கொடுக்க மற்றொருவர் வாங்கப் பெறுவ தல்லவே. எனவே உங்கள் சுதந்திரத்தை உங்கள் நாட்டில் நீங்களே சாதித்துக் கொள்ள வேண்டு மென்பதை மறவாதீர்கள். முப்பத்தைந்து கோடி இந்திய மக்களின் ஒத்துழைப் பின்றி இவ் விந்தியாவை யாரால் அடக்கியாள முடியும்? ஆகவே எழுங்கள்! வேலை செய்யுங்கள்!! நீங்கள் ஜெயமடைவது நிச்சயம்.

---

# வீரப் பெண்மணிகள்.

## திரு. M. சின்னச்சாமி அவர்கள்.

### (முன்னுரை)

பரத கண்டத்தின் பள்ளிகளிலும், உயர்தரக் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்டிருக்கும் தேச சரித்திரங்களில், இந்தியர்களின் தேசபக்திக்கும், வீரதீரங்களுக்கும் களங்கத்தை யுண்டாக்கி விட்டார்கள். கிளைவ், வாரன் ஹேஸ்டிங், வெல்லஸ்லி, டல்ஹௌஸி முதலியவர்களின் கபடங்களையும், வஞ்சகங்களையும், யுக்திக்குத் தகுந்தவாறு இதமாக வரைந்து விட்டார்கள்.

தற்காலம் படிக்கக் கூடிய தேச சரித்திரங்களில், நாட்டின் தேசீய உணர்ச்சியையும் மான மரியாதையையும் சிறிதும் நிலை நாட்டவில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிப்படைக்கு வேண்டிய ஆதாரங்களையும் திட்டங்களையும் விரிவாக எழுதிவைத்துக்கொண்டார்கள். அதிலும் மார்ஸ்டன், லேன்பூல், லயல் முதலிய ஆங்கில ஆசிரியர்கள், ஐரோப்பிய வீரர்களை மட்டும் வெள்ளையாக வர்ணித்து வைத்திருக்கின்றார்கள். சிவாஜி, பிரதிவி ராஜ் முதலியோர்களைக் கொள்ளைக்காரர்களாகவும், வழிப்பறிக்காரர்களாகவும், அக்கிரமம் வாய்ந்தவர்களாகவும், சாதாரண வீரர்களாகவும் கூறிவிட்டார்கள்.

மத்தியகாலத்தின் தேச சரித்திரத்தில் வீரம் நிறைந்த க்ஷத்திரிய ராணிகளுடையவும், இராஜபுத்திரர்களுடையவும் பெயரைக்கூடக் குறிப்பிடவில்லை. அவர்கள் எக்காலத்தும் செய்திராத அக்கிரமங்களைப் பச்சையாக வர்ணித்து வைத்திருக்கிறார்கள். அவ்விதக் கொடுமைகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் குடை நிழலில் எப்பொழுதும் நடைபெற்றிருக்காது.

இந்திய மாணவர்கள் ஔரங்கசீப்பினுடைய வர்ணனைகளைக் கேட்டவுடன் மொகலாயர்களையும், மொகலாய மாணவர்கள் சிவாஜி, பிரதிவி ராஜ், இராணவின் முதலியோர்களின் வர்ணனைகளைக் கேட்டவுடன் ஹிந்துக்களையும் வெறுக்கும்படியாய் எல்லா புத்தகங்களிலும் விரோதமாய் வேண்டுமென்றே வரைந்து வைத்துள்ளார்கள். அம்மட்டுமல்ல; நம்முடைய சரித்திரங்களில் ஔரங்கசீப் காலத்திலுங்கூட "இந்து வீரர்கள் இருந்தார்கள்" என்பதைச் சிறிதேனும் குறிப்பிடவில்லை. ஆங்கில ஆசிரியர்கள் இந்திய சரித்திரத்திலேயே இந்திய இரத்தினங்களைப்பற்றி ஒரு வார்த்தை

யேனும் கூறவில்லை. இவ்விந்திய இரத்தினங்கள்தான் இப்பாரத தேவியின் வேண்டுகோளை வெளிக் கிளப்பியவர்கள். இவர்களின் கீர்த்தனையும் அஞ்சா நெஞ்சும் நம்முடைய இளங்காளையர்களுக்கு ஆவேசமான தேச பக்தியை யூட்டி அவர்களைக் கரிபால்டியாகவும், நெப்போலியனாகவும் மாற்றி விடும்.

இவ்வித வீரர்கள், வீரமணிகளுடைய வர்ணனைகளைப் பற்றி நம்மவர்களில் உயர்தரக் கல்விகற்று பி. ஏ. பட்டம் பெற்ற பட்டதாரிகளில் நூற்றில் ஐவரேனும் அறிந்திரார்கள். அவ்வித வீரம் நிறைந்த க்ஷத்திரிய இராணிகளுடைய சரிதங்களை இவ்விதமாய் வெளியிடுவதால் வாலிபர்களின் எலும்புகளிலும் இரத்தங்களிலிலும் ஓர்வித உணர்ச்சி யுண்டாகுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. அதிலும் தற்காலம் பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கு இச்சரிதைகள் வழிகாட்டியாகவும், அவர்களின் வீர தீரங்களையும் தியாக வுணர்ச்சியையும் வளர்விக்கும் என்ற முழு நம்பிக்கையுடன் மாதந்தோறும் ஒவ்வோர் சரிதையாக "பாரதி"யில் வெளியிடக் கருதி யுள்ளேன்.

## குவ்வர் தேவி

### I

"பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி." --பாரதியார்.

மொகலாயர்கள் வம்சத்தில் அக்பர் அரசனாயிருந்த காலத்தில் அதிகார வெறியும், சுயநலமுங்கொண்ட எத்தனையோ இராஜபுத்திரர்கள் தங்கள் குழந்தைகளையும் சகோதரிகளையும் மொகலாயர்களுக்குக் காணிக்கையாக வழங்கி வந்தனர். இக் காரணத்தால் அக்பருடைய அந்தப்புரத்திலுங் கூட (ஹிந்து) இராஜ புத்திர இராணிகள் அதிகமாக விருந்தனர். சரித்திர சாமர்த்தியம் நிறைந்த ஆசிரியர்கள்கூட இச் செய்திகளை மறைக்க வில்லை. அவ்வமயம் அதிகாரத்தில் மானஸிங் எனும் கிழவர் ஒருவர் இருந்தார். அவர் கிழவரா யிருந்த போதிலும், எத்தனையோ இளங்காளையர்களுக்கு உபத்திரவத்தைக் கொடுத்து வந்தார். எனினும் இராஜபுத்திரர்கள் தங்களுடைய குழந்தைகளையும், சகோதரிகளையும் மொகலாயர்களுக்குக் காணிக்கையாக வழங்கி வருவதை இவர் மிக வெறுத்து வந்தார்.

அவர் அக்பரிடம் சேனாதிபதியாக விருந்தும், அவருடைய துணிவிற்கும் நன்னடக்கைக்கும் தகுந்த மரியாதைகள் அக்பருடைய தர்பாரில் இவருக்கில்லாதிருந்தது. தர்பாரிலுள்ள மற்றைய மொகலாய சேனாதிபதிகள் இவரிடம் நம்பிக்கையில்லாதிருந்தனர். அதிக சந்தேகமும்



அடைந்து வந்தனர். இக்காரணங்களால் மொகலாய சேனாதிபதிகள் இவரிடம் உள்ளே பகையும் உதட்டிலே உறவுங் காட்டலாயினர். இவர்களிடையே மானஸிங் தன்னுடைய வஞ்சகமற்ற முகத்தோடு எப்போதும் பிரகாசித்து வந்ததினால், அவருக்குக் கெடுதலும் விரோதமுமேற்பட நேர்ந்தது.

இம் மானஸிங்குக்கு இராண ஸிங் எனும் புதல்வனொருவ னிருந்தான். அவன் பெயருக்கேற்ப உண்மையில் இராண ஸிங்காகவே விளங்கலானான். இர்ஜபுத்திர வகுப்பினர் இவனைக் குலாபிமானத்தில் தங்களுடைய ஹிருதயங்களில் போற்றிவர லானார்கள். இந் நாளில்தான் மொகலாயர்கள் ஹிந்து ஸ்திரீகளைக் கொள்ளை யடித்தார்கள். இச் செய்திகளும் இவனுடைய காதிற் கெட்டின. அவ்வமயம் இவன் அக்பருடைய தர்பாரில் உன்னத பதவி யடைவதற்காகத் தன் லக்ஷியங்களை அதிற் செலுத்தி சுய நலத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து வந்தான.

இவனுக்குக் குவ்வர் தேவி யெனும் சகோதரி ஒருவளிருந்தாள். அவளுடைய இருபது வயதிலேயே அவளுக்கு அவஸ்தை நேர்ந்தது. அவள் ஓர் இள மங்கை. அவளுக்குப் பால்யத்திலேயே ஒரு வாலிபனை மணஞ் செய்யப்பட்டிருந்தது. அவ் வாலிபனும் தேசத்தின் தர்மத்தை நிலை நாட்ட இராண களத்தில் தன்னுயிரை இராண தேவிக்குப் பலியிட்டான். அவன் முகத்தைக்கூட குவ்வர் தேவி நன்கு பார்த்தறியாள். இவள் தன் பிதாவைப்போல மொகலாயர்களிடம் வெறுப்புள்ளவளா யிருந்து வந்தாள். இவளின் அழகு எத்தனையோ கொடும் பாவிகள் கண்களுக்கு ஓர் விதக் கூச்சத்தை யளித்து வந்தது. இதில் சிறிதும் சந்தேக மில்லை.

அவ்வமயம் இராண ஸிங்கினுடைய நண்பனான அப்துல்கான் என்பான் சக்ரவர்த்தியான அக்பருடைய தர்பாரில் மதிக்கக்கூடிய சேனைத் தலைவனாகவிருந்தான். அக்பரும் அவனைப் பிரியமாகத் தன் புத்திரன்போல் பாவித்து வந்தார். இக் காரணத்தால் எத்தனையோ சேனைத் தலைவர்கள் இவனை நண்பனாக்கிக் கொண்டார்கள். இதனால்தான் இராண ஸிங்குங்கூட அப்துல்கானைச், சரிப்படுத்தி வைக்கும்படி நேர்ந்தது. அப்துல்கானே தன்னுடைய நண்பர்களை அக்பருடைய தர்பாரில் ஒருநாள் விட்டு ஒருநாள் உன்னத ஸ்தானத்தில் முறையே நியமித்து வருவான். இராண ஸிங்கும் இச் செய்தியை நன்கறிந் திருந்தான். இதனால் அப்துல்கானை தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வந்து தகுமான வரவேற்பு உபசாரங்கள் செய்தும் வருவான். மற்றைய நண்பர்களும் அப்துல்கானுக்கு உபசாரங்கள் செய்தும் வந்தார்கள்.

ஓர்நாள் இரணஸிங் தன்னுடைய சுயநலத்தின் பொருட்டு அப்துல்கானை விருந்திற் கழைக்க அவனும் அவ்விதமே வந்து சேர்ந்தான். அவ்வமயம் அவனுடைய கண்ணில் எவ்விதமாகவோ குவவர் தேவி தென்பட்டு விட்டாள். ஆனால் அவன் தன் மனதி லெண்ணிய எண்ணங்களை வெளிக்குக் காட்டிக்கொள்ள வில்லை அப்துல்கானுடைய நண்பர்களில் சுயநல மில்லாதவர் ஒருவரும் இல்லை யெனினும், நமது இரண ஸிங்கிற் கிணையாக எவரு மிருந்திரார்கள் எனக் கூறலாம். அப்துல்கானே முசல்மான்களுடைய உபாயத்தால் இரண ஸிங்கின் புகழ்ச்சிக்குக் கரை போட்டு விட்டான். இரண ஸிங்கோ தர்பாரில் இன்னும் அதிகமான உன்னத நிலைக்குத் தான் போகப் போவதாக வாயில் உமிழ் நீர் சொட்டிக்கொண் டிருந்தான் .இவ்விதமாய் இரண்டு மாதங்கள் கழிந்தன.

தர்பாரிலிருந்த இரண ஸிங் எதிர் பாராதபடி, டில்லிக்குப் போகும்படி நேர்ந்தது. அவனுடன் அப்துல்கானும் போய்த் திரும்பும்படியாயிருந்தது. இவ் வமயத்தில் அப்துல்கானைத் தனியாக அழைத்துச் சென்று தான் உயர் பதவி யடைவதற்காக இரணஸிங் பிச்சையுங் கேட்கலாயினான். அப்துல்கானோ நிச்சயமாய் ஒரு முடிவுஞ் சொல்லாது, மறுநாள் டில்லிக்குப் போகவேண்டிய வழியைக் கூறி மழுப்பிவிட்டான். டில்லியின் நகர வைபவங்களைப் பார்க்கும் பொருட்டு இரண ஸிங்குடன் குவ்வர் தேவியும் வந்திருந்தாள். அப்துல்கானுக்கு இது செய்தி யறிய அதிக நேரம் பிடிக்கவில்லை. மறு தினமே அப்துல்கானை ஆங்கு இரண ஸிங் பார்க்க நேர்ந்தது. ஆயினும் அப்துல்கானே தானாகவே இரண ஸிங்கின் வீடு வந்து சேர்ந்தான். அவன் வருகையால் இரணஸிங் ஆனந்த பரவச மானதோடு, தன்னுடைய காரியமுங் கைகூடுமென நிச்சயித்து அவனை நன்கு வரவேற்றான். பின்னர் இருவரும் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். கடைசியில் அப்துல்கான் மெதுவாய்த் தன்னுடைய இச்சையை வெளியிட்டான். இது செய்தி கேட்ட இரண ஸிங்கிற்கு மனது மகிழ்ச்சி யடைந்து முகம் மலர்ந்த தெனினும் யாதொரு பதிலுங் கூறாது பொம்மை போன்று அசைவற்று நிற்க நேர்ந்தது. அப்துல்கானிடம் இரண ஸிங் தனது நிலையை மறைக்கவுமில்லை. அப்துல்கானும் வலைக்குள் பறவை சிக்கியதென நினைத்துத் தந்திரமாய் ஏமாற்றலானான். கடைசியாய் குவ்வர் தேவியை அப்துல்கானுக்குக் காணிக்கையாக வழங்க இரணஸிங் சம்மதித்து விட்டான். அப்துல்கானும் ஆரியர் மகளை, தான் அடையப்போகும் பாக்கியத்தைக் குறித்து அதிகச் சுவையை நுகர்ந்து நுகர்ந்து தன திருப்பிடஞ் சேர்ந்தான். இதைக் காட்டிலும் சந்தோஷமான செய்தி அவனுக்கு வேறு என்னவிருக்க முடியும்?



எத்தனையோ இராஜ புத்திரர்கள் தங்களுடைய குழந்தைகளையும் சகோதரிகளையும் இதற்கு முன்னர் மொகலாயர்களுக்குக் காணிக்கையாக வழங்கி யிருப்பதால் இரணஸிங், தான் செய்யப்போகும் விஷயத்தைப் பற்றிச் சிறிதுஞ் சிந்திக்கவில்லை. எள்ளளவுங் கவலைப் படவுமில்லை. ஆனால் தனது சகோதரியான குவ்வர் தேவி இதைப் பற்றி மகிழ்ச்சி யடைவாளா? மாட்டாளா? என்பது பற்றியே மிகக் குழப்ப மடைந்திருந்தான். இதைச் சகோதரி மறுப்பாளாயின், இராஜ்ய அதிகாரத்திற்கும், ஏன்? இங்கு நாம் வசிப்பதற்கும் அனர்த்தம் விளையக் கூடுமே எனவுங் கலங்கலானான். இவ்விதக் கவலையி லுளன்றபோது குவ்வர் தேவியும் ஆங்கு தோன்றினாள். தன் சகோதரரின் கலக்கத்தைக் கண்ணுற்று கவலைக்கு யாது காரணமென வினவினாள். இரண ஸிங்கோ ஒன்றையும் மறைக்காது எல்லா விஷயங்களையுங் கூறினான். இச்செய்திக்குப் பதிலுத்தரமாகத் தேவி,

"அப்துல்கானையா?"

"ஆம்."

"ஆம் என்று கூறுவதற்குத் தாங்கள் யார்? நம் தந்தையவர்கள் கூட உயிருட னில்லையா? தங்களுடைய அவமானமுள்ள கட்டளையை யொப்புக் கொள்ளும் ஆர்ய ஸ்திரீ நானல்ல. பாத நாட்டிற் பிறந்த பெண்மணிகள் தாங்கள் நினைத்தபடி அவ்வளவு மலிவாக இருக்க மாட்டார்கள். இனியும் இருக்க மாட்டார்கள். இதைத் தாங்கள் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். யான் சத்தியமாகக் கூறுகின்றேன்" எனக் கூறி அவ்விடத்தை விட்டு நகன்று விட்டாள். இரண ஸிங்கின் எண்ண மெல்லாம் சாம்பலாய் விட்டது. தேவியோ, தனக்கு வந்த இடையூறை நினைத்து அக்கினி வளர்க்க வேண்டித் தன் தந்தையிடஞ் சென்றாள்.

இச்செய்தி எவ்விதமாகவோ இரண ஸிங்கின் காதிற் கெட்டிவிட்டது. மறுபடி யாது நடக்கக் கூடும்? உடனே இரணஸிங் தேவியை ஓர் அறைக்குள் அடைத்தான். எவ்வளவோ சமாதானங்கள் கூறினான். ஆனால் அவ்வார்ய மகளோ ஹிமாசலம்போல் நிலையாக அசைவற்று ஒன்றும் பேசாது நின்றாள். அப்துல்கானுக்கோ அன்று சந்தோஷம் சரியாகவில்லை. ஆனால் ரணஸிங்கோ தன் வாக்குறுதிப்படி அன்றிரவிலேயே குவ்வர் தேவியை அப்துல்கானிடம் ஒப்புவிக்க வேண்டியவனாயிருந்தான். இச் சய்தியை யறிந்த தேவி தன் நிலையை நினைந்து அழ வாரம்பித்தாள். அவளின் அழுகையைப் பரமாத்மா தவிர வேறு யார் கேட்கப் போகின்றார்கள்·

கடைசியாய்க் குவ்வர் தேவி ஒரு வித முடிவிற்கு வந்துவிட்டாள். அவள் எதுவரை அழுதுகொண் டிருந்தாளோ, ஒரு பதிலுங் கூறாதிருந்

# புத்தக சாலை.

## திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

புத்தக சாலை யில்லாத சபை பெண்மணி இல்லாத இல்லம் போல்வதாய் ஒருவித சோபையு மிராது. ஏய்க்கின் என்ற ஒரு ஆங்கில ஆசிரியர் "நான் புத்தக சாலையி லிருக்கும் போதெல்லாம் அநேக நூற்றாண்டு களுக்கு முன் ஜீவித்திருந்த பண்டித சிகாமணிகளை எல்லாம்

---

தானோ அதுவரை இரணவிங் அங்கு வராதிருந்தான். பின்னர் ஓர் நாள் தனியாகச் சென்று குவ்வர் தேவிக்குச் சமாதானஞ் செய்தான். இத் தடவையில் தன்னுடைய சகோதரனின் வேண்டுகோளைக் குவ்வர் தேவி ஒப்புக்கொண்டு விட்டாள். தன் சகோதரி முன்னர் கூறிய வார்த்தை களையும் பின்னர் கூறிய வார்த்தைகளையும் கேள்விப்பட்ட இரண விங்கிற்கோ சிறிதும் சந்தோஷம் உதிக்கவில்லை. குவ்வர் தேவியோ தானாகவே அப்துல்கானுடைய வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள். அவள் தன் முக மூடியைக் கிழித் தெறிந்துவிட்டு அப்துல்கானிடம் இனிமை யாகப் பேசவாரம்பித்துவிட்டாள் இவ் வினிமையான வார்த்தைகளால் அப்துல்கானுக்குக் கர்வம் அதிகரிக்கவே விஷயங்களைத் தட்டுத் தடங்க லின்றிப் பேச வாரம்பித்தான். வார்த்தையோடு வார்த்தையாய் தேவி தன் சகோதரனின் வேண்டுகோளைப் பூர்த்தி செய்யும்படி கூறினாள். அவனும் அவ் வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய, தன் வேலைக்காரனை விரைவுடன் வெளியி லனுப்பினான்.

அவ் வேலைக்காரன் வெளியிற் செல்வதற்குள் அவசரமடைந்தாள்; தன்னுடைய இடுப்பிலிருந்த பிச்சுவாவை வெளியி லெடுத்து ஆவேசத் துடன அப்துல்கானை ஒரே குத்தினால் கீழே வீழ்த்தினாள். அவனுயிர் அவ்விடத்திலேயே முடிந்தது. பின்னர் தன் சகோதரனைக் காணும்படியாய் அருகிலுள்ள ஓர் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அங்கு சகோதரனான இரணவிங் வரவே அவனையும் ஒரே குத்தில் யம புரத்திற் கனுப்பி, தானும் தன் கையால் மார்பில் குத்திக்கொண்டு உயிர் நீத்துத் தன் சரிதையை நிலை நாட்டினாள்.

---



ஒருங்கே வரவழைத்து அவர்களோடு சம்பாஷிக்கும் ஆற்றல் எனக்கு இருக்கிறது என்ற ஆனந்த மேலீட்டினால், எனக்கு ஒரு வித பெருமை யுண்டாவது வழக்கம். இதைவிடப் பாக்கியம் வேறு யாது" என்று சொல்லி யிருக்கிறார். இத்தாலிய தேசத் துக் கவிகளுள் சிறந்தவராகிய பெட்ராக் என்பவர் புத்தகத்தின் அருமையைப் பின் வருமாறு விளக்கி யிருக்கிறார். "எனக்கு நண்பர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். அவர்களோடு சம்பா ஷிப்பதே எனக்குப் போதுமான செல்வமா யிருக்கிறது. அதனால் விளையும் பலனும் எனக்கு இருக்கும் களிப்பும் அளவிடக் கூடா தவை. அவர்கள் நிகழ் காலம், இறந்த காலம் ஆகிய இருவித காலங்களுக்கும் உரித்தானவர்கள். சகல விதமான தேசங்களிலு மிருந்து வந்தவர்களாயு மிருக்கிறார்கள. தருக்கம், வியாகரணம் முதலிய சாஸ்திரங்களில் அவர்களுக்கு இருக்கும் அறிவின் நுட் பத்தை யான் எவ்விதம் புகழ்ந் துரைப்பேன்! இவ்வித மேதாவி களாய் இருந்த போதிலும், அவர்களுடைய சிநேகத்தைச் சம்பா திப்பது மிகவும் சுலபமான காரியம். இதுமட்டு மல்ல, அவர்கள் எனக்கு வேண்டும் உதவிகளைச் செய்யப் பல நூற்றாண்டுகளாகக் காத்துக்கொண் டிருக்கிறார்கள். எனக்கு வேண்டும் போது அவர் களை வரவழைத்துக் கொள்வேன். வேண்டாத போது அவர்களை அனுப்பி விடுவேன். அவர்கள் என்னிடம் அனாவசியமான கேள் விகள் கேட்டுத் தொந்தரவு செய்கிற தில்லை. ஆனால் என்னுடைய கேள்விகளுக்கோ விடை உடனே கிடைக்கிறது. சிலரிடமிருந்து ஆதி காலத்தில் நடந்த சம்பவங்களை அறிந்து கொள்கிறேன். தத்துவார்த்த உண்மைகளை மிகவுந் தெளிவாய் உபதேசிக்கிறார்கள். இல்லற தர்மம் இன்ன தென்பதை அவர்க ளிடத்தில்தான் கற் றுணர வேண்டும். இம் மட்டோ! அந்திய காலம் கிட்டிய வளவில் மீகாமன், புயல் முதலியவைகளை மேற்கொண்டு யாதொரு தீங்கும் நேரிடாமல் எப்படி மரக் கலத்தைத் துறைமுகங்கொண்டு சேர்க் கிறானோ அதே விதமாக மரண பயம் முதலியவைகளை நீக்கி இறைவனுடைய திருவடி நிழலை அடையும்படிச் செய்வதும் அவர் களே. பொறையுடைமை, தைரியம், ஐம்பொறியடக்கல், தன் முயற்சி, கட்டுதல் என்று சொல்லப்பட்ட மிக அருமையான குணங் கள் அவர்களிடம் பழகினாலல்லாது நமக்கு ஒருபோதும் சித்தியா.

இரவியின் எதிரில் மூடுபனி நில்லாதது போல, அவர்களை அடுத்த மாத்திரத்தில் நமக்குத் தோன்றும் சந்தேகங்கள் யாவும் நிவர்த்தியாய் விடும்.”

நமக்குச் சரித்திர உணர்வும் சரித்திரப் பயிற்சியும் இல்லாததினால் முற்காலத்துப் பழைய நூல்கள் ஆதரிப்பாரின்றிச் சிதறுண்டு போயின. புத்தகங்களுள் ஒரு தேசத்தாருக்கு இருக்கும்; அநுகூலம் கணக்கிட முடியாது. முற்காலத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களில் அடிமை வியாபாரம் மிகுதியாய் நடந்து வந்தது. ஆப்ரிக்கா தேசத்து நாகரீக மடையாத ஜனங்களைப் பிடித்து வந்து சந்தையில் ஆடு மாடுகளைப் போல் விற்று விடுவது வழக்கம். அப்படி விற்கப்பட்ட அடிமைகளின் நிலையைக் கண்டு சகியாத ஒரு ஆங்கில தேசத்துப் பெண்மணி (Uncle Tom's Cabin) என்ற ஒரு புஸ்தகம் எழுதினாள். அதில் அடிமைகள் படும் அவஸ்தையை மிக விரிவாய் விளக்கி யிருக்கிறாள். இந்தப் புத்தகம் வெளிவந்த சில வருட காலங்களுக் கெல்லாம் அடிமை வியாபாரம் செய்பவர்களைத் தண்டிக்கும் பொருட்டு ஒரு சட்டம் எற்படுத்தப் பட்டது. ஜனங்களுடைய அஞ்ஞான இருளைப் போக்குவதற்குப் புத்தகங்கள் ஆயிரங் கோடி சூரியர்கள்போலிருக்கின்றன.

ஒரு புத்தக சாலையில் பல தரத்துப் புஸ்தகங்கள் ஏராளமாய் நிறைந்திருக்கும். லண்டன், பாரிஸ் முதலான இடங்களிலுள்ள புத்தக சாலைகளில் லக்ஷக் கணக்கான புத்தகங்கள் இருக்கின்றனவாம். ஒரு மனிதன் சராசரி 600 பக்கங்கள் தினம் வாசித்தாலும் அவன் தன் வாழ் நாட்களுள் இரண்டு அலமாரிகளிலுள்ள புத்தகங்களைத்தான் செய்வையாய் வாசித்து முடிக்க முடியும் என்று கணிக்கப்பட் டிருக்கிறது. ஆகவே, இவ்வளவு மணி நேரத்தில் இவ்வளவு பக்கம் வாசித்து விட்டேன் என்று சந்தோஷப்பட்டு இருந்தால் மட்டும் போதாது. தனக்கு எது வேண்டுமோ, தன்னால் எது சாத்யப்படுமோ அதை வாசிக்கத் தொடங்க வேண்டும். முற்காலத்தில் புத்தகங்கள் கிடைப்பது அரிது. அரிதா யிருந்த போதிலும் கிடைத்த இரண்டு புத்தகங்களை வாசித்தே நமது முன்னோர்கள் சிறந்த மேதாவிகளாய் விளங்கிக்கொண் டிருந்தார்கள். எந்தப் புத்தகத்தை வாசித்தாலும் பிரயோஜனப் படக்கூடிய



விதமா யிருக்க வேண்டும். தற்காலத்தில் புத்தகங்கள் சொற்ப விலைக்கு விற்கப்படுகின்றன. கிடைத்தவைகளை யெல்லாம் வாசிக்க வேண்டிய அவசியமில்லை. சிறந்த புத்தகங்களையே வாசிக்க வேண்டும். அவைகளிற்றான் உண்மையான அறிவும் சிறந்த ஞானமும் அகப்படும். பொதுவாய்ப் பழமையான புத்தகங்களையே வாசிக்க வேண்டும். ஏனெனில், அவைகள் சிறந்த தென்பதற்கையமில்லை. பொது ஜன அபிப்பிராயம் என்ற காற்று எப்போதும் வீசிக் கொண்டே யிருக்கிறது. பதர்களா யிருக்கும் பட்சத்தில் தோன்றிய போதே அடித்துக்கொண்டு போகப்பட் டிருக்கும். உள்ளீடு இருந்தாலன்றி அவ்வளவு காலம் நிலைத்திருக்க மாட்டாது.

இது விஷயமாக மூன்று விதிகளை நாம் அனுசரிக்க வேண்டும்.

(1) நாம் வாசிக்க வேண்டிய புத்தகங்கள் வெளி வந்து சுமார் ஒரு வருஷகாலமா யிருக்க வேண்டும்.

(2) பலராலும் அங்கீகரிக்கப் பட்டவையாயு மிருக்க வேண்டும்.

(3) நம்முடைய மனப் பாங்கிற்கும் ஏற்றவைகளா யிருக்க வேண்டும்.

“கர்னீஜி” என்னுமோர் கோடீஸ்வரப் பிரபு அபர்டீன் என்னும் நகரத்தில் ஒரு புத்தக சாலை ஏற்படுத்துவதற்காக லக்ஷக் கணக்காய்ப் பொருளுதவி செய்திருக்கிறார். புத்தக சாலையிலிருந்து வாசிப்பவர்களுக்கு ஒருவித சிரமமும் இருக்கக் கூடாதென்று உத்தேசித்து வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார். இதைப் போன்ற புத்தக சாலைகள் எத்தனையோ மேல் நாட்டில் நலத்தைச் செய்துகொண் டிருக்கின்றன. ஆகையால் இந் நாட்டில் நகரங்களிலும் கிராமங்களிலும் புஸ்தக சாலைகள் ஏற்படுத்தி, பொது மக்களின் அறிவை விருத்தி செய்ய நாம் முன்வரல் வேண்டும். கல்விச் சாலைகள் ஏற்படுத்துவது போன்று, புஸ்தக சாலைகளையும் தேச மெங்கும் கணக்கற்று ஸ்தாபிக்க வேண்டும். பாஷாபிமானிகளும் தேசாபிமானிகளும் இதில் அதிக கவனம் செலுத்துவார்களாக.

---

# அமெரிக்கரின் சுதந்திரப் பிரகடனம்.

(Declaration of Independence.)

திரு. K. கணேசன் அவர்கள், B. A.

(கி. பி. 1776-ம் வருடத்தில் அமெரிக்கக் குடியேற்ற நாட்டார்கள், இங்கிலாந்தின் ஆதிக்கத்தி னின்றும் விடுபடச் சுதந்திர யுத்தம் தொடங்கு முன் வெளியிட்டது.)

மானிட வாழ்க்கையில் ஓர் நாட்டார் பிற நாட்டாருடன் இணைக்கப்பட்ட ராஜீய பந்தங்களை நீக்கி, உலகத்தில் ஏனைய நாடுகளையொப்ப, இயற்கையினாலும், இயற்கைத் தலைவனாகிய ஈசனாலும் அளிக்கப்படும் தனித்த சமத்வ நிலைமையை அடைய வேண்டிய அவசியம் ஏற்படும்போது, இப்படி விலகுவதற்குள்ள காரணங்களை, மானிட வர்க்கத்தின் பொது ஜன அபிப்பிராயத்திற்குத் தெரிவிப்பது கடமையாகும்.

மானிடர்கள் சமத்வமாகவே சிருஷ்டிக்கப்படுகிறார்க ளென்பதும், சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுளால், அவர்களுக்கு, பிறர் அபகரிக்கக் கூடாத சில உரிமைகள் அளிக்கப்பட் டிருக்கின்றன வென்பதும் இவ் வுரிமைகளில், வாழ்வு, சுதந்திரம், வாழ்க்கையின் சுகத்தை யெய்துதல் ஆகிய மூன்றும் அடங்கி யிருக்கின்றன வென்பதும், தெள்ளென விளங்கக்கூடிய உண்மைகளென்று நாங்கள் கருதுகிறோம். இவ் வுரிமைகளை நிலை நிறுத்துவதற்காகவே மானிடர்களிடையில் ஆளப்படுவோரின் சம்மதத்தை யொட்டி, நியாயமான அதிகாரங்களை யுடைய அரசாங்கங்கள் ஏற்படுத்தப் படுகின்றன வென்றும், எந்த ஆட்சி முறையாவது இந்த நோக்கங்களுக்குக் கெடுதி செய்யக்கூடியதா யிருக்குமானால் ஜனங்களுக்கு அதை மாற்றவோ அல்லது நீக்கவோ உரிமை யுண்டென்றும், பின்னால் தங்களது வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் தகுதியான தத்துவங்களை அடிப்படையாய்க் கொண்ட, அதற்குகந்த அதிகாரங்களோடு கூடிய, புதியதோராட்சியை நிலை நாட்ட உரிமை யுண்டென்றும் நம்புகிறோம். நெடு நாட்களாய் நிலவி யிருக்கும் அரசாங்கங்களைச், சிறிய, நிலையற்ற காரணங்களுக்காக மாற்றக் கூடா தென்பது புத்திசாலித்தனமான கொள்கைதான். இது காரணம் பற்றியே, அனுபவத்தில், மானிடர்கள் தாங்கக்கூடிய குறைகளைத் தாங்கிக்கொண்டு தங்களுக்குப் பழக்கமான முறைகளை மாற்றிக் கொள்ளாமலே யிருக்கிறார்கள். ஆனால், நெடு நாட்களாக, ஒரே நோக்கத்துடன், அவர்களை முழு



ஏதேச்சாதிகாரத்திற்குள் கட்டுப்படுத்துமாறு, சட்டப் பித்தலாட்டங்களும், கொடுங்கோன்மைகளும் நடத்தப்படுமாயின், அம்மாதிரி அரசாங்கத்தை நீக்கிவிட்டு, தங்களது வாழ்வுக் குகந்த பாதுகாப்புக்களை ஏற்படுத்திக் கொள்வது அவர்களது உரிமையும், கடமையுமாகும். இங்கிலாந்தைத் தற்சமயம் ஆண்டுவரும் அரசரது சரித்திரத்தில், அடிக்கடி யிழைக்கப்படும் கொடுமைகளில், உரிமை அபகரிப்பும், இன்னும் இந் நாடுகளை முழுக் கொடுங் கோன்மைக் குட்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட ஏனைய செயல்களும் இருப்பதைக் காணலாம். இதை நிரூபிக்க, உண்மை யுகக்கும் உலகத்தாருக்குக் கீழ்க் கண்ட விஷயங்களைச் சொல்வ தவசியம்:—

பொதுநலத்திற் கவசியமான நல்ல சட்டங்களை யனுமதிக்க மறுத்துவிட்டார்.

தனது சம்மதம் பெறுவதற்கு நிறுத்தி வைக்காமல், மிக முக்கியமான சட்டங்களை, தனது கவர்னர்கள் இயற்றக் கூடாதெனக் கட்டளை யிட்டார். அவ்வாறு நிறுத்தி வைத்தால், அவற்றைக் கவனிப்பதில் முற்றிலும் அசிரத்தை காட்டினார்.

சட்ட சபைகளில் தங்களுக்குள்ள பிரதிநிதித்வ உரிமைகளை ஜனங்கள் விட்டுக் கொடுத்தாலன்றி, ஜனங்களுக்கு வேண்டிய சட்டங்களை நிறைவேற்ற மறுத்துவிட்டார். இந்த உரிமையோ, கொடுங்கோலர் கண்டு அஞ்சக்கூடிய, பொது ஜனங்களது மேலான உரிமையாகும்.

பொது தஸ்தாவேஜிகளை வைக்கக்கூடிய விடத்திற்கு வெகு தூரத்தில், முன்பின் னறியாத சௌகரிய மற்ற விடங்களில் சட்ட சபைகளைக் கூடச் செய்தார். தன் னிச்சைக்குப் பணியுமாறு, ஜனப் பிரதிநிதிகளை சளைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும்

ஜனங்களி னுரிமைகளை எதிர்க்கும் அவரது எதேச்சாதிகாரத்தை ஆண்மைத் தனத்துடன் திடங்கொண் டெதிர்த்த ஜனப் பிரதிநிதி சபைகளை அடிக்கடி கலைத்திருக்கிறார்.

இம்மாதிரி கலைத்த பிறகு, நெடுங் காலம் வேறு அங்கத்தினர்களைத் தேர்ந் தெடுக்கவும் மறுத்துவிட்டார். சட்ட மியற்றும் அதிகாரம், அழியாத் தன்மை யுடைய தாகையால், இது காரணம் பற்றி, அது பொது ஜனங்கள் கையிலேயே வந்துவிட்டது. இச் செய்கையின் பயனாக, ஆட்சி முறையானது, பிற நாட்டார் படையெடுப்புக்கும், உள் நாட்டுக் கலகத்துக்கும் ஆளாய்விட்டது.

இந் நாட்டின் ஜனத் தொகை பெருகா வண்ணம், அந்நியர்கள் இந் நாட்டினராய் மாறுவதற்குள்ள சட்டங்களைத் தடுத்தும், பிற நாட்டார் இங்குக் குடியேறுவதற்குச் சாதகமா யுள்ள சட்டங்களைச் செய்ய மறுத்தும், புதிய நிலங்களைத் தர்காஸ்தெடுப்பதில் கட்டுத் திட்டங்களையும் உண்டாக்கினார்.

நியாயாதிகாரத்தை நிலை நாட்டக் கூடிய சட்டங்களை யனுமதிக்க மறுத்து, நியாயம் வழங்குவதைத் தடுத்துவிட்டார்.

நியாயாதிபதிகளின் உத்தியோக கால வரையறையும், அவர்களது சம்பள பட்டுவாடாக்களும் தனக் கடங்கினவைகளாகச் செய்து கொண்டார்.

ஏராளமாகப் புதிய உத்தியோகங்களை யுண்டாக்கிக் கூட்டங் கூட்டமாய் உத்தியோகஸ்தர்களை யிங்கனுப்பி எங்களது ஜனங்களைத் துன்புறுத்தி, அவர்களது சொத்தை விழுங்கச் செய்தார்.

எங்களது சட்ட சபைகளின் சம்மத மின்றி சமாதான காலங் களில் ராணுவப் படைகளை எங்களிடை நிலைக்க வைத்தார்.

ஸிவில் அதிகாரத்தி னின்றும் ராணுவ அதிகாரத்தை விடுவித்து அதற்கு மேலான பதவியைக் கொடுத்தார்.

எங்களது ராஜ்யத் திட்டத்திற் கன்னியமானதும், எங்களது சட்டங்களால் அங்கீகரிக்கப் படாததுமான ஓர் ஆட்சி முறைக்குள் எங்களைக் கட்டுப்படுத்தும் வண்ணம், பிறருடன் தானும் சேர்ந்து கொண்டு (கீழ்க் கண்ட) போலிச் சட்ட அமைப்புகளுக்கு அங்கீகாரம் கொடுத்தார்:—

ஆயுத பாணிகளாகிய அநேகம் படைகளை எங்களிடை நிலை நிறுத்தவும்

இந் நாட்டுக் குடிகளிடையில் அவர்கள் (படைகள்) செய்யும் கொலைத் தொழில்களுக்குப் போலி விசாரணை நடத்தி அவர்களைத் தண்டனையி லிருந்து தப்புவிக்கவும்

உலகத்தின் ஏனைய பாகங்களோடு எங்களது வியாபாரத்தைத் தடுக்கவும்

ஜூரிகள் மூலம் விசாரணை நடக்கும் உரிமையை அநேக வியாச்சி யங்களில் ரத்துச் செய்யவும்



குற்றஞ் செய்ததாகப் போலிக் காரணஞ் சொல்லி எங்களைக் கடல்களுக் கப்பால் நாடு கடத்தவும்

அண்டையி லுள்ளதோர் ராஜதானியில் சுதந்திரமுள்ள ஆங்கி லச் சட்ட முறையை நீக்கி, எதேச்சாதிகாரத்தை நிலை நாட்டி, அதன் எல்லைகளைப் பெருக்கி, இந் நாடுகளிலும் அம் மாதிரியான எதேச்சாதிகாரத்தை நிலை நாட்டத்தக்க உதாரணமாயும், ஆயுதமாயும் ஏற்படுத்தவும்

எங்களது உரிமைப் பத்திரங்களை யபகரித்து, அருமையான எங்களது சட்டங்களை நீக்கி, எங்களது ஆட்சி யுரிமைகளை முற்றிலும் மாற்றவும்

எங்களது சட்ட சபைகளைத் தற்காலிகமாய் நிறுத்திச் சட்ட மியற்றும் உரிமைக ளெல்லாவற்றையும் அவர்க ளபகரிக்கவும்

தனது பாதுகாப்பி னின்றும் நாங்கள் விடுபட்டதாகச் சொல்லி எங்களோடு யுத்தம் செய்யவும் தொடங்கி விட்டதால், அவர் இங்கு, தனது ஆட்சி யுரிமையை ராஜிநாமாச் செய்துவிட்டார்.

எங்களது கடல்களில் கொள்ளை யிட்டுக் கடற்கரைகளைப் பாழ் படுத்தி, எங்கள் ஜனங்களையும் மாய்த்தார்.

ஏற்கெனவே ஆரம்பித்த, கொலை, கொள்ளை, கொடுங்கோன்மை யாகிய காரியங்களை-நாகரீகம் படைத்ததோர் தேசத்தின் தலைவன் செய்யத் தகாத, காட்டுமிராண்டிகள் கூடச் செய்யத் துணியாத கொடுஞ் செயல்களைச் செய்து முடிக்குமாறு, தற்சமயம் அன்னியர்க ளடங்கிய ஏராளமான சைனியங்களை அனுப்பிக்கொண் டிருக்கிறார்.

பெருங் கடல்களில் கைது செய்யப்பட்ட நம் சகோதரர்களைத், தங்கள் தாய் நாட்டிற் கெதிரிடையாக ஆயுதந் தாங்கச் செய்து, தங்களது நண்பர்கள், சகோதரர்களுக்குக் கொலையாளிக ளாக்கி, அவர்களாலேயே மாய்க்கப்படவுஞ் செய்கிறார்.

எங்களிடையே உள் நாட்டுக் கலகங்களை யுண்டாக்கிய தன்றி, எல்லைப்புறங்களில் வசிக்கும் எங்கள் நாட்டவர் மேல், வயது, ஆண் பெண் பேதம், நிலைமை இவற்றை யொன்றையும் கவனியாது, கேவலம் நாசத்தையே நோக்கமா யுடைய யுத்த முறையைக் கை யாளும் இந்தியர்களை (சிகப்பு இந்தியர்) ஏவ முயற்சிக்கிறார்.

இவ் வகைக் கொடுமைகள் நிகழுந் தருணங்களி லெல்லாம், மிக்க வணக்கத்துடன், நியாயம் புரியுமாறு, விண்ணப்பம் செய்து கொண்டோம். அடிக்கடி செய்த விண்ணப்பங்களுக் கெல்லாம்

அடிக்கடி யிழைக்கப்படும் இன்னல்களை பதிலாயின. ஒவ்வொரு செய்கையிலும் கொடுங்கோலன் என்று பெயரெடுக்கக் கூடிய ஓர் அரசன், சுதந்திர முள்ளதோர் ஜாதியை ஆள்வதற்கு லாயக்கில்லாவனாகிறான்.

எங்கள் பிரிட்டிஷ் சகோதரர்களையும் நாங்கள் கவனியாமலில்லை. அவர்களது சட்ட சபைகள் நியாயமின்றி எங்கள் மேல் ஆதிக்கம் செலுத்த முற்படும் முயற்சிகளைப் பற்றி அவர்களுக்கு நாங்க ளடிக்கடி எச்சரிக்கை செய்திருக்கிறோம். நாங்கள் வெளியேறி இங்குக் குடி புகுந்த காரணங்களையும் அவர்களுக்கு ஞாபக மூட்டினோம். அவர்க ளது ஜாதிக் கியற்கையான நியாய புத்தியையும், பெருந் தன்மையையும் குறித்து மன்றாடினோம். நம்மிடையி லுள்ள பந்துத்வத்தின் பேரால் இம்மாதிரிக் கொடுமைகளை மறுக்கும்படி வேண்டிக்கொண்டோம். இம் மாதிரியான செய்கைகளால் நம்மிடையி லுள்ள எல்லாப் பந்தங்களும் நீங்கி போக்கு வரத்துக்கூட நின்றுவிடுமென்று சொன்னோம். ரத்த ஸம்பந்தமும், நியாய உணர்ச்சியும் மேலிட்ட இவ் வாதங்களுக்கு அவர்களும் செவி சாய்க்கவில்லை. ஆகவே, பிரியவேண்டிய அவசியத்திற் குட்பட்டு அவர்களையும் ஏனைய மானிடர்களைப்போல், யுத்தத்தில் சத்துருக்களாகவும், ஸமாதானத்தில் நண்பர்களாகவும் கொள்ள நேரிடுகிறது.

ஆகவே, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள், தேச மகா சபையில் கூடி, எங்க ளெண்ணங்களின் நேர்மைக்கு உலகின் உத்தம நீதிபதியாகிய பரம்பொருளைச் சாட்சி வைத்து, இந் நாட்டின் நன்மைகளின் சார்பாக, அவர்களது ஆக்ஞையின்பேரில், பய பக்தியுடன் கீழ்க் கண்டவாறு அறிவிக்கிறோம்:—

ஒன்றுபட்ட இந்தக் குடியேற்ற நாடுகள் சுதந்திரமும், சுயேச்சையும் உடையவைகள். அவ்வாறிருக்க அவற்றிற் குரிமையுண்டு. பிரிட்டிஷ் அரசுக்கு யாதொரு வகையிலும் இவை கட்டுப்பட்டவைக ளல்ல கிரேட் பிரிட்டனின் அரசாங்கத்தோடு இதற்குள்ள எல்லா ராஜீய பந்தங்களும் விடுபட்டுப் போயின. சுதந்திரமும், சுயேட்சையு முள்ள நாடுக ளாதலால், யுத்தம் துவக்கவும், சமாதானம் செய்யவும், வியாபாரம் நடத்தவும், இன்னும் சுதந்திர நாடுகள் செய்யக் கூடிய ஏனைய காரியங்களையும் செய்ய ஸர்வ அதிகாரமுண்டு. இந்தப் பிரகடனத்தை யாதரிப்பதற்காக ஸர்வேஸ்வரனின் ஆதரவில் நம்பிக்கை வைத்து, நாங்கள் ஒருவருக் கொருவர், உயிரையும் உடைமையையும், புனிதமான மானத்தையும் பிரதிக்ஞை செய்து கொடுக்கிறோம்.

மொழிபெயர்ப்பு



# மிருக ஜாதியும் பகுத்தறிவும்.

திரு. ஜி. வாசுதேவன் அவர்கள், M. A. (Hons.)

சாதாரண விலங்காயினும், நாம் மிருக ஜாதிகளில் கவனிக்க வேண்டிய குணுதிசயங்கள் சிற்சில இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை விலங்கின் தன்மைகள். இதுகாறும் மிருக வர்க்கத்தின் தன்மைகளைப் படித்தும் பழகி யாராய்ந்தும் உள்ள சாஸ்திர நிபுணர்கள், விலங்குகள், தாம் செய்யும் காரியங்கள் யாவற்றையும் சாதாரணமாக அவைகள் சிறு வயதிலிருந்து எவ்வாறு பழகி வந்தனவோ, அவ்வாறும், இயற்கையாக மனதில் எவ்வாறு தோன்றுகின்றதோ அவ்வாறும் செய்து வருகின்றன என்றெண்ணி யிருந்தனர். உதாரணமாக தேனீக்கள் தம் கூட்டை இயற்கையாகவே கட்டுகின்றதையும், சில பக்ஷிகள், தம்மால் அடைகாத்து குஞ்சு பொரிக்க முடியாத முட்டைகளை மற்ற பக்ஷிகளின் கூடுகளில் வைத்துச் செல்வதையும், நாம் இயற்கைத் தன்மையென்று சொல்லாம். இவ்வாறு இயற்கையாகவே செய்யுங் காரியங்களைத் தவிர. புத்தி வன்மையாலும், பகுத்தறிவுடனும் செய்யுங் காரியங்கள், மிருக ஜாதியில் அநேகம்.

பிராணிகளில் பல வகை யுண்டு. மனிதர்களிடம் பழகி வரும் வகையொன்று. மற்றொன்று மனிதர்களுடன் கூடியே வசிக்காது. பொதுவாக எல்லா வகை விலங்குகளிடத்திலும் பகுத்தறிவும் புலப்படுகின்றது. (நாய்கள், குரங்குகள், கீழ்த் தரமான பாம்புகள், மீன்கள் முதலிய [illegible] சிற்சில சமாச்சாரங்களைப் பகுத்தறிவுடன் ஆலோசித்துச் செய்கின்றதை நாம் கவனிக்கக் கூடும். பிராணிகளைப் பற்றிய நூல்வல்லார்களில் டார்வின் (Darwin)

ஓர் பிரபல சாஸ்திர நிபுணர். அவர் எழுதிய புஸ்தகங்களில் முக்கியமானது "The Descent of man" அல்லது மனிதன் தோன்றிய மார்க்கம். அப் புத்தகத்தில் பகுத்தறிவைப் பற்றிச் சொல்லும் போது, அவர் பார்த்த மீனொன்று தன் கண்ணாடிக் கூட்டிலிருந்து, பக்கத்திலிருந்த கூட்டிலுள்ள மீன்களை யெல்லாம் கொல்ல யத்தனித்துத் தாவிய போது, கண்ணாடியில் அடிக்கடி மோதிக் கொள்ளவே, பயனற்றுப் போனமை கண்டு வாளா யிருந்து விட்டது. மூன்று மாதங்களுக்குப் பின் அக் கண்ணாடி மூடியை யெடுத்து விட்ட பிறகும் மற்ற மீன்களிருக்கும் பக்கமாகச் செல்வதை அம் மீன் நிறுத்தி விட்டது. அது போலவே ஓர் பாம்பு வேலி வழியாக தலையை விட்டு தவளைகளைப் பிடித்துத் தின்ற பிறகு, தலையை மீண்டும் எடுக்க முடியாமல் இரையைக் கக்கும்படி நேரிடுதலைக் கண்டு, மூன்றாந்தரம் சாமர்த்தியமாகத் தவளையின் காலைப் பற்றி தன் பொந்திட மிழுத்துக் கொண்டு தின்ன ஆரம்பித்தது. இவை பகுத்தறிவா லல்லவா?

டார்வினைப் போல ரேங்கர் (Rengger) என்பவரும் ஒரு ஜெர்மனிய சாஸ்திர நிபுணர். இவர் அநேக குரங்குகளை வளர்த்து அவைகளின் தன்மைகளைப் பற்றி புஸ்தகங்கள் எழுதி யுள்ளார். அக் குரங்குகளுக்கு முட்டைகளைக் கொடுக்கும்போ தெல்லாம் அக் குரங்குகள், அம் முட்டைகளை உடைக்க வழி தெரியாமல் கல்லிலடித்து நாசமாக்கின. ஆனால் இரண்டொரு நாள் இவ்வாறு முட்டைகள் வீணாதலைக் கண்ட அக் குரங்குகள், முட்டைகளின் மேல் பாகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக உடைத்துக் குடிக்க ஆரய்பித்தன. இன்னும் சர்க்கரை யுருண்டைகளில் வண்டுகளை வைத்துக் கொடுக்கவே, வண்டுகளால் கொட்டுண்டமையால் அவைகளைத் திறக்கப் பயந்து காதில் வைத்து குரங்குகள் முதலில் ஆட்டிப் பார்த்தன. தென்னாப்பிரிக்காவில் ராணுவத் தலைவனா யிருந்த ஸ்மித் (Sir Andrew Smith) என்பவர் தான் வளர்த்து வந்த பபூன் குரங்கைத் தன் சேவகன் சேஷ்டை செய்து வரவும், ஒரு நாள் அக் குரங்கு அச் சேஷ்டைகளைப் பொறுக்க முடியாமல், மண்ணைத் தோண்டி, தண்ணீரை யூற்றி, அதனால்



அவனை அக் குரங்கு அடிக்க ஆரம்பித்ததைக் கவனித்து எழுதி யிருக்கிறார்.

பெண் குரங்குகள் சிறு குட்டிகளின் மீது உட்காரும் ஈக்களை ஓட்டுகின்றன. அவைகளில் ஆண் பெண் இரண்டும் அநாதையான குரங்குக் குட்டிகளை யெடுத்து வளர்ப்பதும் குரங்குகளின் சாதாரண குணம். பிரஹம் (Brehm) என்ற நிபுணர் வளர்த்து வந்த குரங்கானது தன்னுடன் விளையாடிக் கொண்டிருந்த பூனைக் குட்டியின் நகங்களை அபாயமென்று கடித்து விட்டதை ஆச்சர்யத்துடன் எழுதி யிருக்கிறார்.

இவ்விதமான புத்தி சாதுர்யக் குணத்தையும் தவிர, மற்று மநேக குணங்கள், மிருகங்களுக்கு மனிதனைப் போல உண்டு. டார்வின், நாய்கள், பூனைகள், பறவைகள், குரங்குகள் முதலியவை கனவு காண்பதாகவும், அப்போது அவை ஒரு புது மாதிரியாகக் கத்துவதாகவும், அக் கனவுகள் அப் பிராணிகள் யோசனை செய்கிறதா லுண்டாகிறதாகவும் சொல்லுகிறார். இதற்கு உதாரணமாக ஹச்சிஸன் (Colonel Hutchison) என்பவர் தான் வளர்த்து வந்த வேட்டை நாய், தண்ணீரில் விழுந்த இரண்டு வாத்துக்களை, இரண்டையும் ஒரே சமயத்தில் இழுத்து வர முடியாமல், ஒன்றைக் கொன்று விட்டு மற்றொன்றை மாத்திரம் உயிருடன் காப்பாற்றிய பின்பு, செத்த வாத்தைக் கொண்டு வரச் சென்றதாகவும் எழுதி யிருக்கிறார்.

மிருகங்களில் மிகுதியான புத்தி தீக்ஷண்ய முடையவை யானைகளென்று நாம் சிறு வயதிலேயே, யானையும் தையல்காரனும் என்று கதையில் படித்திருக்கிறோம். பழகிய யானைகள், காட்டு யானைகளைப் பிடிப்பதற்குச் செல்லும் போது, நாம் இன்ன விஷயத்திற்காகப் போகிறோமென்பதும் அவைகளுக்குத் தெரியும். இன்னும் இந்திய நாட்டு யானைகள், மரக் கிளைகளை யொடித்து, தம் மேலுட்காரும் ஈக்களை ஓட்டிக் கொள்ளுகின்றன. மிருகங்களுக்குத் தம்முடைய சாமானென்றும், தம்முடையதல்லவென்றும் தெரிந்து கொள்ளுகின்றன. நாய்கள் தம் எலும்புகளை

யும், பக்ஷிகள் தம் கூடுகளையும் காப்பாற்றிக் கொள்ளுகின்றன. லண்டன் நகரத்திலுள்ள உயிர் காட்சி சாலையில் குரங்கொன்று தன் பல் வலுவற்றிருந்தமையால் ஒரு கல்லைக் கொண்டு தனக்குக் கிடைக்கும் கொட்டைகளை யுடைத்துத் தின்று விட்டு, அக் கல்லை மறு நாள் உபயோகிப்பதற்காக, வைக்கோலில் ஒளித்து வைத்து வந்ததாம். பபூன் குரங்குகள், சூர்யனுடைய உஷ்ணம் பொறுக்காமல் கோரைப் பாய்களைத் தலையில் கவிழ்த்துக் கொள்ளுமாம்.

மனிதன், தனக்குத் தோன்றும் எண்ணங்களை மற்றவனுக்குப் பேசித் தெரிவித்துக் கொள்ளுகிறான். இது போல மிருகங்களும் தமக்குதிக்கும் எண்ணங்களைப் பலவித நாதங்களால் தெரிவித்துக் கொள்ளுகின்றன. நாய்கள் பலவிதமாகக் குலைத்தும், குரங்குகள், முகத்தின் மாறுதல்களாலும் சப்பத்தாலும், அவைகள் நினைக்கும் சமாச்சாரங்களை யறிவிக்கின்றன. டார்வினும், பெல்லும் (Alexander Graham Bell) நாய்கள் பேசுவதை 10 மாதம் முதல் 12 மாதம் வரையுள்ள குழந்தைகள் பேசுவதற்குச் சமானமாகச் சொல்லுகிறார்கள்.

சார்லஸ் காட்டர் (Charles Cotter) தான் வளர்த்த (Colobus) குரங்குகள் பேசிக்கொள்வதைக் கவனித்து கூண்டுகளுக்கு அகப்படாமல் தாவிய குரங்குகள் புதிய குரங்குகளுக்குச் சப்தத்தால் அம் மார்க்கத்தைத் தெரிவித்துக் கொள்வதையும் பார்த்துக் குரங்குகள் பேசுந் தன்மை வாய்ந்தன என்று எழுதி யிருக்கிறார்.

இவைகள் நாம் ஆலோசிக்கும் போது மிருகங்களினும் மனிதனுக்கு அமைந்தாற் போல இயற்கை சுபாவங்களும், பழக்க நடவடிக்கைகளும், ஆலோசனையும், புத்திகூர்மையும், பகுத்தறிவும், மற்ற குணாதிசயங்களும் அமைந்திருப்பதைக் காணலாம். இவை யாவும் ஒன்றுகூடி வரும்பொழுது மனிதன் பூர்ண அறிவை யடைகின்றான். இதனால் மனிதன் ஒரு காலத்தில் விலங்கைப் போல் வசித்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. பகுத்தறிவு மனித ஜாதிக்கும், மிருக ஜாதிக்கும் இன்றியமையாததாகும்.

---


# "பாரதி"

## ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

| மாலை 3 | பிரஜோற்பத்தி ஆனி-ஆடி 1931-ஹு ஜூலை | மணி 7 |
| --- | --- | --- |


## வாய் வேதாந்தம்

அல்லது

## பிரலங்கமாரி.

திரு. வே. இராமச்சந்திரன் அவர்கள்.

சாம்பசிவ அய்யருக்குச் சுமார் வயது ஐம்பதிருக்கலாம். சிவந்த பளபளப்பான மேனியும், பறங்கிப்பழம் போன்ற பெருத்த தொப்பையும், சற்றே முன்புறம் குனிந்த பார்வையும், வளைந்த முதுகும், கழுகைப் போன்ற கூரிய கண்களின் வஞ்சகத் தன்மையும், கொடுமையும் வெளியில் தெரியாவாறு அதற்கேற்ற ஒரு பழமையான மூக்குக் கண்ணாடியும் அணிந்தவராய் காணப்படுவார். இரண்டு குமாரத்திகளும், இரு புத்திரர்களும் அவருக்குண்டு. பூர்வம் அவர், ஆப்காரி இலாகாவில் இன்ஸ்பெக்டர் வேலை பார்த்தவர். அக்கால், அவர் வலை வீசி வாரிய பெருஞ் செல்வத்தை கங்கு கரையின்றி ஏராளமாகச் செலவிட்டு, பெரும் தொகைகளை வாரிக் கொடுத்து, தம் இரு பெரிய பெண்களுக் கேற்ற வரன்களை வாங்கி யிருந்தார். தம் இரு பெண்களின் இவ்வகை விவாகத்தால் அவருடைய செல்வத்தின் முக்கால் பாகங் கரைந்துவிட்டது. உத்தியோக காலத்தில், சாக்குகளில் நிரப்பிய செல்வத்தை, இவர் பேராசையால், சரியானபடி,

198530

தமக்குக் கீழ்ப்பட்ட சில்லரை தேவதைகளுக்குச் சரியானபடி பங்கு போடாதபடியால், அவைகள் சமயம் பார்த்திருந்து, மொட்டை மனுக்கள் எழுதிப் போட்டு, ஐயரின் உத்தியோகத்துக்கு உலை வைக்கத் தொடங்கின. இதனால் சாம்பசிவ ஐயர், மிகுதியும் செல விட்டு, தம்மைக் காப்பாற்றிக்கொண்டு, கௌரவமாக வேலையிலிருந்து தாமே விலகி, உபகாரச் சம்பளம் பெற்றார். இவ்விதமாக அவர் சொந்தச் சம்பாத்தியத்தில் சம்பாதித்தவை யெல்லாம் தொலைந்தன. எஞ்சி யிருந்தது, சாம்பசிவ ஐயருக்கும், அவரது தமயனாரான வெங்கிடாசல அய்யருக்கும் சொந்தமான, பூர்வீக வீடொன்றே. தமது டாம்பீக வாழ்க்கைக்கு ஒரு முடிவு ஏற்பட்டதைக் கண்ட ஐயர், இனி தனக்கு சென்னை வாழ்வு பொருந்ாதென்று கண்டு, தமது பூர்வீக சொத்திருந்த பச்சைக்குப்பத்திற்கு வந்து சேர்ந்தார். அய்யர் தமது நாற்பதாவது வயதிலேயே தம் மனைவியை இழந்தார். அவருடைய மூத்த குமாரன், சென்னையில் ஏதோ வொரு கம்பெனியில் நாற்பது ரூபாய் சம்பளத்திற்கு வேலையிலமர்ந் திருந்தான். அவனுக்கு வயது சுமார் இருபத்தைந்துக்கு மேலிருக்கும். கம்பீரமான தோற்றமும், சிவந்த மேனியும் உடையவன் பார்வைக்கு லக்ஷணமாய் இருந்தனனாயினும், அவனது மனதில் ஏதோ ஒரு தீராக் கவலை குடிகொண் டுள்ளது என்பதை, அவன் முகம் தெள்ளென எடுத்துக் காட்டியது. இவ்வளவு சிறப்புடன் கூடிய நமது சாம்பசிவ ஐயர், ஒருவாறு நம்பியே, தமது பெரிய குமாரன் சிவராமனை சென்னையில் தனி வாழ்க்கையே நடத்தும்படி விட்டிருந்தார். அவனும் இது வரையில் நெறி பிறழாது இருந்து வருகிறான். இதற்கு முற்றிலும் மாறானவன், அவர் இரண்டாவது புதல்வனாகிய கிருஷ்ணமூர்த்தி. தற்கால நாகரீகத்திற் கேற்றவாறு, வெட்டி விடப்பட்ட தலை மயிரும், தங்க விளிம்பு மூக்குக் கண்ணாடியும், செங் குரங்கைப் போன்ற தோற்றத்தை அவனுக் குண்டாக்கின. அவனும், அதற் கேற்றாற் போன்ற குணமுள்ளவன். அவன் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளில் மருந்துக்காவது, வாசனைக்காவது, ஒன்றாவது நிஜமாக இருக்க மாட்டாது. ஏதாவதொரு விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டால், நாமே, நேரமாய்விட்டது என்று எழுந்து போனாலொழிய, கிருஷ்ணமூர்த்தி, தான் பேசுவதை சிறிதும் நிறுத்தமாட்டான். மற்றும், தான் லக்ஷாதிபதியி னுடைய பிள்ளையைப்போல் வாழவேண்டு மென்பது அவனின் விருப்பம் அதற்கேற்ற முறையில், சிறிது சிறிதாக தன்னுடைய நடை யுடை பாவனைகளை மாற்றிக் கொண்டே வந்தான். கூடிய சீக்கிரத்தில் தான் ஒரு அசல் ஐரோப்பிய னாகிவிட வேண்டுமென்பது அவன் எண்ணம். முதன் முறை கிருஷ்ணமூர்த்தி தன்னுடைய தலை ரோமத்தை, தகப்பனார் உத்தரவின்றி மேனாட்டு முறையில் வெட்டிவிட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுதே ஆற்றி



லிருந்து திரும்பிய தந்தை அடங்காக் கோபங் கொண்டு தான் கையில் கொணர்ந் திருந்த செம்பு தீர்த்தத்தை அப்படியே கிருஷ்ணமூர்த்தியின் தலைமீது வீசி யெறிந்து பலவாறு அடித்து உதைத்து, அப்பொழுதே நாவிதனை அழைத்து, புதிய முறையில் வெட்டி விடப்பட்டதை, க்ஷவரம் செய்வித்தார். இது ஒன்றே ஐயரின் தீவிர மத பக்திக்குச் சான்றாகும்.

சாப்பிடும் நேரம், ஸ்நானம் செய்யும் சமயம், தூங்கும் நேரம், இச் சமயங்கள் தவிர, மற்றப் பொழுதும், ஐயரை, எவர் வீட்டுத் திண்ணையிலாவது காணலாம். அவரிடம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசி ஜெயிக்க முடியாது. அவர் பேச ஆரம்பித்துவிட்டால், தான் பேசி முடிக்கும் வரை மூச்சு விடும் வரை தொடர்ந்து பேசுவார். இடை நடுவில், நம்முடைய பேச்சுக்குச் சிறிதும் இடங் கொடுக்காமல், நம்மையும் பேசவொட்டாமல் செய்துவிடுவார். இன்ன விஷயம்தான், தனக்குத் தெரியும், இன்னது தெரியாது என்னும் பேதமின்றி, எவ் விஷயத்தையும், தானே மேற் போட்டுக்கொண்டு பேச ஆரம்பித்துவிட்டால், அவரிடம் பேசி, ஒருவர் மீள முடியாது. இது தெரிந்தே ஒருவரும், அவரிடம் பேச்சுக் கொடுப்பதில்லை யாயினும், அவருடைய பிரசங்கமாரி பொழிவதை, இரவு எட்டு மணி முதல், பதினொன்று வரை, நிச்சயமாய் ஒவ்வொரு இரவும், கேட்கலாம் அவர் பேசுகிற மாதிரியில், எங்கே நம்மீது, விழுந்து கடித்துவிடுவாரோ என எண்ணி பயந்து, தம்முடைய வாதத்தை நிறுத்திக் கொண்டோரும் பலர். அவரால் எடுத்து கையாளப் படாத மேற்கோள்களும், விஷயங்களும் இல்லையென்றே கூறலாம். வேதாந்த விஷயங்களும், புராண இதிகாசங்களும், ஆத்மார்த்த விஷயங்களும், அவருக்குத் தண்ணீர்போல் பாடம்.

ஓர் முறை லௌகீக விஷயங்களில் இவர் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார் என அறிய வேண்டி, 'தாத்தா நான் ஒரு விஷயத்தைப்பற்றி' என்று மேலே ஆரம்பிக்கு முன் மிக்கக் கோபம் கொண்டவராய் சீறி, 'அடே என்னை எப்படி, நீ தாத்தா என்றழைக்கலாம்? எனக்குப் பல்லெல்லாம் உதிர்ந்துவிட்டதா? என்னால் நடக்க முடியாமல் ஓர் இடத்திலேயா குந்திக் கிடக்கிறேன். இருபது மைல் தூரமானாலும் சலியாமல் நடப்பேனே. ஏதோ, என்னுடன் நீ நடக்க முடியுமா? உனக்குக் காலையில் காப்பியும் பலகாரமும் வேண்டும் எனக்கு அதெல்லாம் ஒன்றும் வேண்டியதில்லை. வெற்று வயிறுடன், எவ்வளவு வேலையானாலும், சலிக்கச் செய்வேன். உன்னால் கூடுமோ? எனக்கென்ன நரை திரை வந்து விட்டதா? எப்படி நீ என்னை தாத்தா என்று கூப்பிடலாம்? எனக்கென்ன இப்பொழுது

விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றால் பெண் கொடுப்பார் இல்லையா? ஏதோ வேண்டாமென் றிருக்கிறேன். எவ்வளவோ பேர் எனக்குப் பெண் கொடுக்கக் காத்துக்கொண் டிருக்கிறார்கள்' என்று நான் பேசுவதற்கு இடமின்றி பொழிய லுற்றார். ஏதோ விஷயம் தெரிந்திருந்தும், இவரிடம் பேச்சுக் கொடுத்தோமே யென்று, சிறிது மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, 'ஏது தாங்கள் இப்படிக் கோபித்துக்கொள்வீர்க ளென்று தெரிந்திருந்தால், நான் முதலிலேயே பேச்செடுத்திருக்க மாட்டேன். அதுவும் தவறி, நான் தாத்தா என்று சொல்லிவிட்டேன். இதற்கா இப்படி ஒன்று மறியாத சிறுவனாகிய என் மீது கோபித்துக் கொள்வது? ஒரு பெரிய விஷயத்தைப் பற்றித் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவே தங்களிடம் வந்தேன். அதற்குள் தாங்கள் இவ்வளவு அவசரப்பட்டு விட்டீர்கள்.'

'அப்படியா, நீ முதலிலேயே விஷயத்தைக் கூறியிருந்தால் பரவாயில்லை. ஏதோ நீ என்னுடன் வீண் வம்பு பேச வந்திருக்கிறா யென்று நினைத்தேன். எதைப்பற்றி என் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறாய்?'

'ஒன்றுமில்லை. நம்முடைய ஜாதியில் 'வரதக்ஷிணை' என்னும் கொடிய பழக்கத்தால் விளையும் கொடுமைகளைப் பற்றியே.'

சரியான விஷயம். "வரனுக்கு, அதாவது ஒரு பெண்ணை மணந்து கொள்ளும் ஒரு புருஷனுக்கு, பெண் வீட்டாரால் கொடுக்கப் படும் தட்சிணைக்கு (சன்மானம்) வரதட்சிணை என்று பெயர். அந்தோ இதென்ன அநியாயம்? ஒரு பெண்ணை மணந்துகொள்வதற்குக் கூலியா? இதென்ன ஆச்சரியமா யிருக்கிறது? ஒரு அருமையான பொருளையும் கொடுத்து, எல்லாச் செலவுகளையும் செய்வதல்லாமல், ஆயிரக் கணக்கான ரூபாயும் கொடுக்கிற வியாபாரமாகிய இது, விநோத வியாபாரமாக வல்லவா இருக்கிறது? ஒரு பொருளின் சரியான விலையைக் கொடுத்து அதைக் கொள்வ தல்லவோ சரியான வியாபாரமாகும். ஓர் அரிய பொருளையும் இனாமாகக் கொடுத்து, பணத்தையும் ஏராளமாகக் கொட்டிக் கொடுக்கிற இது தலைகீழ் வியாபாரமாக வல்லவோ விருக்கிறது?

ஆம், வாஸ்தவந்தான்; வரதட்சிணையை, பெண்ணை மணந்து கொள்வதற்காக வரனுக்கு-புருஷனுக்கு கொடுக்கப்படும், கூலியென்றே நான் கூறுகிறேன். இவ் வரதட்சிணையால் அழிந்துபோன ஏழைக் குடும்பங்க ளெத்தனை? இப் பேய்க்குப் பயந்து தற்கொலை புரிந்து கொண்ட நம் பாரத நாட்டு வீராங்கனைகள் எத்தனை பேர்? இக் கொடிய பூதத்தின் பயமுறுத்தலுக்குக் காரணமாக விவாகமாகாத



இளங் கன்னிகைகளை வைத்துக்கொண்டு மனம் புழுங்கி, மிக்கத் துன்பமும் வேதனையும் கவலையும் அனுபவிக்கும் தாய் தந்தையர் எத்தனை பேர்? ஐயோ! இக் கொடிய வழக்கத்தை நம் நாட்டிலிருந்து தூரத்த ஒரு சமூகச் சீர்திருத்தக் காரராலும் முடியவில்லையா? பாரத நாட்டுச் சகோதர சகோதரிகாள்! நம்மில் பலர் இவ் வரதட்சணையால் ஏற்படும் கொடுமையைக் கண்டித்திருந்தும், அனுபவித் திருந்தும், அதை நீக்கக் கருதுபவ ரில்லையா? மேடைகளில் ஏறி, பிரஸங்கமாரி பொழிந்தும், பத்திரிகைகளில் பத்தி பத்தியாக வரையும் எத்தனையோ பேர், இரகசியத்தில் தங்கள் பிள்ளைகளுக்கு, நாலாயிரம், ஐயாயிர மென்று வரதட்டணை வாங்குகிறார்கள்.

இப்பொழுது, பத்தாவது வகுப்புத் தேறிய, மாப்பிள்ளையின் விலை ரூபாய் ஐநூறு முதல் ஆயிரம் வரை. எப். ஏ. தேறி யிருந்தால், இரண்டாயிரம் முதல் நாலாயிரம் வரையிலும், அதற்கு மேற்பட்டு, எம். ஏ. முதல் அதிகம் எவ்வளவு கற்றிருந்தாலும், நாலாயிரம் முதல் ஆறாயிரம். அதற்கு மேற்பட்டும் சமயோசிதம் போல் விலை ஏற்படும். இதென்ன கொடுமை? மாப்பிள்ளைகளின் விலை இவ்வளவு கிராக்கியா யிருந்தால், வெகு சீக்கிரத்தில் நம் நாட்டுப் பெண்மணிகளிற் பலர் விவாகமின்றிக் கன்னிகைகளாகவே தம் வாழ் நாள் முழுமையும் கழிக்கவேண்டி வரும். யோசித்துப் பார்த்தால், இந்தத் தலைகீழ் வியாபாரத்தை ஏலமென்றே கூறவேண்டி யிருக்கிறது. ஏனெனில் ஒருவரிடத்தில் ரூபாய் ஆயிரம் வரதட்சணைக்கு இசைந்த ஒருவர், இரண்டாயிரம் ரூபாய் வேறு இடத்தில் வருவது நிச்சய மானால், முன்னதை விட்டு அதற்கு உடன்படுவதும், இன்றேல், அதற்கும் மேலான பெரிய தொகை வேறொருவர் கொடுப்பதாயின் அதை நிச்சயிப்பதி னாலேயே, இதைத் துணிந்து ஏலமென்றே கூறலாம். முக்கியமாக, விவாக மாதங்களாகிய சித்திரையிலும், தை மாதத்திலும், ஏலச் சரக்குகளாகிய மாப்பிள்ளைகளின் விலை மிகவும் உயர்ந்திருக்கும். இதனாலேயே, ஆவலாக பிரஸவ அறையி லிருந்து என்ன பதில் வருகிறதென்று எதிர் நோக்கி யிருப்பதும், பிறந்தது பெண் எனில், அலக்ஷியம் தோன்றுவதும், ஆண் எனில் திருப்தி யடைவதும் போலும். இக் கொடிய வழக்கத்தினா லன்றோ, 'ஐந்து பெண் பெற்ற அரசனும் ஆண்டியாவான்' என்னும் வசனமும் ஏற்பட்டது. பெரும் செல்வ வந்தர்களும், பெண்களை அதிகமாகப் பெற்றிருப்பார்களே யாயின், அவர்கள் வெகு சீக்கிரத்தில், இக் கொடுமையினால், மிக்க ஏழ்மை நிலைமையை யடைய நேர்கின்றது. பெண்ணைப்பெற்ற தோஷத்திற்காக, பெண் வீட்டாரிடம் பணம் பறிக்கக் கருதுபவர்கள் பெரும் பகற் கொள்ளைக்காரர்களே யாவர். இந்தச் சம்பவங்களுக் கெல்லாம் மூல காரணம், 'பெண் ருதுவாகிற

தற்கு முன்னரே, அவளுக்கு விவாகம் செய்ய வேண்டும்,' 'என்னும் சமூகக் கட்டுப்பாடாலேயே. இக் கொடிய சட்டம் பிறந்த பொழுதோ, வரதட்சணை வாங்குவதும் சட்ட விரோதம் என ஏன் ஓர் சட்டம் செய்யப்படவில்லை? யென வருந்தவேண்டி யிருக்கிறது. ஆனால், இவை யாவும அநேகமாக, இப்பொழுது அமுலி லிருந்து வரும் சாரதா சட்டத்தால் ஒழிந்துவிடு மென்றே நினைக்கிறேன். இவ்வளவு பெரும் பணம் பெற்றுக் கொண்டும் சில அற்பர்கள், பெண் கொடுத்தவனை நாயினும் கடையனாகவும், தங்களை, இந்திர பதவியி லிருப்பவர் போலவும் நினைத்துக் கொண்டு அதிகாரம் செய்யத் தலைப்படுகின்றனர். என்னே அகங்காரம்! பெரும் பணத் தொகை பெற்று, ஏலத்தில் தம் பிள்ளைகளை விற்று, பிறகும் ருதுசாந்தி காலத்தில், ஆயிரம் கொடுத்தால்தான் முகூர்த்தம் நடக்கும் என பிடிவாதம் செய்யும் அறிவற்ற மூடாத்மாக்கள் பல பேர். என்னே மதியீனம்! வெட்கம்!! வெட்கம்!!!

ரூபாய் ஐயாயிரம் கொடுத்து, ஒருவர் தம் பெண்ணை ஓர் பெரிய இடத்தில் கொடுத்திருந்தார். ஒரு வருடம் கழித்து, ருதுசாந்தி முகூர்த்தத்திற்கு நாள் குறிக்க, பெண்ணின் தந்தை, சம்மந்தியின் வீடு சென்றார். பிள்ளை வீட்டார், அதாவது மாப்பிள்ளையின் தந்தை, இரண்டாயிரம் ரொக்கமாகக் கொடுக்க வேண்டு மென்றும், பையன், ராஜதானியில் எம் ஏ. முதல் வகுப்பில் தேறி யிருப்பதாயும், இல்லாவிடில் இப்பொழுது முகூர்த்தம் நடத்த முடியா தென்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டார். பெண்ணின் தந்தை மிக்கக் கஷ்டப் பட்டு, தன் நிலத்தின் ஓர் பகுதியை விற்று, ரூபாய் ஆயிரத்து ஐநூறு பெற்று, பாக்கி, ஐநூறுக்கு எங்கெல்லாம் அலைந்தும் பணம் கிடைக்கவில்லை முகூர்த்த தினமும் வந்தது. யாவும், வைதீக சடங்குகள் சரிவர நிறைவேறின. இரவும் வந்தது. பெண்ணின் தந்தை தன் கஷ்டங்களைக் கூறி, இந்தத் தொகைக்கு மேல், பணம் கிடைக்கவில்லை யென்றும், தற்பொழுது இந்த ரூபாய் ஆயிரத்து ஐநூறு பெற்றுக் கொள்ளும்படியும், மற்றொரு சமயம், தான் சேர்த்துத் தருவதாயும் கூறினார். இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு பைசா குறைந்தாலும், பெற்றுக் கொள்ள, மாப்பிள்ளையின் தந்தை மறுத்து விட்டார். இதைக் கண்டு, பொறுமையை இழந்த பெண்ணின் தந்தை, ஆத்திரம் மேலிட்டு, தன்னுடைய மைத்துனனை கோபாலனைக் கூப்பிட்டு, 'கோபாலா! ஏதோ நம்மாலான வரை செலவு செய்து பெண்ணைக் கொடுத்தோம் எவ்வளவு செய்தும் திருப்தி யில்லை. என் செய்வது? அப்பொழுதே நம்மைப் போன்ற ஒரு ஏழைக்குக் கட்டிக் கொடுத்திருக்கலாம். மடமையால் மதி யிழந்தேன். இந்த ரூபாய் ஆயிரத்தையும் பெற்றுக் கொண்டு, என் அருந்



தவப் புதல்வி 'ஸரஸா' வுடன் அன்புடன் இல்லறம் நடத்துவாயாக,' எனக் கூறி பெண்ணின் கையைப் பிடித்து, கோபாலனின் கரத்தோடு சேர்க்கப் போனார். இதை யெல்லாம் கவனித்திருந்த மிகவும் படித்த முண்டமாகிய பால கிருஷ்ணன், அப்பொழுது அறிவு வரப் பெற்றவனாய், விஷய முணர்ந்து, தன் ஆருயிரனைய மனைவியின் மலர்க் கரங்களைப் பற்றி அழைத்துக்கொண்டு மணவறையில் புகுந்து, கதவைச் சாற்றித் தாளிட்டான். எத்தனை இடங்களில் இம் மாதிரிச் சம்பவங்கள் நடந்தேருகின்றன.

தற்கால நாகரீக சமுத்திரத்தில் மூழ்கி, வரவுக்கு மீறின செலவு செய்து, கடன்காரராகி, கடைசியில் நிரம்பவும சங்கடத்துக் குள்ளாகி வருந்தும் குடும்பங்கள் எத்தனை. இவை யாவும், 'வரதட்சணை என்னும் பேய் புரியும் கூற்றுகள்' பணக்காரர்கள் எவ்வளவு 'வரதட்சணை' யாயினும் கொடுத்துத் தங்கள் பெண்களை தக்க இடத்தில் விவாகம் செய்விக்கின்றார்கள். ஏழைகளின் பெண்களோ, எவ்வளவு அழகுடையவர்க ளானாலும் சரி, கல்வியில், கலாவல்லி யாயினும் சரி, வரதட்சணை இல்லாமல் அவர்களை மணந்துகொள்ள ஒருவரும் சம்மதிப்பதில்லை. இதனால் எவ்வளவு ஏழைக் குடும்பங்களி லுள்ள பெண்கள்-விவாக மின்றி, காட்டில் மலர்ந்த ரோஜாவைப் போன்று வாடி வதங்குகின்றன ரென்று எவரே கணக்கெடுக்க வல்லார்?

முற் காலத்தில் நடந்த திருமணங்கள் காதல் மணங்களே தவிர, பணம் பற்றி, வரதட்சணையினால் நடத்தப்பட்ட மணங்களா? நம் முன்னோர்களான தமிழ் மக்களில் ஒருவராவது வரதட்சணைக்காக விவாகம் செய்துகொண்டன ரென்பதை, இவ் வறிவிலிகள் நமக்குக் காண்பிக்க முடியுமா? முற் காலத்தில் நடந்த விவாகங்கள் காதல மணங் கமழ்ந்த கடி மணங்களே தவிர பணத்திற்காக நடத்தப்பட்ட கொடும் மணங்க ளல்ல. இக் கொடிய வழக்கத்தினால், பெற்றோர் தம்பொருட்டு வருந்துவதைக் காணப் பொறாத எவ்வளவு இளமங்கையர் பிராணத்யாகம் செய்துகொண் டுள்ளனர்? வங்க நங்கையாகிய, 'ஸ்நேகலதா' என்னும் வீரப் பெண்மணி, இக் கொடிய பேயினாலேயே அக்கினிப் பிரவேசம் செய்து உயிர் நீத்தாள். இதை அறிந்த பின்னுமா வரதட்சணை கொடுக்கவும் வாங்கவும் இசைகிறீர்கள். வேண்டாம்! வேண்டாம்!! கட்டாயம் உங்களைப் பெண் பாவம் பற்றிக்கொள்ளும்.

சந்தையில் விலைக்கு விற்பது போன்ற இவ்வித நடத்தையும், பேச்சுக்களும், தம்பதிகளை வாழ்கா ளெல்லாம் ஒன்று சேர்த்து, ஆசீர்வதிக்கும் விவாகத்தின் புனிதத்தைக் கெடுத்து, சம்மந்தி

மார்கள், சாதாரணமாய் ஓர் அந்நிய னிடத்தில் பாராட்டும் சிநேகமும், மரியாதையும் கூட ஒருவருக் கொருவர் பாராட்ட முடியாமல், பண்ணிவிடுகின்றன. நாளுக்கு நாள், மேன்மேலும் மனஸ்தாபங்கள், அதிகமாவதற்கே காரணமாகிறது. இந்த வழக்கம் சாஸ்திர சம்மதமானதும் அல்ல. ஒரு பெண்ணின் தந்தை செல்வவானு யிருந்து, அந்தப் பெண்ணுக்கு ஸ்ரீதனமாக அவராகவே ஏதாவது கொடுத்தால் அது பிழை யாகாது. தற்பொழுது செல்வமுள்ளவர்கள் சிலரின்று வாரிக் கொடுக்கும் பணத்தை அப்படி ஏதாவது ஏற்பாடு செய்தால், அது பிறகு, அந்தப் பெண் வைதவ்யம் அடைந்து மறு விவாகம் செய்துகொள்ள இஷ்டப்பட்டாலும், அல்லாது திக்கற்றுவிட்டாலும், அல்லது வேறெவ்வித அசந்தர்ப்பங்கள் நேரிட்டாலும் அந்தப் பெண்ணுக்கு உதவத்தக்கதா யிருக்கும். ஆனால் இப்போதைய வழக்கப்படி பிள்ளை வீட்டுக்காரர் பணம் பறிப்பது, கொள்ளைக்குச் சமானமே யொழிய வேறல்ல. அந்தப் பெண்ணுக்கு அதனால் ஒரு நன்மையும் ஏற்படுவ தில்லை. இதைப் பற்றி-வரதட்சணையின் கொடுமையைக் குறித்து-அதை ஒழிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி, இன்னும் கூறலாம். அதனால் பலனில்லை. ஏதோ நீ கேட்டா யென்று சுருக்கிக் கூறினேன். அதைப் பற்றியே ஒரு பெரிய "நாவல் எழுதலாம்" என்று ஒருவாறு கூறி முடித்து, மூச்சு விடத் தொடங்கினார்.

பிரமித்துப் போனேன். இப்படி இவர் கோடை மழை போன்று பொழிவாரென்று எனக்குத் தெரியாது. இவ்வளவு விஷய அறிவும், புத்தி நுட்பமும் பெற்றிருப்பா ரென்று நான் கனவிலும் கருதவில்லை. அடுத்த வாரம் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். சாம்பசிவ ஐயர், தம்முடைய மூத்த குமாரனை சிவராமனுக்குப் பெண் கொடுக்கிறே னென்று வந்திருந்த கற்பனையூர் சுந்தரேச ஐயரை, அவர், ஆயிரம் ரூபாயே கொடுக்க முடியு மென்றும், தம்மால் இரண்டாயிரம் கொடுக்க ஐவேஜி யில்லை யென்றும் கூறியவரை, இரண்டாயிரத்திற்குக் குறைந்தால் அருகில் வரவேண்டா மென்று சொல்லித் திருப்பி அனுப்பி விட்டதாய்த் தெரிய வந்தது. ரூபாய் இரண்டாயிரம் பெற்று தம் தரித்திரத்தை ஒழித்துவிடலா மென்று எண்ணி இன்னும் சாம்பசிவ ஐயர் மனப்பால் குடித்துக்கொண் டிருக்கிறார். சிவராமனுக்கு வயது முப்பதாகியும், இன்னும் நித்திய பிரமச்சாரியாகவே இருந்து வருகிறான்.

# வாழ்க்கைத் துணை.

ஸ்ரீமதி. P. V. சரோஜினி தேவி அவர்கள்.

நாம் சிறிது நேரம் ஓர் இடத்தில் உட்கார்ந்து இறைவனின் சிருஷ்டி அமைப்பைப் பற்றிச் சிந்திக்கப் புகுவோமானால் ஒவ்வொன்றும் நம் அறிவுக்கு எட்டா வண்ணம் அதி யற்புதமாகவே இருக்கும். ஆறறிவுள்ள மனித வர்க்கத்துள்ளும், மற்றும் சகல ஜீவராசிகளுள்ளும் ஆண், பெண் என இரு வகை ஏற்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் விரும்பும் தன்மையையும் அதன் மூலமாய் உலகம் விர்த்தி யடைந்து வருவதையும் காண்கிறோம். கடவுளின் படைப்பின் அதிசயம் தான் என்னே?

இனி இல்லறம் என்பதை எடுத்துக் கொள்வோம் இல்லறம் என்றால் என்ன? ஓர் ஆண் மகனும், ஓர் பெண் மகளும் ஒருவரை யொருவர் விரும்பி, விவாகம் செய்துகொண்டு ஒன்றாய் இருந்து குடும்பத்தை ஒழுங்காய் நடத்தி மக்களைப் பெற்று உலகில் தர்ம நெறியிலேயே வாழ்ந்து வருதலாம்

"இல்லற மல்லது நல்லற மன்று"

என்று ஔவைப் பிராட்டியார் கூறி யிருக்கிறார். இவ் வில்லறத்தில் புகுவதற்கு அடிப்படையாயுள்ள கலியாண விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டு மல்லவா? நம் பெரியோர்கள் விவாகம் என்பது சாதாரண காரியமல்ல, "ஆயிரங் காலத்துப் பயிர்" தீர யோசித்து இக் காரியத்தை நடத்த வேண்டும் என்று கூறி வருகிறார்கள். அம் மாதிரி பேசும் போது அழகாகப் பேசுகிறார்களே யொழிய வழக்கத்தில் சரியாய் அனுசரிப்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கிறது.

இவ் வாழ்க்கையை நடத்தப் போகும் தலைவனும், தலைவியும் அன்பு என்னும் கயிற்றினால் பிணைப்புண்டவர்களாய் இரு மனமின்றி ஒரு மனப்பட்டவர்களாய் இருந்தாலன்றோ அவர்கள் அவ் வில்வாழ்க்கையை ஒழுங்காய் நடத்த முடியும்?

"மருவிய காதல் மனையாளும் தானும்
இருவரும் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல் வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று."

“இல்லறம் என்பதன் நல்லுயி ரேயாய்
நின்ற காதலின் நிலைமை நினையில்
இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பாயுருகி, ஒன்றாந்தன்மை”

என்று ஸ்ரீமான். P. சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய “மனோன்மணீ”யத்தில் காதலின் தன்மையைப் பற்றி அழகாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இவ் வாக்கியங்களினால் இல்லறத் தலைவனுடைய மனமும், தலைவியினுடைய மனமும் எவ்வாறு பொருந்த வேண்டுமென்பது நன்கு விளங்குகின்றதல்லவா? முற்காலத்தில் நம் நாடு காதல் மணங்களால் சிறப்புற்றிருந்ததாகப் பண்டைத் தமிழ் நூல்களின் வாயிலாக அறிகிறோம்.

முற்காலத்தில் நடந்து வந்ததே போல் காதல் மணங்கள் இக் காலத்தில் நடப்பது மிக்க அருமையாய் விட்டது. இப்போது முக்கால் பங்கு மணங்கள் பணத்திற்காகவே நடைபெறுகின்றது. அநேகமாய் ஓர் ஆடவன் ஓர் பெண்ணை மணம் புரிய விரும்பினால் அவளுடைய குணாதிசயங்களைப் பற்றியாவது, கல்வியைப் பற்றியாவது விசாரிக்கிறதே யில்லை. பெண்ணுக்கு எவ்வளவு நகை போடுவார்கள்? சீர் எவ்வளவு கிடைக்கும்? அவள் மூலமாக ஏதாவது சொத்து வருமா? என்பதையே முக்கியமாய் விசாரிக்கிறான். பணத்தின் மீதே கருத்தா யிருக்கும் அவன், மணமுடிந்த பின்னர் மனைவியின் மீது அன்பா யிருப்பது வெகு அருமையல்லவா?

“மடைத்தலையில் ஓடுமீன் ஓட உருமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு”

என்பதே போல், மனைவியின் சொத்துத் தன் கைக்கு வருமளவும் மனைவியின் மீது காதலுள்ள புருஷன் போலவும், மாமி, மாமனிடத்தில் மிகுந்த பட்சமும், பணிவுமுள்ள மருமகன் போலவும் நடித்துப் பின்னர் அடியோடு மோசம் செய்யும் மாப்பிள்ளைகள் எத்தனை பேர்? மனைவியை அடித்தும், உதைத்தும் அவள் மீது கோபம் வந்த காலத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பிட்டும், கிணற்றில் தள்ளியும், கத்தியால் குத்தியும் கொலை செய்யும் கணவர்கள் எத்தனை பேர்? தாசிகளையும் வேசிகளையும் வைத்துக் கொண்டு மனைவியைப் படாதபாடு படுத்தி அவள் வீட்டில் தனியே இருந்து அழும்படி விட்டுவிடும் புருஷர்கள் எத்தனை பேர்? தாசி வீடே கதியாய் இருக்கும் ஆண் மகன் ஒருவன், தான் சிறிதும் விரும்பாத தன் மனைவி ஓர் அன்னிய புருஷனோடு சகோதரப் பாவனையாகப் பேசிக்கொண்டிருக்கும் போது பார்த்தாலும் அவள் மீது பலமான சந்தேகம் கொண்டு அவளைப் படுத்தும் கொடுமைகள் கொஞ்சமா? அது போலவே கணவனுக்குத் துரோகம் செய்து அன்னிய புருஷனை நாடிச் செல்லும் துஷ்டைகள் எத்தனை பேர்? புருஷனை நஞ்சிட்டுக் கொல்லும் பாதகிகள் எத்தனை பேர்?



நம் நாடு இவ்வளவு சீர்குலைந் திருப்பதற்குக் காரணம் என்ன? மணமற்ற மணங்கள், அதாவது காதலில்லாக் கலியாணங்கள் நடப்பதனாலேயே என்பது “அங்கை நெல்லி”யென விளங்கவில்லையா? அன்பை அடிப்படையாகக் கொண்டு இன்ப மயமாக விளங்க வேண்டிய உலகம், விளங்க வேண்டுமென்று விரும்பி விமலன் படைத்த உலகம், ஆசையை அடிப்படையாகக் கொண்டு துன்ப மயமாகத் தோற்றுவதைக் காண உள்ளம் அனலிடு மெழுகென உருகுகின்றது.

ஒருவன் செல்வவந்தனாய் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம், அவன் அழகிய மாளிகையில் வசித்த போதிலும் அவன் ஏவிய வேலைகளைச் செய்யப் பணியாளர் பலர் இருந்த போதிலும், அவன் கல்வியில் சிறந்து பலராலும் புகழத் தக்க நிலையிலிருந்த போதிலும், மனதிற்குப் பிடித்தமில்லா ஒருவளை மணக்க நேரிடின அவன் வாழ் நாள் ஒருபோதும் சந்தோஷமாகக் கழியாது. அது போலவே ஒரு பெண்ணுக்கு ஓர் அரசிக்கு உரிய பதவியே வாய்த்த போதிலும், இஷ்டமில்லா ஒருவனைப் பெற்றோர்களின் கட்டாயத்தின் பேரில் மணம் புரிய நேரிடின் அவள் வாழ்நாள் வீணாளாகவே தோற்றும். இது பற்றியே

“பல்லார்புகழப் பெருஞ்சிறப்பும் பாக்கியம் பலவும் படைத்தென்ன?
அல்லார்நெஞ்சத் திருளகற்றி அன்பினுருவாய் அதைத் திருத்தி
எல்லாநலனும் ஒருங்களிக்கும் இன்பக் காதல் அடையாரேல்
நல்லாரல்லர் அவரெல்லாம் நாற்கா லில்லா விலங்கினமே!”

என்று கூறப்பட்டிருக்கின்றது. அநேகர் தம் புதல்வர், புதல்விகளுக்குச் சிறு வயதில் மண முடிக்க விரும்புகின்றனர். பொறுப்பும் சடமையும் அறியாத சிறு குழந்தைகளைத் தம்பதிகளாக்குவதனால் நேரிடக் கூடிய தீமைகளை யார் கவனிக்கின்றார்கள்? அநேகர், புதல்வர்களுக்குத் தக்க வயது வந்தபின் எவரும், தாம் குறிப்பிடும் பெண்களையே அவர்கள் மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்துகின்றனர். அநேக குடும்பங்களில் பெற்றோர் கட்டளையை மறுக்க அஞ்சி அவர்கள் குறிப்பிடும் பெண்களையே மணந்துக் கொள்ளும் வாலிபர்கள் பின்னர் மனைவியர்களை அடியோடு கைவிட்டு விடுகின்றனர். பெற்றோர் செய்த காரியத்தால் சதிபதிகள் இருவரின் வாழ் நாட்களும் துன்பமாய் முடிகின்றது. ஆண் மக்களின் நிலையே இவ்வாறிருக்கையில், பெண் மக்களின் நிலையைப் பற்றி என்னென்று எடுத்து எழுதுவது?

அநேக பெண்கள் பெற்றோர் குறிப்பிடும் வரன் தங்களுக்குப் பிடிக்காவிடில் தாது விருப்பமின்மையை வெளியிட அஞ்சி, கிணறு குளம் குட்டைகளில் வீழ்ந்து தற்கொலை செய்து கொள்ளுகின்றனர்.

திரு. சாரதா அவர்களின் விவாக வயது மசோதா சட்டமாகி அமுலுக்கு வரச் சின்னாள் மட்டுமிருக்கும்போது, வைதீகப் பித்தில் மூழ்கியவர்கள், தாங்கள் அருமையாகப் பெற்று வளர்த்துவரும் பாலபருவத்தினர்க

198538

னாகிய புத்திர ரத்னங்களை-விவாமறியாச் செல்விகளை, இன்ப துன்பந் தெரியாச் சிறுமிகளை, பழக்க வழக்கங்களுக்குத் தடை செய்யக்கூடாதென்று கங்கணங் கட்டியவர்களாய்-மூட சமூகக் கட்டுப்பாட்டுக்குப் பலந் தேடுபவர்களாய், பாழ் நரகத்தி லிருப்பவர்களை மீட்பவர்கள் போன்று, அரசாங்க சட்டமொன்றுக்கு மட்டும் அதிகமாய் பயந்து, மிக குறுகிய காலத்திற்குள் கணக்கற்ற விவாகங்கள் நடத்தி மகிழ்ந்தார்கள். என்னே இவர்களின் மதியீனம்! பால்ய விவாகத் தடைச் சட்டம் தங்களின் நன்மையை நாடியே ஏற்படுகிறதென்பதை யறியாது, கண்மூடித்தனமாக தகுதியற்றவர்களென்றும், கிழவர்களென்றும் அறிந்தும் அறியாதவர்களாக, கிடைத்தவரைக் கொண்டு காரியத்தை முடித்து ஜெயம் பெற்றவர்களாக வாழ்கின்றார்கள். இவர்களின் மூடமதியால் விளையும் பயனை என்னென்று சொல்வது! பாவம்! பாலிகைகளே, இவர்களின் கட்டுப்பாடுகளுக்கு-மதக் கொள்கைகளுக்கு-பிடிவாதங்களுக்கு-சூழ்ச்சிகளுக்கு இலக்காகி நாசமடைய வேண்டியவர்களாகின்றனர். பெற்றெடுத்து வளர்த்து கிணற்றில் தள்ளிக் கொல்வதிலும் இவ்வித மணத்தால் தீராக் கவலையைக் கொடுத்து உயிருடன் நரகாவஸ்தையடையும்படி செய்வதே அதிக நஷ்டமாகும். பெற்றோர்கள், தங்கள் புத்திரிகளை துன்பத்திற்கு-துக்கத்திற்கு இடமின்றி வாழ்விக்க கூடியவர்களாயிருந்தால், எதிர்பாராத இச்சிறுமிகளின் லக்ஷக்கணக்கான விவாக விளையாட்டுகள் நடந்தேறுமா? வரப்போகும் தீமைகளும் துக்கமும் கண்ணீரும் தேசத்தை மாசுபடுத்துமா?

விவாகம் என்பது நம்மவர்களில் அநேகர் நினைப்பது போல் ஒரு வஸ்துவை விற்பது போலவும், வாங்குவது போலவுமல்ல. ஓர் ஆடவனும், ஓர் பெண்ணும் ஒருவரையொருவர் முழு மனதுடன் விரும்பி, இருவர் மனமும், ஒருமனப்பட்ட பின்னர் இருவரும் வாழ்விலும், தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவரை விட்டு ஒருவர் நீங்காமல் ஒற்றுமையாய் இல்வாழ்க்கை நடத்துவதாக பந்து மித்திரர்களின் முன்னிலையில் ஒருவர்க்கொருவர் செய்துக் கொடுக்கும் தெய்வ சம்மதமான வாக்குறுதியாகும்.

இல்லறத்திற்கேற்ற துணைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆண், பெண் இருபாலாரும் அதிக ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளல் வேண்டும். ஒரு பெண் எவ்வளவுதான் செல்வவந்தர் வீட்டுப் பெண்ணாயினும், அழகிற் சிறந்தவளாயினும், அவளிடம் நாணம், தெய்வ பக்தி, பரோபகாரம், பொறுமை முதலிய நற்குணங்களில்லாவிடின் அவளை மணம் புரிவோனுக்குக் கணப்பொழுதேனும் சந்தோஷமின்றி மாறாத் துயரமும் தீராக் கவலையுமே உண்டாகும். அதிரூபலாவண்யமுள்ள மனைவி வேண்டுமென்று விரும்புவது சரியேயாயினும் நற்குணமில்லாவிடின் யாது பயன்? குணமில்லாப் பெண் மணமில்லா பூவிற்குச் சமானமன்றோ? அகத்தி



னழகல்லவோ அழகு. எவ்வித தேக இலட்சணம் அமைந்திருப்பினும், குண இலட்சணமில்லாப் பெண் பெண்ணாவாளோ? நற்குணங்களுடன் அழகுமிருப்பின் மேன்மையே யாகும். இதுபற்றியன்றோ,

"அழகுங் குணமுள்ளவள் எனக்கீடு
அழகில்லையானுமிம் குணத்தையேதேடு
பழகு நற்குணமில்லா அழகியின் வீடு
பாம்பு, புலி, கரடி வாழ்ந்திடுங்காடு"

என்று கூறப்பட்டுள்ளது. ஒருவருக்கு அன்பும், நற்குண நல்லொழுக்கங்களும் கல்வியறிவுமுடைய மனைவி வாய்ப்பாளாயின் அதைவிடச் சிறந்த பாக்கியம் என்னுளது?

"துதிபெறும் அன்பும் நற்குணமுமுளார் இல் துணைவராயின்
இல்லதென் உலகில்? இவற்றுடன் கல்விசேர்
நல்லறிவு உளதேல் பொன்மலர் நாற்றம் பெற்றவாறன்றோ."

படித்த பெண் மனைவியாக வரவேண்டுமென்று விரும்புவோர் நம் நாட்டில் மிகச் சிலரே. மற்ற எல்லாப் பாக்கியங்களும் வாய்ந்திருந்து நற்குணமில்லா மனைவி வாய்ப்பாளாயின் அதைவிடத் துர்ப்பாக்கியம் வேறுளதோ?

"மழை திளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பாய்
யிழைவிளக்கு நின்றிமைப்பினென்னும்-விழைதக்க
மாண்ட மனையாளையில்லாதானில்லகங்
காண்டற் கரியதோர் காடு"

என்று கூறப்பட்டிருக்கின்றது.

தற்காலத்தில் பெண்களுக்கு விவாக விஷயத்தில் சிறிதும் சுதந்திரமில்லை. முற்காலத்திலோ அப்படியில்லை. சுயம்வரம் என்னும் வழக்கம் இருந்து வந்ததாகத் தெரிகிறது. அதாவது பெண் தனக்கு ஏற்ற கணவனைத் தானாகவே வரித்துக் கொள்வது. சுக துக்கத்திற்கிலக்காகப் போகும் பெண்ணின் மனதை அறியாமல் பெற்றோர்களால் நடத்தப்படும் விவாகம் எவ்வாறு பொருத்தமுடையதாகும்? விவாக விஷயத்தில் பெண்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும். பெற்றோர்கள் பணத்தையோ அல்லது தங்கள் சௌகரியத்தையோ பிரதானமாகக் கருதி, தமது அருமைப் புதல்வியர்களின் மனதை அறியாமல் மண முடித்து வைப்பது கொடிய பாவமே.

பணமும், அழகும் பிரதானமல்ல. எப்போதும் உண்மையே பேசுபவனாகவும், குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற சக்தியுடையவனாகவும், ஜீவகாருண்யம், கடவுள் பக்தி, வீரத்தன்மை முதலிய குணங்களுடையவனாகவும், மனைவியை அடிமையைப் போல் நடத்தாமல் அன்பாக நடத்தி

பெற்றோர்களிடத்திலும் சுற்றத்தவர்களிடத்திலும் பட்சமுள்ளவனாகவும், மற்றவர்களாலும் குணவான் என்று புகழ்ந்து கூறப்பட்டவனாகவும், யோக்கியதையான வழியிலேயே பொருளீட்டத் தக்கவனாகவும் இருப்பவனே சரியானவனாகும்; அப்படிப்பட்டவனையே ஓர் பெண் தேர்ந்தெடுக்க வேண்டும்.

குடும்ப பாரத்தை நிர்வகிப்பது சாதாரண காரியமல்ல; தலைவி என்னும் பெயர் எவ்வளவு அழகாகவும், கண்ணியமுள்ளதாகவும் இருக்கிறது! ஒரு பெண் பெயரளவில் மாத்திரம் தலைவியாயிருந்து, தலைவிக்கு ஏற்ற மாதிரி நடக்காவிடில் என்ன பயன்? ஓர் நாட்டை ஆளும் அரசிக்கு எவ்வளவு பொறுப்பும், கடமையும் இருக்க வேண்டுமோ அவ்வளவு ஓர் குடும்பத் தலைவிக்கும் இருக்க வேண்டும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கிய காரியம்.

மனையையும், உடலையும், உடைகளையும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். கணவனுடைய பெற்றோர்கள் இந்நற்குண மணியை நாங்கள் மருமகளாக அடைய, முன் ஜென்மத்தில் என்ன புண்ணியம் செய்தோமோ என்று கூறும்படி, அவர்களைத், தன்னைப் பெற்ற தாய், தந்தையர் போல் பாவித்து அவர்களிடத்தில் அன்பாகவும், பணிவாகவும் நடந்துகொள்ள வேண்டும். சுற்றத்தார்களிடம் பட்சமாயிருப்பது மன்றி, வீட்டிற்கு வரும் விருந்தினர்களையும் உள்ளங் கனிந்து இன்மொழி கூறி நன்கு உபசரித்தல் வேண்டும்.

வீட்டு வேலைகளை ஒழுங்காகவும், சுத்தமாகவும் செய்து வருவது மன்றி, கணவனுடைய வருவாயை அறிந்து அதற்குத் தக்கபடி மட்டாகச் செலவு செய்து, சிறிது பாகம் சேமித்து வைக்க வேண்டும். அவ்வாறு சேமித்து வைத்தால் அவசரச் செலவு நேரிடும் போது பிறரிடம் கடன் வாங்காமல் இருக்கலா மல்லவா? அலங்காரமான ஆடை யணிகளில் ஆசை கொண்டு வருவாய்க்கு மீறி செலவு செய்து புருஷனைக் கடன்காரர் ஜயிலுக்கு அனுப்பும் பெண் பெண்ணாவாளோ? பெண்களுக்கு நாணமும், மரியாதையும் முக்கியமாய் இருக்க வேண்டும். தன்னிலும் தாழ்ந்தவர்களைக் கூட கடுமையாகவும், இழிவாகவும் பேசக் கூடாது. ஏழைகளிடத்தில் இரக்கம் வேண்டும். கடவுள் தியானத்தைக் கனவிலும் மறக்கக் கூடாது.

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித் திருவாக்குந்
தெய்வதையு மெஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டீர் சிறப்பு.

பர்த்தாவைத் தன் கண்ணின் கருமணி போல் பாதுகாத்து வருவது மன்றி, கணவன் குறிப்பறிந்து எல்லா விஷயங்களிலும் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும். கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி. கண



வன் சந்தோஷப் படும் போது தானும் சந்தோஷப் படுவதும், துயரப்படும் போது தன் துயரத்தை அடக்கிக் கொண்டு புருஷனுக்குத் தேறுதல் மொழிகள் கூறுவதும் உற்சாகமிழந்து சோம்பி இருந்தால், கடமையை எடுத்துக் காட்டி ஊக்க மூட்டுவதும், வெளியிற் சென்றிருக்கும் கணவன் அலுத்து வீட்டிற்கு வரும் பொழுது வீட்டிலுள்ள கஷ்ட நஷ்டங்களைக் கூறி தொந்திரவு கொடுக்காமல், உண்டி முதலியவைகளால் உபசரித்துக் களைப்பாறிப் பின்னர்.சமயமறிந்து கஷ்டங்களைக் கூறுவதும், கணவன் கோபித்துக்கொண் டிருக்கும் போது தானும் உடன் கோபித்துச் சண்டை விளைவிக்காமல், சாந்தமாயிருந்து கோபம் தீர்ந்து சந்தோஷமா யிருக்கையில் தன்னிடம் தப்பிதம் இருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதும், இல்லாவிடில் தனது குற்றமின்மையைத் தக்க காரணங்களோடு எடுத்துக் காட்டுவதும், பர்த்தாவின் உடல் நலத்தில் கண்ணும் கருத்துமாய் இருப்பது மன்றி, செய்ய வேண்டிய பணிவிடைகளைச் சிறிதும் சோம்பலில்லாமல் செய்து வருவதும், அன்பாகவும், பணிவாகவும் நடந்து கொள்வதும், தன் புருஷனை யன்றிப் பிற புருஷனைக் கண்ணெடுத்துப் பாராமல் பெண்களுக்கு அருங்கலமாகிய கற்பைக் காத்து வருவதும், கடவுளால் அளிக்கப்பட்ட மக்களை, நல் வழியில் வளர்த்து ஜன சமூகத்திற்கு உதவி செய்வதும் மனைவியின் கடமையாகும்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

சகோதரர்களே! அருமையாய்ப் பெற்று வளர்த்த தாய் தந்தையர்களையும், சிறு வயது முதல் இருந்து வளர்ந்த ஊரையும், உடன் பிறந்தோர்களையும், மற்றுமுள்ள பந்துக்களையும் விட்டு உங்களையே முற்றிலும் நம்பி வந்திருக்கும் உங்கள் மனைவியர்களை அடிமைகளைப் போல் நடத்தாமல், சமமாகப் பாவித்து அன்பாக நடத்தி வாருங்கள். அவர்களை உங்கள் உடலிற் பாதி என எண்ணி அவர்களுடைய நன்மை தீமைகளை உங்களுடையதாகப் பாவிக்க வேண்டும்.

உங்களிடத்தில் அன்பாகவும், கீழ்ப்படிதலோடும் நடந்து, உங்களுக்கு இன்பம் நல்கி உங்கள் க்ஷேமத்திற்காகவே இறைவனைப் பிரார்த்தித்து வரும் உங்கள் மனைவியர்கள் அறியாமையினால் ஏதாவது தவறு செய்தார்களாயினும், அவர்களைக் கடுமையாக நடத்தாமல், தவறுதல்களை எடுத்துக் காட்டிச் சாந்தமான வழியிலேயே சீர்திருத்த வேண்டும் உங்கள் மனைவியர்களுக்குத் துரோகம் நினைத்துப் பிற மாதரை இச்சித்து, அவர்கள் கண்ணீர் விடும்படி செய்யாதீர்கள். ''ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளை பொக்கும்'' ஜாக்கிரதை! ''எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் தண்டிக்கக் காத்திருக்கிறது.

# தயானந்த மகரிஷி.

திரு. எம். ஆர். ஜம்புநாதன் அவர்கள்.




தயானந்தர் 1824-ம் வருடம், அம்பாசங்கரன் என்னும் பிராமணனுக்கு, மூல சங்கரன் என்னும் மகனாய் காத்தியவாரி ஷ்ள்மோர்வி லேயே பிறந்தார். ஐந்தாவது வயதில், எண்ணும் எழுத்தும் கற்று, எழாவது வருடத்தில் பூணூலையும் காயத்திரியையும் கண்டார்.

குழந்தை பெரிய வீர சைவனாக வேண்டு மெனவும் அரிய குண சிவ பக்தனாக வேண்டு மெனவும் ருத்திரம், சமகம் முதலியவைகளை யெல்லாம் நன்றாய்க் கற்றுவித்து, தினந்தோறும் சிவ பூஜை செய்ய வேண்டு மென வற்புறுத்தி வந்தார்.

இங்ஙனம் நோக்கி வருங்கால் மகா சிவராத்திரம் வந்து விட்டது. அம்பாசங்கரன் ஜலம் துளியையும் பருகுவதில்லை என உபவாசமாகி, மூல சங்கரனையும் பசியோடிருக்கச் செய்து "சிவன் கோவிலில் கண்ணை விழிக்கலாம். என்னுடன் வாவும்" என தேவாலயத்திற்கு மகனை அழைத்துச் சென்று விட்டார். மாலை

உங்கள் மனைவியர்களை அடிமைகளைப் போல் நடத்தினால், அவர்கள் வயற்றில் பிறந்து, அவர்களால் வளர்க்கப்படும் உங்கள் மக்களும் அடிமைப் புத்தியுடனேயே இருப்பார்கள். வீர மக்களைப் பெற வேண்டு மென்னும் ஆசை இருந்தால், உண்மையான அன்பை அடைய வேண்டு மென்னும் விருப்பம் இருந்தால், உங்கள் மனைவியர்களுக்குச் சம சுதந்திரம் அளியுங்கள். மெல்லிய இதழ்களையுடைய அழகிய ரோஜா புஷ்பத்தைக் கசக்காமல் வைத்திருந்தால், மனதிற்கு இரம்மியத்தையும், உயர்ந்த வாசனையையும் அளிக்கின்றது. அது போல் உங்கள் மனைவியர்களைத் துன்புறுத்தாமல், அன்பாய் நடத்தினால் உங்கள் வாழ்க்கை இன்ப மயமாக விளங்கும்.

"அன்பு மறனும் உடைத்தாயி னில் வாழ்க்கை
பண்பும் பயனு மது."



யில் "நமப் பார்வதீ பதயே! ஹர ஹர மகா தேவா! பூம் பூம் மகா தேவா!" டங் டங் என மணி ஓசையுடன் கோவிலிலே எங்கும் முழக்கம். சிவப் பழங்கள் சாம்பலுடன் வெண்மையாகி, சிறந்த சிவ நாமங்களை சொல்வாராயினர். இரவு முதல் ஜாமம் இங்ஙனம் குதூகலத்துடனாயிற்று. அப்பால் பல அபிஷேகம்; தூபதீப நிவேத்தியங்கள். மெதுவாயும், மௌனமாயும், மணியோசையையும் நிறுத்திச் சிவனை நோக்கிய வண்ணமாய் பக்த கோஷ்டிகள் பரவசமானார்கள். இரண்டாவது ஜாமம் கழிந்தது. இரவு மணி பனிரெண்டு. "பரம சிவனுக்காகக் கண்களை இரவு முழுவதும் விழிப்போம்" என நினைத்தவர்கள் பெரும் நித்திரா தேவியின் வசத்திலாகி பக்தத்தி லிருந்தவரையும் கவனியாமல் கீழே விழுந்து அயர்ந்தார்கள். அம்பா சங்கரரும் மௌனமாகி கண் மூடினார். புரோகிதனும் தூக்கம் என்னும் பேரானந்தத்திலே தோய்ந்தான்.

"இரவெல்லாம் கண் விழிப்போம்" என சங்கற்பஞ் செய்தவர்கள் உறங்கி விட்டார்களே! நாம் தூங்கலாகாது என எண்ணி குளிர்ந்த ஜலத்தை எடுத்து அடிக்கடி கண்களைப் பரிசித்து நேரி லுள்ள பரமசிவனைக் கண்டு, மூக்கினால் தூப வாசனையைச் சுகந்தமாய் சுவாசித்து, அங்கங்கள் அசையாமல் மோனமாகி மனோமயக் கடலில் மூழ்கி பரமசிவா; மகா தேவா! என அடிக்கடி மொழிவார். இங்ஙனம் மொழிந்து சிவலிங்கத்தை உற்று நோக்குங்கால் ஒரு சிறிய எலி அங்குள்ள பழம் தேங்காயை எல்லாம் தின்று விட்டு, மகா தேவனின் சிரம் முதலிய பாகங்களில் சென்று விளையாடி இங்கு மங்கும் ஓடி பிறகு மறைந்து விட்டது.

மனோமயக் கடலிலே அமிழ்ந்த தயானந்தர், "இவர்தான் புராணத்தில் புகன்ற கைலாசவாசியான பரமசிவனா? திரிசூலம் தரித்து அரக்கர்களை அழித்தவரா? எங்கும் மங்களத்தை அளிக்கும் இவர் ஏன் எலியினால் தன்னை அழுக்காக்கிக் கொள்ள வேண்டும்? நானில்லை—இது எனது பிம்பம் என சும்மா யிருக்கலாமோ?" எனப் பலவாறு மனதில் நினைத்து என்ன செய்வது? எனக்கு

ஒன்றும் புலனாகவில்லை. சந்தேகத்தைத் தந்தையாரிடம் சொல்லுவோம் என அவரை எழுப்பினார்.

அப்பா! என் சந்தேகத்தை அறிவித்து விட்டேன். "இந்த ஜீவனற்ற சடமான மகா தேவனைச் சர்வ சக்திமானுள்ள பரஞ்சிவனான பரமேசுவரன் என நாம் எங்ஙனம் நினைக்கலாம்? இது அசம்பாவித மில்லையோ? நீங்கள் எனக்குத் தெளிவு செய்ய வேண்டுமென உங்களை எழுப்பினேன்" என மகன் கூறினான்.

மகனே! கலிகாலத்தில் மகா தேவன் நேர்முகமாய் தரிசன மளிப்பதில்லை. இதனால்தான் கைலாசவாசியான மகா தேவனுக்கு பிம்பஞ் செய்து, பிராணப் பிரதிஷ்டை செய்துள்ளோம். இதை மகா தேவன் என நினைத்துப் பூசை செய்தால் பரம சிவன் பேரானந்த மாவார். தன்னையே பூஜை செய்வது போல் எண்ணுவார். மகனே! உனக்கு நுண்ணறிவு உண்டு. உன் தர்க்க புத்தியோ பெரிதும் போற்றத் தக்கது. இவர் மகா தேவனில்லை; ஆனால் மாகா தேவனின் மூர்த்தி யாகும்.

இவ் விடைகள் இவருக்குத் திருப்தி யளிக்க வில்லை. சாந்தமுடன் கோவிலிலே இரவைக் கழிக்க மனமும் வரவில்லை. அனுவசியமாய் இக் கடின விருதத்தை ஏன் பற்ற வேண்டுமென, தந்தையினிடம் "நான் வீடு போகிறேன்" எனச் சொல்லி, அன்னையை யணுகி சில பலகாராதிகளைப் புசித்து நன்றாய் உறங்கி விட்டார்.

மறு நாட் காலையில் தந்தை மகனை நோக்கி கடுஞ் சொற்கள் கூறி இத் தர்க்கங்கள் உனக்கு வேண்டாம் என எச்சரிக்கை செய்தார். பிறகு மூல சங்கரன் இந் நினைவிலேயே ஆழ்ந்து இதன் உண்மை யாதென கற்குங் காலத்தில் சதா காலமும் சிந்தனையில் சாய்ந்திருக்குங்கால், தனது சகோதரி, இறந்ததும் மனத்திலே பெரும் பூகம்பத்தை யடைந்தார். உன் மாமனும் இறந்து விட்டான் என அன்னை சொல்லிய வுடன் சுடர்விட் டெரிவது போல் சிந்தனைப் பிழம்பிலாகி, என்ன செய்ய வேண்டுமென்பதில் சங்கற்ப மானார்.



நமது மகன் ஏதோ துக்கக் குறியுடன் தோன்றுகிறான். இளங் காளையாய் விட்டான். இவனுக்கு விவாகஞ் செய்து விட்டால், சாந்த மடைவான். என பெற்றோர்கள் எண்ணி மணஞ் செய்ய ஏற்பாடு செய்தார்கள். இனி வீட்டிலிருந்தால் பிரமசரியத்திற்குப் பங்கமாய் விடும் என எண்ணி ஒரு மாரிகால இரவில் பகவான் புத்தரைப் போல் தாய் தந்தையைத் துறந்து, உண்மையைக் காண உல்லாச வாழ்க்கையை உதறி வீடு அகன்றார். தான் அணிந்திருந்த ஆபரணங்களை யெல்லாம் வழிப் போக்கர்களுக்கு அளித்து விட்டு அமுத வாழ்க்கையின் அற்புத நிலை எங்கு? எனக் காண புவி சுற்றலானார். தாய் தந்தையர் அவரை மறுபடியும் கண்டு எத்தனை வற்புறுத்தியும் திரும்பவில்லை. கங்கை, நர்மதை, இமயமலை, விந்திய பர்வதம், காடு, நகரம், கிராமங்கள் எல்லாம் சுற்றித்திரிந்து ஒவ்வொரு பெரியாரையும் அணுகி, வட மொழியிலே அற்புதப் பாண்டித்தியம் பெற்று, பூர்ணானந்த சாஸ்வதிகள் என்னும் ஒரு மகா ராஷ்டிர சன்னியாசியினிடம் தீட்சை பெற்று, சுமார் 24-வது வயதிலே, ஸ்ரீ தயானந்த சரஸ்வதிகள் என்னும் துறவி நாமத்தைப் பெற்றார்.

அப்பால் மறுபடியும் பல சந்நியாசிகளை நாடி யோக சாஸ்திரத்தில் பெரும் பயிற்சி பெற்று, ஹரித்துவாரம், பத்திரி நாராயணம் முதலிய இடங்கள் சென்று, சிங்கம், புலி, கரடி, காடு, மலை, நதிகளால் கஷ்டமடைந்து திடமுடனாகி 'நான் பத்து வருஷ காலமாகச் சுற்றுகிறேன். நான் நாடும் அமுத கலசத்தை அளிப்பவர் ஒருவரு மில்லையே. ஞான சூரியனையும் மனோ சாந்தியையும் இன்னும் நான் பெறவில்லையே' என ஏங்கி சுற்றித் திரியுங்கால், மதுரா புரியிலே யமுனா நதியின் கரையோரம் விரஜானந்த சுவாமிகள் என ஒருவர் எலும்பும் தோலுமாக இருப்பதாகவும், அவர் அறிவே அவதாரம் எடுத்தவர் என்பதைச் செவியுற்று அந்த ஆசிரமம் சென்று கதவைத் தட்டினார்.

"யார் அங்கே!"

"தயானந்த சரஸ்தி."

"வியாகரணம் படித்திருக்கிறாயோ?"

‘‘சுவாமிஜியே! சாஸ்வதி முதலிய நிகண்டுகள் படித்துள்ளேன்.’’

பிறகு கதவைத் திறந்தார். ஸ்ரீ தயானந்தரும் அவரை அணுகி உட்கார்ந்தார்.

‘தயானந்தரே! நீர் இதுவரைப் படித்த நூல்கள் எல்லாம், ரிஷிகளால் எழுதப்பட்ட நூல்களில்லை. ரிஷிகளால் எழுதப்படும் நூல்கள் சுலபமாயும் சுதந்திரமாயும் தோன்றும். ஆனால் ஜனங்கள் இதை நாடுவதில்லை. அனார்ஷ நூல்களை நீக்கும் வரை ரிஷிகளின் நூல் அருமை உனக்குப் புலனாகாது. என்னிடம் கற்க உனக்கு இஷ்டமுண்டானால், மனித நூல்களை எல்லாம் எறிந்து விட்டுப் புதிய மனிதனாய் என்னிடம் வரவும். படிப்பதைத் தவிர வேறு வேலையுடன் என்னிடம் கற்பது கஷ்டம்’ என விரஜானந்த சுவாமிகள் சொல்லியவுடன், ‘நான் யாவற்றையும் அங்கீகாரஞ் செய்கிறேன்’ என தயானந்தர் நமஸ்காரம் செய்தார்.

சுமார் இரண்டு வருடம் அவரிடம் மகா பாஷ்யம் வேதம் முதலியவைகளைக் கற்றார். பெரும் பண்டிதராகி, மனோ சாந்தத்தையும் பெற்று இனி அமுத வாழ்க்கை நடத்த வேண்டுமென எண்ணி, ஆசாரிய சுவாமிகளுக்கு குரு தட்சணை என சில கிராம்புகளை அளித்து என்னிடம் வேறு எது கிடைக்கும் என மரியாதையுடன் அவர் பாத கமலங்களில் விழுந்தார். உடனே ஆச்சாரிய சுவாமிகள்:- குழந்தை! உனக்கு எங்கும் மங்கள முண்டாகும். உன்னிடமுள்ள வேறு குரு தட்சணையையே நான் விரும்புகிறேன்.

‘குருநாதரே! என் தேகத்தை உங்களுக்கு அளித்து விட்டேன். நீங்கள் எது சொன்ன போதிலும் நான் அதற்கேற்றவாறு நடக்கக் கடமைப்பட்டுள்ளேன். குருநாதரே கட்டளை செய்யுங்கள்’ என ஸ்ரீ தயானந்தர் வினயமுடன் வணங்கினார்.

விரஜானந்தர் உற்சாகமானார். முகம் ஆனந்தாமுதமாகி ஆசீர்வாதஞ் செய்து குழந்தையே, ‘‘ஏழை எளியவர், அறியாதவர்கள் பாரத நாட்டில் அதிகமாய் விட்டார்கள். அவர்களை எழுச்சியாக்க



வும், பற்பல மதங்கள் அதிகரித்து எங்கும் அனாசாரம்; அனாசாரங்களை எல்லாம் அழிக்கவும், சீரழிந்துள்ள ஆரிய ஜனங்களை மறுபடியும் புனர் உத்தாரணஞ் செய்யவும், புராணப் புரட்டுக்களை எல்லாம் அழித்து மறுபடியும் வேத தர்மத்தை ஸ்தாபனஞ் செய்யவும், இறந்து போன சமூகத்திற்கு மறுபடியும் புத்துயிரை அளிக்கவும்’’ என மொழிந்தார்.

ஸ்ரீ தயானந்தர் மறுபடியும் குருவின் பாத கமலங்களைக் கட்டித் தழுவி ‘நான் அங்ஙனமே செய்வேன்’ என வாக்குறுதி செய்தார். குருநாதர் மறுபடியும் குருநாதரின் தலையிலே கைகளை ஆசீர்வாதஞ் செய்து ‘தயானந்தரே, நீங்கள் இனி தரணிசுற்றலாம். தலைவன் உங்களுக்கு அருள் புரிவார். நீங்கள் நினைப்பது போல் நடக்கும்’ எனக் கருணை பொழிந்தார்.

குருநாதரை அகன்றதும் சுவாமிகள் வட நாடெல்லாம் சுற்றி, புராணப் புரட்டு மத மதாந்திரங்களின் அடாத செயல்களை யெல்லாம் பகிரங்கஞ் செய்து, நாட்டிலே புது உணர்ச்சியையும் புது உற்சாகத்தையும் புலனாக்கினார். ஆதி மதம் வேதமாகும். வேதத்தினின்றே எல்லா மதங்களும் தோன்றியது. வேதத்தைப் புவியிலுள்ளவர்கள் எல்லாம் படிக்கலாம். சமத்துவத்தையும் சம தர்மத்தையும் செம்மையாக்கும் நூலே வேதமாகும். வேதப் பிரசாரம் தோன்றினால் மறுபடியும் பாரத நாடு பழம் பெருமையைப் பெறும். புரோகிதர்களையும் சுயநலக்காரர்களையும் அழிக்க வேண்டுமென எங்கும் கர்ச்சனை செய்தார். விக்ரக ஆராதனையால் இந்தியாவில் விபசாரம் அதிகரித்து, ஆண்மைத் தனமும் அகன்று விட்டது. வேத தர்மத்திலே விக்ரகாராதனை இல்லை என எங்கும் சங்கநாதஞ் செய்யவே, பெரும் விரோதிகள் அதிகரித்து, அவர் பிராணனுக்கும் பல முறைகள் விபத்து நேரிட்டு விட்டன. அவர் எந்த விபத்தையும் கவனியாமல் பிரசாரஞ் செய்து, இந்திய தளபதியான லார்டு ராபர்ட்ஸ், இவர் வீரன் எனச் சொல்லும் வண்ணம் பெரும் பெருமையும் அடைந்தார். குழந்தைக் கல்வி கட்டாயமாக வேண்டும். குரு குலங்கள் அத்தியாவசியமாகும். அனாதாலயங்கள், கன்னியாலயங்கள் முதலியவைகளில் கவனஞ்

செலுத்த வேண்டும்; ஹிந்தி பாஷை எங்கும் நிலவ வேண்டும்; வேதம் பிரசாரமாக வேண்டும்; கலெக்டர், கவர்னர் என அஞ்ச வேண்டாம்; "சத்திய மொன்றுக்கே அஞ்சவும்" என எங்கும் சுற்றி உபந்நியாசங்கள் செய்து, சங்கங்கள் அபிவிருத்தியாக வேண்டுமென்னும் எண்ணத்துடன் ஆரிய சமாஜம் என்னும் ஆரியர்களின் சங்கங்களை ஸ்தாபனஞ் செய்தார். தயானந்தரின் பெருமையை கர்னல் ஆல்காட்டு அமெரிக்காவில் அறிந்து, 'நீங்கள் இங்கு வரவேண்டு' மென விரும்பியதற்கு 'எனது நாடு நெருப்பிலே எரிந்து அழிந்து போகும் நிலையிலிருக்குங்கால், நான் அங்கு எங்ஙனம் வருவேன்' என மறுத்து விட்டார்.

இங்ஙனம் சுவாமிகள் புகழுடன் தேசப் பணியை செய்து வருங்கால் நாட்டிலுள்ள சிற்றரசர்களும் அவரைக் காண விரும்பினார்கள். ஜோட்பூர் மகாராஜா, சுவாமிகளைத் தன் தேசத்திற்கு வரவேண்டுமென அழைத்திருந்தார். அந் நாட்டில் அநேக சிற்றரசர்களுமுண்டு. சுவாமிகளின் சிறந்த உபதேசத்தைச் செவியுற்று, அந் நாட்டு அரசர்கள் ஒழுக்கமுடனாகவே, அந்தச் சிற்றரசர்களை அணுகியிருந்த சில சுயநல வாதிகள் சுவாமிகளை அழிக்க வேண்டுமெனக் கருதி, விஷத்தை அவர் ஆகாரத்தில் கலந்து விட்டார்கள். விஷம் தேகம் முழுவதும் பாய்ந்து, சிகிச்சை செய்து கொள்ள ஆஜ்மீர் சென்றார். அங்கும் குணமாகாமல் தேகம் கழிந்து, தரணி நீங்கினார்.

இச் செய்தியை அறிந்தவுடன் நாட்டிலுள்ள ஆர்யர்கள் எல்லாம் அங்கு கூடினார்கள். லாலா லஜபதிராயரும், மகாத்மா ஹன்ஸராஜரும், சுவாமி சிரத்தானந்தரும் 'இனி வாழ் நாட்களை அவர் நோக்கத்திற்குத் தத்தம் அளித்தோம்' என விரதமெடுத்தார்கள். ஆரிய சமாஜமும் அற்புத ஊக்கத்துடன் வேலை செய்ய ஆரம்பித்தது. அந்த அற்புத புருஷரின் ஒரு எண்ணமே லட்சக் கணக்கான ஜனங்களை உற்சாகத்துடன் இன்னமும் வேலை செய்யச் செய்துகொண் டிருக்கின்றது. அவ் வான்மா நித்தியமான சாந்தத்தில் அமைய வேண்டுமென ஈசனைப் பிரார்த்தனை செய்கிறோம்.

---

# தேசீய இயக்கம்.

திரு. R. K. ரங்கன் அவர்கள்.

கல்வி, மதம், உடை, உணவு இவை எவ்வளவு இன்றியமையாதனவாக இருக்கின்றனவோ அது போலவே தேசப் பற்று என்பது ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாதது. உலகத்தில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பிறப்புரிமையுண்டு. அப் பிறப்புரிமையை நிலைநாட்ட முயல்வது மக்கள் கடமை ஆகும். பிறப்புரிமையைப் பேண வேண்டுமானால் தேசீய உரிமை அகத்தியம். நம் வீட்டில் மட்டும் உரிமையாயிருப்பது உரிமையல்ல. வீட்டில் உரிமையாயிருந்தாலும் நாம் வேறு அரசாங்கத்திற்கு அடிமையாகிக் கூட்டில் அகப்பட்ட பறவையைப் போல வருந்துகின்றோம். ஆதலால் நம்முள் ஒவ்வொருவரும் இந்த ஆங்கில அரசாங்கச் சிறையிலிருந்து வெளிப் போந்தாலன்றி நமக்கு உரிமை கிடையாது என்பது வெள்ளிடைமலை.

அச் சிறையிலிருந்து உய்வு பெற வேண்டுமானால், நாம் எல்லோரும் ஒருமைப்பட்டு அதினை அகற்ற முயல வேண்டும். அதற்குத்தான் மகாத்மா காந்தி முதலான பெரியோர்கள் சகோதரத்வம், சமத்துவம் முதலானவற்றைப் பேணும்படி கூறுகின்றார்கள். எப்பொழுது சகோதரத்வமும், சமத்துவமும் நம்மிடத்தில் வருகின்றனவோ அப்பொழுதே இந்தக் கொடிய அரசியற் சிறை அகலும்.

உலகத்தில் எதற்கும் இடையூறுகள் குறுக்கிடுவது வழக்கம். அது போலவே இதற்கும் மத வேற்றுமை முதலியன குறுக்கிடுகின்றன. நாம் இதனால் நம் உறுதியைக் கைவிடுவது நன்றன்று. அவற்றையும் நாம் நம் தேசீய உரிமைக்குத் தடையாகாதவாறு இணக்கிக் கொண்டு செல்ல வேண்டும். எந்த வேறுபாட்டையும் நியாயமான முறையில் அறவே யொழிப்பதுதான் முறையாகும். ஆதலால், அஹிம்சா தர்மத்தை மேற்கொண்டு நம் தேசீய உரிமையை பெற வேண்டும். நாம் இச் சமயத்தில் நம் காந்தி அடிகள்

போன்ற மஹாத்மாக்க ளிருக்கின்ற இந் நாளில் நம் சுதந்திரத்தை யடையாமல் எச் சமயத்தில் அடையப் போகின்றோம்?

மகாத்மா காந்தி அடிகள் போன்றவர்கள் நமது தேச நிலைமையை புனருத்தாரணம் செய்யவே தலைப்பட்டிருக்கின்றார்கள். நமது பாரத நாடு பண்டைய நாளில் எந் நிலைமையி லிருந்தது? கல்வியிலும், தொழிலிலும், செல்வத்திலும், தர்மத்திலும் ஒரு பான்மையாகவே வளப்பமுற்றிருந்த இந்த நாடு இப்பொழுது எந் நிலையிலிருக்கின்றது? பாரத மக்களே! உணருங்கள் அப்பேர்க்கொத்த நமது தாய்நாடு இப்பொழுது வறுமையால் பீடிக்கப்பெற்று அன்னிய அரசியலில் சிக்குண்டு மயங்கிக் கிடக்கின்றது. இந்திய மக்கள் அன்னியர்களால் ஏளனம் செய்யப்பட்டு உடுக்க உடையில்லாமலும் உண்ண உணவில்லாமலும் தலைவிரி கோலமாய்த் தத்தளிக்கவும் காலம் நேரிட்டதே. ஆதலால் பாரத வாசிகளே, உயிரை யிழந்தாலும் சுதந்திரப் போரை கைவிடோம் என்ற உறுதியோடு எழுங்கள்! நம் போரைக் கைவிடாது கடத்துவோம். சுதந்திரத்தை நிலை நாட்டுவோம்.

இப்பொழுது தேசியக் கிளர்ச்சி இளஞ் சிறுவர்கள் முதலாக முதியவர் இறுதியாக எல்லாரிடத்தும் பரவி யிருக்கின்றது. பாரத தேவியின் தளைகளைக் களைய இன்று நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அறப்போர் நடந்து கொண்டிருக்கின்றது. இந்தியர் ஒவ்வொருவரும் அதை நன்கு அறிந்து மிருக்கிறார்கள். அதனை மேலும் கடைப்பிடித்துக் கடைசி வரையில் உறுதியாகச் செலுத்துவோமானால், உண்மையை அறியாது தனது விடாப் பிடியை தளர விடாது செருக்கி யாளும் பான்மையோரால் நமக்குண்டான துன்பத் தளை அவிழ்ந்துவிடு மென்பதற் கையமில்லை.

தீண்டாமை ஒழிக! சகோதரத்துவமும் சமத்துவமும் ஓங்குக! மனத்தின் கண்ணுற்ற மாசு மாய்க! கொடுங்கோலரசியல் வீழ்க! நம் பாரத மாதா துயரமொழிந்து பண்டைச் சிறப்பை எய்தி நலம் ப… கெழுமிய அணிகலங்களோடு சிறந்தோங்குமாறு கடவுள் இன்னருள் புரிவாராக.

---

# அன்பு.

## ஸ்ரீமதி. P. S. அரங்கநாயகி அம்மாள்.

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

அன்பு எனும் பண்பானது மக்கட்கு ஓர் பெறற்கரும் பேறாக அமைந்துளது. இந் நில உலகின்கணுள்ள மக்கட் பகுதியனைத்தும், இவ் வுயரிய அன்பெனும் பண்பினுலே பிணிக்கப் பெற்றுளது. மக்கட்கு இறையருளால் நல்கப்பட்டுள்ள பல்வகைப் பண்புகளுள் தலையாயது அன்பெனும் பண்பே யாகும்.

அன்பெனும் பண்பின் தன்மையை நாம் சொல்ல வல்லேம் அல்லேம். உலகிடை முதன் முதலாக மகவு தோன்றியதும் தன் தாயிடத்து அன்பைப் பெறுகின்றது. அம் மகவு வயிற்றினின்றும் வெளிப்படுங்காலை அத் தாய் படுந் துயர் அளவிடற் பாற்றோ? அந்தோ! பொறுத்தற்கரிய அப் பெருந் துன்பமும் அத் தாய்க்கு,

"வயாவும் வருத்தமும் ஈன்றக்கா லேனவும்
கவான் மகற்கண்டு தாய்மறந் தாஅங்கு"

தன் மடிமீதுள்ள குழவியை—அன்பே உருவாய் அமைந்த அம் மகவைக் கண்ணுற் கண்டதும், சில் விநாடிகட்கு முன் தான் அடைந்த துன்பத்தை அனைத்தும் காற்றின் முன் பஞ்சே போன்று பறந் தோடினபோலாம். ஆ! என்னே அன்பின் திறன்! பின்னரும் அக் குழவியைப் போற்றி வளர்க்குங்காலை, அத் தாய் தன் சேயிடத்துக் காட்டும் அன்பை எந் நாவால் நவில இயலும். அருமை மகவு தன் மீது, அனைவராலும் வெறுக்கப் படுகின்ற மல ஜலங் கழிப்பின், அத் தாய், ஜலத்தைப் பன்னீராகவும், அம் மலத்தை அமிழ்தமாகவுங் கருதி, இஃது இல்லையே என யான் பல்லாண்டு தவங் கிடந்தேன் என்பாள். மேலும் அம் மகவு நோய் வாய்ப்படின் அந் நோய் குணம் பெறும் மட்டும் நாட்கள் கணக்காகவும், மாதக் கணக்காகவும் அன்பென் பண்பின் பெருக்கால், ஊண் உறக்க மின்றி மகவின் பொருட்டு அன்னை தன்னுயிரையும் ஈய முற்படுகின்றாள். அந்தோ! அன்னையின் அன்பு என்னே! என்னே!

மாசற்ற அன்பை—தேசுற்ற அன்பை அன்னையிடத் தன்றி வேறு யாரிடத்து அடைவேம். மக்களாய்ப் பிறந்தோர் ஒவ்வொருவர்க்கும் தத்தம் தாயன்பே தலை சிறந்த அன்பாம்.

"தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை."

தாயிடத்தே பழகிய குழவி மெல்ல மெல்லத் தந்தை யிடத்தும் பழகி இரண்டாவ தன்பாகத் தந்தை யன்பைப் பெறுகின்றது. தாயன்பு போன்ற மாசற்ற அன்பைத் தந்தையிடங் காண்டல் அரிது. பெற்றோர் உண்ணுங்காலை, தம் குழவி தம்மை அணுகின் வேண்டாமென எங்ஙனம் மறுப்பர். இவர்தம் ஊணின் அருமையை அப் பசுங் குழவி அறியுங் கொல்? அக் குழவி தன் இளங் குறும்பால் அவ்வூணை தன் கையாலும், காலாலும், பிசைந்த, உதறிய, சிதரிய உணவைப் பெற்றோர்கள்,

"அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள்
சிறு கை யளாவிய கூழ்"

அமிழ்தினும் சிறந்த உணவாகக் கருதி உட்கொள்வர். தெய்வாம்சம் பொருந்திய தம் பச்சிளங் குழவியின் ஆடல் பாடல்களைக் காணின், தாய் தந்தையர் தத்தம் தொழிலால் அவர்கட் குண்டாகும் சோர்வும வருத்தமும் ஞாயிற்றின்முன் பனி போன்று நீங்கும். பெற்றோர் தாம் உற்சாகம் பெறவோ அன்றிச் செவி யின்பம் நுகரவோ சங்கீதக் கச்சேரிக்குச் செல்லாணி (பணம்) கொண்டு செல்ல மாட்டார்.

"குழலினி தியாழினி தென்ப தம்மக்கள்
மழலைச் சொல் கேளா தவர்."

பெற்றோர்க்குத் தம் மக்கள் குறுகிய வடிவோடு, சிறுகிய நடைகொடு; குமுதச் செவ்வாயால், அமுதச் சொல் மிழற்றின், அதுவே தமக்கு குழலினும் யாழினும் இனிதா மென்பர். வீணையின் பத்தை வீணின்ப மென்பர். ஆதலின் "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" என்பதற் கொப்பான அன்பைப் பெற்றோரிடத் தன்றி மற்றோரிடத்துக் காணல் அருமை; அருமை; அருமையினும் அருமை.

இத்துணை அருமை பெருமையாக வளர்த்த குழவி வளர, நல்லறிவுடன் நெறி வழுவாது இருப்பின், பெற்றோரின் அன்பு



அளவிடற் பாற்றன்று. ஆயினும் இதற்கு நேர் எதிர் மாறாகப் புல்லறிவொடு நெறி தவறி யொழுகும் மகவாயின், தந்தையானவர் அப் பிள்ளையைத் துன்புறுத்தித் தன் பிள்ளை அன்று என வீட்டினின்றும் விலக்கி விடுவர். அது முதலாகத் தந்தை அப் பிள்ளை மீது இறுதிக் காலமளவும் வெறுப்புற்றே இருப்பர். சில நாளிலும் மகவை மறந்தும் விடுவர். ஆனால் தாயோ எனின், முன்னிலும் பன்மடங் கன்போடு அப் பிள்ளையின் மீதே நினைவுற்றுத் தன் நினைவற்று, ஏக்குற்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவே விளங்குவர். போன மகவு திரும்பி வர வரம் வேண்டி நோன்பு நோற்று இறையை இறைஞ்சுவர். தன் மகவு இன்று வருவன், நாளை வருவன் என வாயிலையே நோக்கிய வண்ணம் பார்த்த கண்ணும் பூத்து நிற்பள் அன்பே வடிவாம் அன்னை. அந்தோ! "பெற்ற மனம் பித்து" என் செய்வள். ஒன்றன் மீது அளவு கடந்த அன்பைச் செலுத்தின் பித்து (பைத்தியம்) என்பர் உலக வழக்கோர். இந் நிலையில் எதிர்பாரா வமயம் மகவின் வரவு நேரின், அதுகாலை அப் பொல்லாச் சேய்பால் தாய்க்குள அன்பை எவ்வுரையான் உரைக்க வல்லேம்.

"பொல்லாத சேயெனின் தாய்தள்ளல் நீதமோ?
புகலிடம் பிறிது முண்டோ?"

என்னும் பெரியாரின் அமுத மொழி பொய்யாமோ? பிரிந்தவர் கூடின் பேசல் வேண்டுமோ? அன்னைக்கு அம் மகவைக் கண்டதும்,

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்."

என்னும் பொய்யா மொழியாரின் புனித வாக்கினுள்ளதே போன்று, கண்ணீரால் வரவேற் றுபசரித்து, நல்லறி வூட்டி ஆட்கொள்வள் அன்பாம் அன்னை. ஆனால் தந்தையோ பழம் வெறுப்பை மாற்றாது அம் மகவின்பால் அன் பின்றித் துன்பே விளைப்பர். என்னே! அம்மைக்கும் அப்பனுக்கும் உள்ள வேற்றுமை.

பிள்ளைகள் பெற்றோரின் அன்பால் வளர்ந்து உலகிடை உலவுங்காலை அவர்கள் பல நண்பர்களை அடைவர். நண்பர்களை எங்ஙனம் அடைவர்? அன்பால் அடைவர். இவ் வன்பு பெற்றோரிடத்துக் கண்ட அன்பு போன்ற தன்று. பெற்றோர் கைம்மாறில்லா அன்பை நமக் கீவர். ஆனால் இந் நண்பரிடத் தன்போ எனின், ஒருவர்க்

கொருவர் கைம்மாறு கருதிய அன்பாம். நம்மிடத்துள்ள அன்பை பிறர்க்குத் தந்து பிறருடைய அன்பை நாம் பெறல் வேண்டும். நண்பரிடத்து அன்பு உண்டாதற்குக் காரணம் நம்பிக்கையேயாம்.

"நம்பலென் பதுவே அன்பின் நிலைமை."

முதன் முதல் நாம் பிறரிடத்து நட்புக் கொள்ளுங்காலை, அன்னாரிடத்து உண்மையான அன்பு உண்டா? இன்றா? என்பதனை யறிந்த பின்னரே அன் பளித்து, நண்பராகின்றோம். பெற்றோரிடத் தன்றி யாவரிடத்தாயினும் நம்பல் என்பது ஒன்றின்றேல், அவரிடத்து அன்பும் இன்று, ஆதலின் உலகோர் அனைவரும் அன்பெனும் கயிற்றால் பிணிக்கப்பட் டிருத்தற்கு முதற் காரணம் நம்பிக்கையே. நம்பிக்கையினாற்றான் உண்மை அன்பும் அரும்பும். நம்பிக்கை அன்பாக மாறி அன்பு நண்பாக மாறுகின்றது.

நண்பர்க்குப் பின்னர், ஒருவர்க்கொருவர் ஒத்த, குணம், குலம், அழகு, பருவம் முதலியன பொருந்திய நாயகி, நாயகராகி, இயற்கை அன்பு ஊற்றெழப் பெற்று, இருவோரும் இணை பிரியா அன்பராக இல் வாழ்க்கையை நடாத்துவர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் வாழ்க்கை
பண்பும் பயனு மது."

என்பதற் கொப்ப, இல் வாழ்வோர்க்கு அன்பும், அறமும் இன்றியமையாத குணங்களாம். நாயகி, நாயக ரிருவரும் இல் வாழ்க்கையி லிறங்கிய பின்னர், வைகலும் வரும் விருந்தினர்க்கும், இரப்போர்க்கும், துறப்போர்க்கும், பெற்றோர்க்கும், உற்றோர்க்கும், தம் மக்கட்கும், அனைவர்க்கும் தம் அன்பைப் பங்கிடல் வேண்டும். அனைவர்க்கும் பகிர்ந்து, அனைவரின் ஆசிர்வாதங்களையும் பெற்றுப் பேறடைகின்றனர்.

ஓர் மகவு பிறந்ததும் முதலில் தாயன்பையும் பின்னர், தந்தை யன்பையும், நட்பினர் அன்பையும், நாயகி, நாயகர் அன்பையும், உற்றார், உறவினர், மற்றோர், மறையவர் முதலிய அனைவரின் அன்பையும் அடைந்து முடிவுற்றதும், ஆண்பாலராயின் தம் வாழ்நாட்களின், பால, யௌவன, கௌமாரகம் ஆய முப் பருவங்களும் நீங்கி, விருத்தாப்பிய தசை யடையின். பெண்பாலராயின், அரிவை, தெரிவை, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை முதலிய பருவங்கள் நீங்கிப் பேரிளம் பெண் என்னும் பருவத்தை



யடையின், அதுகாலை அன்னார் யாவர் அன்பைப் பெற முயலல் வேண்டும்? பரவை சூழ் பாரனைத்தையும் ஆக்கல், காத்தல், நீக்கல் ஆகிய முத்தொழிலையும் ஒருங்கே நிகழ்த்தி வரும் ஒப்பில்லாத அப்பனும் ஆண்டவனின் அன்பை யன்றோ அடைய முயலல் வேண்டும். இம் மாய உலகோரின் பொய் யன்பைப் பெறவே மானிடர் எத்தனை சூழ்ச்சிகள் புரிகின்றனர். அச் சூழ்ச்சிகளால் பயனின்றேல், பின்னர்தான் தம் பொய்ச் சூழ்ச்சிகள் மறைய நம்பிக்கையை உண்டாக்கிக் கொள்கின்றனர். நம்பிக்கை ஏற்பட்ட பின்னர்தான் அகம் நிறைந்த அன்பைப் பெறுகின்றனர். மக்கள் பிறரிடமிருந்து அன்பைப் பெற வேண்டுமேல், அன்னார்பால் சூழ்ச்சிகளால் பொய்யன்பை மெய்யன்பாகக் காட்டுகின்றனர். அப் பொய்யன்பை மெய்யன் பெனவே சிலர் மயங்கி விடுகின்றனர். அதே போன்று ஆண்டவனின் அன்பைப் பெற மக்கள் பல பொய்ச் சூழ்ச்சிகள் புரிகின்றனர். ஆடறுக்கின்றேன், மாடறுக்கின்றேன், கோழி யறுக்கின்றேன், தாழி யுடைக்கின்றேன், மொட்டை யடிக்கின்றேன் என்னும் பல்வகைச் சூழ்ச்சிகள் புரிகின்றனர் புல்லறிவாளர். என்னே! இவர் மதி இருந்தவாறு என்னே!! அருளுருவாம் ஆண்டவனோ இப் பொல்லாச் சூட்சிகட்கு மயங்குபவன்? ஆண்டவன் அன்பைப் பெற வேண்டுமேல் முதலில் தன் னம்பிக்கையை அறவே நீத்து, தன் முழு மனதோடு முழு நம்பிக்கையும் ஆண்டவன் பக்கலே செலுத்தல் வேண்டும். அங்ஙனம் செலுத்தல் மிக எளிதன்று. தன் னம்பிக்கை தன் மனத்தை விட்டு எளிதில் அகலுங் கொல்? நம் தமிழ் நாட்டுத் தவ மணிகள் பாடிய அருட் பாக்களும், தாயுமானார் பாடிய தெய்வ மணங் கமழ் செய்யுட்களும் கல்லையும் மண்ணையுங் கூட உருக்கும் பான்மைத் தன்றோ? அவர்கள் போன்ற ஞானிகள் அப்பாடு பட்டும் ஆண்டவனின் அன்பைப் பெற முடியாது தவித்திருக்க, நம் போன்ற பேதையர் புரியும் சூழ்ச்சிகட்கா மயங்கி ஆண்டவன் அன்பை அருளுவர்.

மகா பாரதத்தின் கண் பாஞ்சாலியைத் துகிலுரிதற் கிழுத்துச் செல்லுங்காலை, சபையோரின் முன்னிலையில் துச்சாதனன் துகில் உரிய மாட்டான் என முதலில் மந்தாகினியின் மதலையாகிய துரியோதனனை நம்பினாள்; பின்னர் சபையோரையும், தன் நாயக

# பாலிய விவாகம்.

ஸ்ரீமான் E. V. சுப்ரமண்யம் அவர்கள்.




இரண்டொழிய வேறில்லை” என்னும் முது மொழிக் கொப்ப ஆண், பெண் என இரு பிரிவு களைக் கடவுள் (இவ் வுலகின்கண் ஜீவிக்கும் ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலுள்ள உயிர்த் தொகைகளின் சந்ததி, முறையே வளர்ந்துகொண்டு வருமாறு) ஏற்பாடு செய்தருளி யிருக்கின்றார்.

நம் மூதாதைகளி லனேகர், விவாகத்தைப் பதினைந்து வயதிற்கு மேற்பட்ட கன்னிகைகளுக்கும் 30 வயதை யுடைய ஆண் மகனுக்குமாகச்

---

ரைவரையும் நம்பி ஒன்றும் பயனிலவாக; தன் ஒரு கையை நம்பி அவ்வொரு கையால் தன் துகிலை இறுகப் பிடித்துக் கொண்டு, துவாரகையிலுள்ள கிருஷ்ண மூர்த்தியை விளித்து, “கிருஷ்ணா! நான் உன்னையே நம்பினேன். வேறு புகலிடம் இல்லை; நீயே கதி. என் துகிலை உரியாது காத்து எனக்கருள் புரிவாய். கோவிந்தா! கோவிந்தா!!” என அரற்றினள். ஒரு கையால் துகிலைப் பற்றிக் கொண்டு மற்றொரு கையால் துதித்தாள். அந்தோ! தன்னை முழு தும் நம்பாது, தன் ஒரு கையை நம்பி ஒரு கையால் துதிக்கும் தோத்திரத்தைக் கிருஷ்ண மூர்த்தி தன் செவியில் ஏற்காது, வாளா யிருக்க, பாஞ்சாலியும் தன்னை யறியாது தன் செவியில் “நம்பிக் ‘கை’ விடு,” எனும் உபதேச மொழி ஒலிக்க, உடனே தன் துகில் பற்றி யிருந்த மறு கையையும் விட்டு இரு கையாலும் துதிக்க, உடனே அம் மாயனும் வந்து மறைமுகமாக உதவி புரிந்தனன் என்பர். ஆதலின், நாம் ஆண்டவனை நம்பி நற்பேறடைய வேண்டு மேல், கள்ளமிலா உள்ளமொடு, முழு நம்பிக்கை கொண்டு ஆண்ட வனை வழிபடல் வேண்டும். உலகில் தாயன்பே தலை சிறந்த தென மேலே கூறினோம். அத் தலை சிறந்த தாயன்பினும் ஒப்பற்ற உயரிய அன்பை ஆண்டவ னிடத்தே தான் அடைய முடியும்.

“தாயிலு மன்பன் பூமகள் நண்பன்.”

அன்பினும் சிறந்த தொன்றின் றாகலின், தாயினு மன்பனான பூமகள் நண்பனின் புனித அன்பைப் பெற அனைவோரும் முயல்வோமாக.



செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதனால் அம் மணமக்கள் ஒற்றுமையாய், இல்லற வாழ்க்கையின் உண்மையை யறிந்து, திடகாத்திர மான புத்திரப் பேற்றை அடைந்து வந்தனர் என்பது அனேகரின் துணிபு.

அப்படி இருக்க, நம் மக்களி லனேகர் தக்தம் குழவிகளுக்குச் சிறு வயதிலேயே விவாகத்தை முடித்து விடுகின்றனர். இதனால் விளையும் இடுக்கண்கள் சொல்லத்தரமன்று! நிற்க. சிறு குழந்தைகளுக்கு (அவர்கள் விவாகத்தின் தன்மையைச் சரிவர அறிந்துகொள்வதின் முன்பே)-விவாக மென்னும் பந்தத்தில் இணைக்கப்பட்டால், அவர்கள் தம் இளம் பிராயத்தி லேயே காதலென்னும் கடலி லாழ்ந்து மக்கள் பலவீனரு, தக்க வயதில் பலவீனம், கோழைத்தனம் முதலிய வற்றிற்கு ஆளாகித் தேசத்திற்கும், மக்களுக்கும் ஓர்வித நன்மையும் செய்ய சக்தி யற்றவர்களாகப் போய்விடு கின்றனர். மேலும் இள வயதிலேயே பெண்கள் இன்ப நுகர்ச்சியில் ஈடுபட்டு வருவதில் சிறு வயதிலேயே மக்களைப் பெறுகின்றனர். “நூலைப்போல் சீலை” என்னும் முதுமொழிக் கிணங்க தாய் தந்தையர் திடகாத்திராயும், மனோ வன்மையில் சிறந்தவராயும் இருப்பரேல் அன்னார்க்குப் பிறக்கும் குழந்தைகளும் திடகாத்திர மாகவே இருக்கும். அப்படி யிருக்க, சிறு போதே பலவீனப்பட்டு நடை பிணம்போல் ஆகிவிடும் தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் எவ்வண்ணம் சிறந்து விளங்கும் என்பது வாசகர் களுக்கு விளங்காமல் போகாது!

இப் பாலிய விவாகத்தின் கொடுமைகளில் முக்கியமானது ஒன்று நம் மனதைப் பாதிக்கிறது. அதாவது இளைய தம்பதிகளில் பெண் இறந்து விட்டால், கணவன் வேறு மணம் புரிந்துகொள்ளுகிறான். கணவன் இறந்தாலோ! ஐயோ! எவ்வளவோ கஷ்டம்! பரிதாபம்! பரிதாபம்!! 16 வயது பூர்த்தியாகாச் சிறுமி விதவை! என்னே காலத்தின் கோலம்? “ஏன்! விதவைகள் ஏன் மறு மணம் புரிந்துகொள்ளக் கூடாது?” என சிலர் கேட்கலாம். மறு மணம் புரிந்துகொள்ளச் சில பெண்கள் ஒப்புவ தில்லை. மேலும் விதவா விவாகத்திற்குப் பலமான எதிர்ப்புகள் உள்ளன! ஆனால் அவ் வெதிர்ப்புகளுக்கு ஒப்புக்கொண்டாலோ ஓர் பெண் வீணாகத் தன் காலத்தைத் துக்ககரமாகவே கழிக்கிறாள். ஆகலின் பாலிய விவா கத்தில் நேரும் இத்தகைய துன்பங்களைக் கவனிக்குமிடத்து மறு மணம் புரிந்துகொள்வதே உசிதமெனத் தோன்றுகிறது. ஏனெனில் சில பெண்கள் பருவம் அடைவதற்கு முன்பே விதவைகளாகி விடுகின்றனர்! ஆகையால் விதவா விவாகமும் உசிதமே என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளத் தகுந்ததே. நிற்க, (கீழ்க்கண்ட) 1921-ம வருஷத்திய ஜனத் தொகையின் கணக்குப்படி சென்னை இராஜதானியி லுள்ள பாலிய விதவை

களின் கணக்கை நோக்கினுல் எவர்தான் மனத் தாங்கலடையார்? எவர்தான் விதவ விவாகத்தை ஆதரியார்?

| | வயது | 0–1 | 1–2 | 2–3 | 3–4 | 4–5 | ஆக 0–5 | 5–10 | 10–15 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இந்து மதம் | 62 | 58 | 163 | 299 | 612 | 1194 | 5651 | 22,209 |
| 2 | முஸ்லிம் ,, | 8 | 2 | 6 | 13 | 12 | 41 | 198 | 715 |
| 3 | கிறிஸ்தவர் ,, | 1 | 1 | 1 | 3 | 12 | 18 | 81 | 211 |
| 4 | மற்றவர் | 2 | 3 | 8 | 14 | 18 | 45 | 1171 | 351 |
| | மொத்தம் | 73 | 64 | 178 | 329 | 654 | 2298 | 7101 | 23,486 |

மேலும் மேற்கண்ட பட்டியில் குறிப்பிட்டுள்ளபடி 16 வயதிற்கு முன்பே விதவைகளாகிவிட்ட 23,486 பெண்களின் கதியாது? இவை கள் விதவா விவாகத்தினுல் வந்த கேடல்லவா? மேலும் சில பெண்கள் சிறுபோதே விதவைகளாகி விடுதலின் திருட்டுத்தன்மையாக விபசாரம் செய்து அதன் பலனுக உற்பத்தியாகும் கருக்களை அழிக்கும் பாதகத்தைக் கைக்கொள்ளுகின்றனர்! இம்மாதிரி பரிதாபகரமான சம்பவங்கள் எத்தனையோ வெளியாகின்றன! மேலும் சில விதவைகள் வெளிப்படையாகவே விபசாரம் செய்கின்றனர். (இது அவர்களின் சமூகத்திற்கு எத்தகைய சிறுமையை விளைவிக்கின்றன வென்பதை அன்ஞர் கவனிப்பதில்லை) மேற்கண்ட காரணத்தால் சென்ற முப்பதாண்டுகளுக்கிடையில் சுமார் இரண்டு கோடி இந்துக்களின் ஜனத்தொகை குறைந்து விட்டது!

பாலிய விவாகத்திற்கு அவர்களின் பெற்ருேர்களே அனேகமாய் தூண்டுகோலாயிருக்கின்றனர் என்பதை சொல்லாமலிருக்க முடியாது. இதுதாஞே பெற்ருேர்களுக்குக் குழந்தைகளின் மேலுள்ள அன்பு? ஆர்வம்? காதல்? பால்ய மணக்கோலத்தோடு அவர்களைப் பார்ப்பதைத் தவிர்த்து மற்ஞென்றும் அவர்களுக்குத் தோன்றவில்லைப் போலும்! தம் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கையை-நிலைமையைக் கவனியாமல் பால்ய விவாகம் செய்வதற்குப் பதிலாக எவ்வளவோ நன்மைகளைச் செய்யலாமே!

ஓ! பெற்ருேர்களே உங்கள் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் அழியாச் செல்வமாகிய கல்வி யென்னும் கற்பக விருக்ஷத்தை வளர்ந்தோங்கச் செய்யுங்கள்! உங்கள் பெண்களை நன்கு சங்கீதத்தில் பயிற்சி செய்யுங்கள். உங்கள் பிள்ளைகளை நன்கு சபையில் பேசும் வன்மையில் பயிற்றுவியுங்கள். ஏற்ற வயதில் உங்கள் புத்திரர்களுக்கும், பெண்களுக்கும் விவாகத்தைச் செய்யுங்கள்! பாலிய விவாகத்தை அறவே ஒழியுங்கள்! என்று நம் தாய் நாட்டில் பாலிய விவாகம் ஒழிகிறதோ அன்றே நம்நாடு தோஷமற்ற நாடாக மாறும்.

---



# ஆசிரியக் குறிப்புகள்.

**அறிக்கை**

இந்தப் பத்திரிகைச் சற்று தாமதமாய், இரண்டு மாதங்களுக்கும் சேர்ந்து வருகிறது. கிராமத்தி லிருப்பதால் பலவிதச் சங்கடங்களிருக்கின்றன. தயவு செய்து மன்னிக்க வேண்டுகிருேம். எழுதியிருந்த பிளாக்குகள் இனியும் எமது கைக்குக் கிடைக்க வில்லை. ஆகையால் இப் பத்திரிகையில் மகரிஷி, தயானந்தர் ஆகிய இருவரது படங்கள் வெளியிட முடியவில்லை யென்று வருந்துகிருேம்.

**34-வது தமிழ் மாகாண மகா நாடு**

மதுரை யம்பதியில் 5, 6, 7—6—1931ல் ஸ்ரீமான். S. சத்யமூர்த்தி அவர்கள் அக்ராசனுதிபத்தியத்தின் கீழ் தமிழ் மாகாண மகா நாடு வெகு விமரிசையுடன் நடந்தேறியது. காலத்திற்கேற்ற அநேக நல்ல தீர்மானங்கள் நிறைவேறி யிருக்கின்றன. அக்ராசனரின் வாக்குகள் உணர்ச்சி உண்டாக்கத்தக்கனவா யிருக்கின்றன. வரவேற்புத் தலைவருடைய வார்த்தைகளில் உண்மையும் உறுதியும் கமழ்கிறது. தமிழ் நாட்டு மகா நாட்டிலே இம் மதுரையில் கூடிய மகா நாடு மிகவும் முக்கியமானது. தேசியப் பெரும் போராட்டத்திற்குப் பிறகு இது நடை பெற்றதால், இந்த மகா நாட்டை இந்தியாவே கவனித்து நிற்கின்றது. தமிழர் வீரம் ஓங்குக; தமிழர் தீரம் வளர்க; தமிழர் வெற்றி பெறுக; தமிழர் வாழ்க வாழ்க!

**மாதர்களுக்குச் சொத்துரிமை**

மாதர்களுக்கு ஆண்களைப் போன்று சொத்துரிமை இருந்தாலன்றி பெண்கள் சுதந்திரமாயும் சுதந்திரமாயும் வாழ முடியாது. இந்திய மாதர்களின் நிலை பரிதாபம்! தமிழப் பெண்களின் ஸ்திதியோ [illegible] பரிதாபம். [illegible] மாதர்களுக்குச் சொத்துரிமை கொடுக்கத் தீர்மானித்திருக்கின்றது. மலையாள ஸ்திரீகளைப் பாருங்கள்; இலங்கைத் தமிழ் மாதர்களை நோக்குங்கள்; முகம்மதியப் பெண்களைக் கவனியுங்கள். இவர்களுக் கெல்லாம் சொத்துரிமை உண்டு, ஆண்கள் பெண்களை ஆளும் பரியந்தம், ஆண்கள் ஆளப்படுவார்கள், இந்தியப் பெண்களுக்குச் சொத்துரிமைகள் கிடைத்த வுடன் அவர்களுடைய அபிவிருத்தி அதி தீவிரமாக இருக்கும்.

## இராஜபாளையம் ராஜா

ஆந்திர நாட்டில் ராஜாக்கள் என்ற க்ஷத்திரிய வகுப்பார்கள் செல்வாக்கும் செல்வமும் படைத்தவர்கள். இவர்கள் தமிழ் நாட்டில் இராஜபாளையம் என்ற ஊரில் மட்டும் இருக்கிறார்கள். இவ்வூர் யுவர்கள் சென்ற தேசீயப் போராட்டத்தில் நன்கு வேலை செய்திருக்கிறார்கள். இராஜபாளையம் கதர், தமிழ்த் தேசமெங்கும் பிரசித்தமாயிருக்கின்றது. இவ் வூருக்குத் திலகம் போல் விளங்கும் ஸ்ரீமான். P. S. குமாரசாமி ராஜா அவர்களை நாம் நன்கு அறிவோம். தேசாபிமானத்திலும் பொதுநலத் தொண்டிலும் இந்த இராஜபாளையம் ராஜா அவர்கள் அதிகமாக ஈடுபட்டவர். நமது "பாரதி"யின் நிலைமையை அறிந்து, "பாரதி"க்குப் போஷகராகச் சேர்ந்து, இப் பத்திரிகைக்கு ஒரு பெருந் தொகை கொடுக்க முன் வந்ததற்காக, அவருக்கு அநேக வந்தனங்கள் அளிக்கிறோம். இம் மாதிரியான பத்திரிகாபிமானிகள் ஊருக்கு ஒருவரேனும் இருப்பரேல், நமது நாட்டின் நிலை இப்படி இருக்காது. இராஜபாளையம் ராஜா வாழ்க! வாழ்க!

## "பாரதி"யின் அன்பர் கிருஷ்ணன்

"பாரதி"யில் அடிக்கடி உயர் வியாசங்களை எழுதிக் கொண்டு வரும் ஸ்ரீமான். K. G. கிருஷ்ணன் அவர்களின் பெயரை வாசகர்கள் நன்கு அறிந்திருக்கக் கூடும். இவர் சுய முயற்சியால்தான் இந் நன்னிலைக்கு வந்தார். இவர் இராமனாதபுரம் ஜில்லா, அபிராமம் கிராமத்தில் பிறந்தவர். ஐரோப்பா, இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா முதலியவை போன்ற சுயேச்சையான தேசங்களில் இவர் பிறந்திருந்தால், இவருடைய முன்னேற்றம் இன்று வேறுவிதமாயிருக்கும். இவர் இப்பொழுது ரங்கூன் சர்வ கலாசாலைக் கல்லூரியிலே உபந்நியாசகராக இருக்கிறார். இவர் பர்மாவிலிருப்பதால், தமிழ் நாடு இவருடைய சேவையை இழந்துகொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழ் அபிவிருத்திக்காகத் தோன்றியிருக்கும் அண்ணாமலை சர்வ கலாசாலையார் இவரை வரவழைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுகிறோம்.

இவர் வாலிபர். தனது சொந்தக் கிராமத்தில் சென்ற மாதம் 4—5—'31உயில் இவருக்கு விவாகம் நடந்தேறியது. தம்பதிகளை நேரில் கண்டுகளிக்கும் பொருட்டு நாம் அபிராமத்தைச் சேர்ந்த அகத்தாரிருப்பு என்ற கிராமத்திற்குப் போய் எமது அன்பைத் தெரிவித்துக் கொண்டோம். இச் சதிபதிகளுக்கு அநேக திடகாத்திரத்தையும், நீண்ட ஆயுளையும், சந்தோஷத்தையும், சாந்தியையும், வாழ்வில் வெற்றியையும் தந்தருளுமாறு எல்லாம் வல்ல கடவுளை முழு மனதுடன் பிரார்த்திக்கிறோம். இம் மணமானது மணமாகி மணக்க! மணக்க!!





## வாலிபர் சங்கம்

வாலிப இயக்கம் இன்று உலகம் முற்றிலும் பரவி யுவர்களுக்கு அபார ஆற்றலையும், ஆவேசத்தையும் அளித்து அரிய பெரிய காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலும் இந்த இயக்கம் நன்கு பரவியிருக்கிறது. காங்கிரஸ் சபையை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்துவதில் எவ்வளவு வேலை செய்யப்படுகிறதோ அவ்வளவு சிரத்தை எடுத்து ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் வாலிப சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும். காங்கிரஸ் நமது தேசத்திற்குச் சுதந்திரம் அளிக்கப் போகின்றது; வாலிபச் சங்கங்களோ கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் வேண்டிய தொண்டு செய்யப் போகின்றன. ஆகையால் எல்லாக் கிராமங்களிலும் பட்டினங்களிலும் யுவர் சபைகளை நிறுவ வேண்டுகிறோம். வாலிப உலகம் வளர்வதாக.

## தேசீயப் பள்ளிகள்

ஒத்துழையாமையின் வேகத்தால் எத்தனையோ தேசீயப் பள்ளிக்கூடங்கள் நம் நாடெங்கும் உண்டாயின. அவைகள் இப்பொழுது எங்கே? ஆதரிப்பாரற்று அப்படியே அவைகள் அழிந்தன. எங்கோ தப்பித் தவறி சில உயிருடனிருக்கின்றன. அவைகளையும் தேச மக்கள் காப்பதில்லை; கவனிப்பதில்லை. தேசீயப் பள்ளிக்கூடங்களை நம்பி ஆங்கிலப் பள்ளிகளை பகிஷ்கரித்து இப்பொழுது திண்டாடிக் கொண்டிருக்கும் மாணவர்களைப் பார்த்தால் பரிதாபம். தேசீயப் பள்ளிகளைத் தேசாபிமானிகளும் தலைவர்களுங் கூடக் கவனிக்காமலிருக்கும் பொழுது, தேச மக்கள் எப்படி ஆதரிப்பார்கள்? தேசீயக் கல்விக்காக என்ன திட்டங்களைத் தேசீயத் தலைவர்கள் இது வரையில் தயார் செய்திருக்கிறார்கள்? இரண்டு உதாரணங்கள் கூறுகின்றோம். வி. வி. எஸ். அய்யர் குரு குலம் எங்கே? சோழவந்தானில் ஒரு ஒரு தேசீயப் பள்ளியை ஸ்ரீமான்கள் முனகால பட்டாபிராமய்யர் அவர்கள், M. சுப்ரமண்ய முதலியாரவர்கள், வெங்கிடசாமி அய்யரவர்கள் முதலியோர் சேர்ந்து ஒரு தேசீயப் பள்ளியை ரயில் வண்டிகளில் உண்டியல் மூலமாய்ப் பணம் சேகரித்து எவ்வளவோ கஷ்டத்துடன் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவ் வூரார் இதை என்ன என்று கவனிப்பதில்லை. இதன் ஆசிரியர் திரு. சின்னச்சாமி பிள்ளையவர்களுக்குச் சோழவந்தான் வாசிகள் போதிய உற்சாகம் கொடுக்கவில்லை என்று அறிய விசனப்படுகின்றோம்.

மதுரையில் பல தேசாபிமானிகளால் துவக்கப்பட்ட தேசீயப் பள்ளியானது இப்பொழுது திரு. சிதம்பர பாரதியாரது ஆதீனத்தின் கீழ் நடைபெறுகிறது. ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் மதுரை வாசிகள் உதவி கொடுக்கிறதில்லை. ரெயில்வே உண்டியல் மூலமாகவே வசூலித்த பணத்தைக் கொண்டு மதுரை தேசீயப் பள்ளி நடத்தப்படுகிறார்கள்.

இம் மாதிரியான பள்ளிகளுக்குத் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி அதிகமாக உதவி செய்ய வேண்டுகிறோம். தேசீயக் கல்வித் திட்டத்தைச் சீக்கிரத்தில் காங்கிரஸ் கமிட்டி நல்ல நல்ல உயர்தர ஆசிரியர்களின் உதவியைக் கொண்டு வெளியிடுமாக. இந்தியாவில் ஹரித்துவார குருகுலத்திற்கும் சாந்தி நிகேதன குருகுலத்திற்கும் நாம் பெரிதும் வணக்கம் செலுத்துகிறோம். தலைவர்களும் தேசாபிமானிகளும் தங்களுடைய குழந்தைகளைத் தேசீயப் பாடசாலைகளுக்கு அனுப்பாமலிருக்கிறார்கள், இப்படிச் செய்து கொண்டு இவர்களும் "தேசீயக் கல்வி, தேசீயக் கல்வி" என்று பிரசங்கங்கள் செய்கிறார்கள்.

## "பாரதி" மானேஜரின் சுற்றுப் பிரயாணம்

பொதுஜன சேவையில் என்று பிரவேசித்தோமோ, அன்று முதல் நமது பணியில் பங்கு கொண்டு தொண்டராயும், துணைவராயும், காரிய ஸ்தலங்களுக்கு மானேஜராயும் பொறுப்பேற்று உழைத்து வருபவர் நமது உடன் பிறந்த சகோதரர் ரா. சுப்ரமண்யம் என்பவராகும். இவர் ஆண்டில் இளைஞராக விருந்தும் தேசப் பணியில் ஆர்வமுடையவர்; சீர்திருத்தத்தில் ஊக்கங் கொண்டவர்; பத்திரிகாபி விருத்தியில் காதலுடையவர்; பத்திரிகைத் தொழிலில் சென்ற சில வருடங்களாக நமக்கு ஆயிரக் கணக்கான ரூபா நஷ்டம் நேரிட்டதையும் பொருட்படுத்தாது, ஊக்க மிகக் கொடுப்பவர்; நமது ஆனந்தா பிரஸின் முழுப் பொறுப்பையும் தாங்கி நன்குப் பணியாற்றி வருபவராகும். இவையன்றி "பாரதி"யின் தொண்டைப் பிரதான சேவையெனக் கொண்டு உழைத்து வருபவர். தேசீயத்தால் நாமும் சிறை சென்றபோது, தேசத்தாருக்குப் "பாரதி" பற்றி விடுத்த நமது நம்பிக்கையான அறிவிப்பைக் கடைப்பிடித்து, மறுபடியும் "பாரதி" என்றும் போல் நடைபெற முயற்சி செய்து, அரசாங்கம் அனாவஸ்யமாக வீணை சாக்குப் போக்குகளைக் காட்டி காலகரணஞ் செய்வதைக் கண்டு, தளர்ச்சியுறாது, நாட்டில் "பாரதி"யினிடங் கொண்ட அன்புக்கு மாசின்றி, நல் லபிப்பிராயம் நாளும் வளர்ந்தோங்க தொண்டாற்ற முனைந்து நமதுவருகை பரியந்தம் "நவீன பாரதி" என்ற புதிய நாமஞ் சூட்டி, நடத்தி வந்தவர். இது சமயம் இவர் திடீரென நோயினால் கொடுமையாகப் பீடிக்கப்பட்டுப், படுக்கையிலிருந்து கொண்டே செம்மையாயும் விமரிசையாயும் வாசக நேயர்களின் மனதை மகிழ்வித்தது நன்கு தெரிந்ததே. இதிலிருந்து இவரது துணை நமக்கு மிகவும் உதவியாகவும் பத்திரிகைக்கு மிக மிக அவஸ்யமாகவுமிருந்து வருகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமோ?

இவ்வாறெல்லாம் "பாரதி"யின் புனிதமான பணியைச் சிரமேற்கொண்டு உழைத்து வரும் சோதரரை, இதுபோது தமிழ் நாட்டிலெங்கும் "பாரதி"யின் தொண்டு பரிணமித்துச் செழிப்புற வேண்டி, ஆக்க மிகத் தேடி வருமாறு அனுப்பியிருக்கின்றோம். இவரது



தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் பயனாக, "பாரதி" புதிய சக்தியையும் நிலையையும் பெற்று, முன்னிலும் தீரமாயும் வீரமாயும் விமரிசையாயும் வெளிவரச் செய்ய ஒவ்வொருவரும் ஊக்கமுடன் முயன்று உதவி செய்வது கடமையாகும். அன்பர்கள் ஆங்காங்கு அவர் தமக்கு வசதிகளீந்து வேணமட்டும் உதவி பல புரிந்து புதிய புதிய சந்தா நேயர்களை அதிக மதிகமாகச் சேர்த்துக் கொடுத்து நமது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுகின்றோம்.

சோதரர் ரா. சுப்ரமண்யம் அவர்களுக்குச் செய்யும் யாவும் நமக்கு உதவியதாகவே கருத வேண்டுகின்றோம். பின் அஃது நம்பிலிருந்து "பாரதி"யின் வடிவில் கலந்து அன்பர்களுக்கே அதிகம் அதிகமாக அமுதத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

## சித்தையன்கோட்டையில் மக்கள் விடுதலைசேவை சங்கம்

மூட பழக்க வழக்கங்களை அகற்றும் பொருட்டு மதுரை ஜில்லா, சித்தையன்கோட்டையில் ஜூன்மீ 22உயில் மக்கள் விடுதலை சேவைச் சங்கத்தின் திறப்பு விழா எமது அக்ராசனாதிபத்தியத்தின் கீழ் நடைபெற்றது. இச் சங்கத்தார்கள் சமூகச் சீர்திருத்தங்களைச் செய்வதைப் போன்று தேச விடுதலை வேலையிலும் மகா தீவிரமாய் வேலை செய்ய வேண்டுகிறோம். தேசீயப் பெருஞ் சக்தியை அறிந்து இதன் அங்கத்தினர்கள் அதன்படி நடக்க வேண்டுகிறோம்.

## நாடக நடிகர் சங்கம், மதுரை

இப்பொழுது தமிழர் நாடக மேடை அநேக வழிகளில் சீர்பட வேண்டியிருக்கிறது. நினைத்தபடியெல்லாம் நாடகங்கள் நடித்து நாடகங்களின் பயனைக் கெடுத்து விடுகிறார்கள். பாமர்களுக்குப் புத்துணர்வும் புதிய படிப்பும் அளிப்பதற்கு நாடகங்கள் சிறந்த முறைகளாயிருக்கின்றன. கிரேக்கர்களும் சோமர்களும் நாடகங்களை நல்ல வழியில் பயன்படுத்திக் கொண்டார்கள். காளிதாசரது நாடகங்கள் எவ்வளவு சுவை பொருந்தியவைகளாயிருக்கின்றன. இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியரது நாடகங்கள் எவ்வளவு சீர்திருத்தங்களை உண்டாக்கியிருக்கின்றன. இன்று இங்கிலீஷ் உலகத்தில் பெர்னார்ட்ஷா நாடக உலகில் எவ்வளவோ மதிக்கப்படுகிறார். அவரது நாடகங்களால் எவ்வளவோ சீர்திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் நாடக நடிகர் சீர் கெட்ட போக்குகளையும், தாழ்மையான நிலைமையையும் அவர்களுடைய சமூக வாழ்வையும் நன்கு கவனித்து, தமிழ் நாட்டு நாடக நடிகர்களையும் நாடகத் தொழிலையும் நானாவழியில் அபிவிருத்தி செய்யக் கருதி, ஸ்ரீமான்கள் பாஸ்கரதாஸ், சிதம்பரநாதன், சாரங்கபாணி, தாமோதரன் முதலியவர்கள் ஒன்று கூடி மதுரையில் நாடக நடிகர் சங்கம் என்ற பெயருடன் ஒரு சபையை

நிறுவி யிருக்கிறார்கள். புதிய முறையில் புதிய சுவையில் புதிய விஷ யங்களை நாடகங்களாக நடித்துக் காட்ட வேண்டுகிறோம். உப்புக் காய்ச்சுதல், வன இலாகாவை மீறுதல், மதுபானக் கடை, அயல் நாட்டுத் துணிக் கடை மறியல், விபசாரிகளின் நடத்தைகள், உயர் தரக் கல்வி கற்ற மாணவர்களின் வேலை யில்லாத் திண்டாட்டங்கள், புருஷர்கள் மனைவிகளுக்குச் செய்யும் கொடுமைகள், சமூகக் கொடு மைகள், தீண்டாமையின் கொடூரங்கள், பால்ய விவாகக் கொடுமைகள், விதவைகளின் பரிதாப நிலை, தேசியப் போரினைப் பற்றிய விசாரணை கள், மகாத்மாவின் ஜீவிய சரித்திரம் இவை போன்ற அநேகம் துறை பற்றிய விஷயங்களை நாடக ரூபமாக நடத்திக் காட்டிப் பொது ஜனங் களைப் பண்படுத்துவார்களாக; நாடக நடிகர்களும் உயர்வார்களாக.

## தீண்டாமைக்கு என்ன பிரச்சாரம்?

மதுபானம், அயல் நாட்டுத் துணி முதலியவைகளைப் பகிஷ்கரிக் கத் தீவிரமாய்ப் பிரச்சாரம் நாட்டில் நடந்து கொண்டு வருகிறது தீண்டாமை விலக்கு என்று அடிக்கடி தீர்மானங்களாக செய்து காகி தங்களில் எழுதி வைத்திருப்பதைத் தவிர்த்து தீண்டாமையைப் போக்குவதற்காக என்ன தீவிரமான காரியங்கள் செய்யப்படுகின்றன தேசீய விடுதலைக்குப் பிறகு சமூக விடுதலையைப் பார்த்துக் கொள்ள லாம் என்று நினைப்பது சரியல்ல. தேசீய விடுதலைக்காக உழைக்கும் பொழுது சமூக சீர்திருத்தங்களுக்காகவும் வேலை செய்ய முற்பட வேண்டும். அநுபவ பூர்வமான செய்கைகளா லன்றி தீண்டாமையைப் பிரசங்களினுல்—எழுத்துக்களினுல் மட்டும் ஒழித்துவிட முடியாது.

## ஆசிரியர் ஸ்ரீநிவாசய்யங்கார் பிரிவு

ஸ்ரீமான். பி. டி. ஸ்ரீநிவாசய்யங்கார் உயர்தர ஆசிரியரென்பதைத் தமிழகம் நன்கறியும். ஆங்கிலத்தில் நல்லறிவும், இந்திய சரித்திரத் தில் ஆழ்ந்த ஆராய்ச்சியும், தமிழில் தக்க பயிற்சியும், போதனு முறை யில் நல்ல திறனும் அவருக்குண்டு. பல கல்லூரிகளில் ஆசிரியரா யிருந்தவர். சென்னைச் சர்வ கலாசாலையில் சரித்திர உபந்நியாசகரா இருந்த பிறகு, சிதம்பரம் அண்ணமலை சர்வ கலாசாலையில் சரித்திரப் பேராசிரியராக அமர்ந்து நன்கு தொழில் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது, சமீபத்தில் அவர் காலஞ் சென்று விட்டாரென்ற செய்தி யைக் கேட்டு அளவற்ற துக்கமடைகிறோம். வட நாட்டில் சரித்திர ஆராய்ச்சிக்கு ஆசிரியர் யாதவநாத சர்க்கார் இருக்கிறார். தமிழ் நாட்டில் யாதவநாதராய் விளங்கிய அய்யங்கா ரவர்களைத் தமிழர்கள் இழந்தது பெரும் நஷ்டமாகும். அவரது ஆராய்ச்சிகளும், நூற்களும், பிரசங்கங் களும், போதனைகளும் தென்னாட்டாருக்கு மிகவும் பயன்பட்டன. இவர் திருவி. டாக்டர் ராஜன் அவர்களுக்குத் தாய் மாமனுர். இவ ருடைய குடும்பத்தாருக்கு எமது அனுதாபம். இவருடைய ஆத்ம சாந்தி அடைவதாக.

198538

# ஆராய்ச்சி மேடை.

## மாஜினி சரித்திரமும் மனிதர்கடமைகளும்

ஆசிரியர்:— எம். ஆர். ஜம்புநாதன்.

வெளியிட்டவர்:— சூடன் அண்டு கம்பெனி,

14, பள்ளியப்பன் தெரு, சௌகார் பேட்டை, சென்னை.

விலை ரூ 2—0—0.

ரோம் ராஜ்யத்தின் பண்டைப் பெருமைக ளெல்லாம் அழிந்து அடிமையாய்க் கிடந்த இட்டலி தேசம் மறுபடியும் விடுதலை அடையும் பொருட்டு அரும் பெரும் தேச சேவை புரிந்து, அதன் பயனைச் சிறைச்சாலையில் அடைபட்டும் அயல் நாடுகளில் வாழ்ந்தும் வந்த தேச பக்தர் ஜோசப் மாஜினியின் பெயரைச் சுதந்திர உலகம் நன்கறியும். இவரது பெயரே தேசாபிமானம் என்று அர்த்தம் கொள்ளக்கூடியதா யிருக்கிறது. தமிழில் கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்களால் எழுதப் பெற்ற மாஜினியின் சரித்திரம் பறிமுதல் செய்யப்பட்டது. இப் பொழுது ஸ்ரீமான். M. R. ஜம்புநாதன் "மாஜினி சரித்திரமும் மனிதர் கடமைகளும்" என்ற புஸ்தகத்தை எழுதி வெளியிட்டுத் தமிழுலகத் திற்குப் பெரிதும் உதவி செய்திருக்கிறார். தேச சுதந்திரத்திற்காக உழைக்கும் இக் காலத்தில், இந் நூல் தமிழ் மக்களுக்கு அவஸியமா யிருக்கிறது. இவ் விடுதலை வீரரின் தேச பக்தி தக தக வென்று கொதிக்கும் ஆவேச வாக்குகளைப் படித்துத் தமிழ் மக்கள் நவம் நவமான எழுச்சியைப் பெறுமாறு செய்த ஜம்புநாதரவர்களுக்கு எமது வந்தனங்கள். தேசபக்தி யற்றவர்கள்கூட இதைப் படித்தால், தேசாபிமானிகளாகி விடுவார்கள். இதைத் தமிழகம் தக்கபடி ஆதரித்து ஆசிரியருக்கு உற்சாகம் அளித்து, இம்மாதிரி அநேக புஸ்தகங்களை எழுதும்படி செய்ய வேண்டியது தமிழ் மக்கள் கடமை யாகும்.

எளிய நடையில், நல்ல முறையில் வியக்தமாக எழுதப்பெற் றிருக்கிறது. நல்ல காகிதம்; நல்ல எழுத்து. தேசாபி விருத்தியில் ஆசை கொண்ட ஒவ்வொருவரும் இதை அவஸியம் படிக்க வேண்டு மென விரும்புகிறோம்.

---

பெயர்:— அனாசக்தி யோகம்.

எழுதியவர்:— மகாத்மா காந்தி.

மொழிபெயர்த்தவர்:— க. சந்தானம்.

வெளியிட்டவர்:— எஸ். கணேசன், திருவல்லிக்கேணி, சென்னை.

**விலை அணா நான்கு.**

இதை எழுதியவர், மகாத்மா காந்தி அவர்கள். இவர் பகவத்கீதைக்கு நூதனமான வியாக்யானம் கொடுத்து எழுதி யிருக்கிறார். சாதாரண மனிதர்கள் பகவத்கீதையைப் படிப்பதென்பது இலகுவானதன்று. பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் விளங்கும் வண்ணம் இலகுவான நடையில் பகவத்கீதையை குஜராத்தில் இவரால் மொழி பெயர்க்கப்பட்டது. இதில் இவரது கீதா அனுபவம் விளங்குகிறது. புதிய வழியில் கீதையை மொழிபெயர்த்திருக்கிறார்.

இந்த மொழிபெயர்ப்பு நூலின் பெருமையை அறிந்து ஸ்ரீமான். க. சந்தானம் அவர்கள் இதைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். இவர் வேலூர் சிறையிலிருக்கும் பொழுது இதை மொழிபெயர்த்துத் தமிழர்களுக்கு உதவி செய்திருக்கிறார். இலகுவான நடை; புஸ்தகம் குறைந்த விலையில் இதை விற்க முன்வந்த சென்னை ஸ்ரீமான். கணேசனைப் போற்றுகிறோம். வட நாட்டில் ஹிந்திப் புஸ்தகங்களை ஆயிரக் கணக்கில் வெளியிட்டு குறைந்த விலைக்கு விற்பதுபோல, தமிழ்ப் புஸ்தக வெளியீட்டில் ஸ்ரீமான். கணேசன் செய்து வரும் தொண்டைத் தமிழர் ஆதரிப்பார்களாக.

"சுவாமி"

---

## சுகுணவதி

எளிய நடையி லெழுதப் பெற்றிருக்கும் சுகுணவதி அல்லது மனம் போல மாங்கல்ய மென்னும் பெயரிய நவீன மொன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் பல பத்திரிகைகட்கும் கட்டுரை நல்கி வரும் மார்த்தை திரு. சா. கிருஷ்ணய்யராகும். பெயருக்கேற்ப விஷயம் பெற்றதா யிருக்கின்றது. பெதர்வெயிட் பேப்பரில் D. C. 16. mo. அளவில் 168 பக்கம் கொண்டு சித்திரப் படங்களைப் பெற்றறு அழகாகத் தோன்றுகிறது.

இதன் விலை ரூ 1—0—0. என்பதை யறிய அதிகமென்றே சொல்லலாம். இவ்வித நூற்களெல்லாம் மக்களுக்குச் சகாயமாகக் கிடைக்க வேண்டுவது அவஸ்யமாகும்.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் கௌஸ்

மைலாப்பூர், மதராஸ்.

R. S.

198538




"பாரதி"யின் பம்பாய் ஏஜண்ட்.

**K. S. Naganathan,**
**C/o. The Madura Knitting Co.,**
**47, Chackla Street,**
**Bombay 3.**

---

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

குறைந்த விலை! நிறைந்த பொருள்!! சிறந்த நவீனம்!!!

பாவலர், நாவலர், மற்றியாவரும் பெரிதும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும் உயர்ந்த பதிப்பு!

**சுகுணவதி அல்லது** மனம்போல மாங்கல்யம்.

விலை ரூபா ஒன்றே.

கொஞ்சம் பிரதிகளே மீத மிருப்பதால் முந்துவது நலம்.

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹவுஸ், மைலாப்பூர், மதராஸ்.

---

"இந்திய மித்திரன்"

சிறந்த தேசீய வாரப் பத்திரிகை.

ஆசிரியர்: B. வேணுகோபாலன் அவர்கள்.

மலேயா நாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளில் தேசீயத்தையே பிரதானமாகக் கொண்டு வெளிவருவது எது?

தொழிலாளர்களுக்குத் தொண்டாறு யுழைப்பது எது?

திக்கற்ற இந்தியக் கூலிகளுக்குச் சிறந்தவழிகளை எடுத்துக் காட்டி, மோசக்காரர்களின் படு மோசத்திற் காளாகாது தப்புவிப்பது எது?

ஆயிரக் கணக்கான சந்தாதாரர்களைப் பெற்று எண்டிசை வர்த்தமானங்களையும் கொண்டு வீரமுடன் தீரமாக உலாவி வருவது எது? "இந்திய மித்திரன்" ஒன்றேயாகும்.

வருட சந்தா: மலேயாவுக்கு வெள்ளி 4/-

இந்தியா, பர்மா, சிலோனுக்கு ,, 5/-

விலாசம்: மானேஜர், "இந்திய மித்திரன்,"

87, பெல்பீல்ட் தெரு, ஈப்போ., F. M. S.

## பிரிண்டிங் மெஷின்கள் தேவை.

சிங்கிள் ராயல், டபிள் கிரௌண், டபிள் டிம்மி மெஷின்கள்
பவர் பிட்டிங்குட னிருந்தால், முழு விபரத்துடன்
உடனே அறிவிக்கவும்.

மானேஜர்,
ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம்.

## "கலா நிலயம்"

### இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவி யென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்

**சந்தா விபரம்.**

சந்தா உள்நாட்டிற்கு ரூ 7—8—0 வெளிநாட்டிற்கு ரூ 9—0—0 தனிப்பிரதி அணா 3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

## "பாரதி" ஏஜெண்டுகள்.

தமிழ் நாட்டிலே சுற்றுப் பிரயாணம் செய்யப்போகும்
"பாரதி"யின் மானேஜர், ஏஜெண்டுக ளில்லாத
ஊர்களில் ஏஜெண்டுகளை நியமிப்பார்.

அபேக்ஷையுள்ளவர்கள் தாமதியாது முன்னதாகவே
ஆபீஸுக்குத் தெரிவிக்கவும்.





## சார்ஜ் குறைக்கப்பட்டு விட்டது.

என்றாலும்

நேர்த்திக்கும் உறுதிக்கும் உத்தரவாதம்.

இங்கு

பிரிண்டிங், ரூலிங், பைண்டிங் ஆகிய எல்லாவித வேலைகளும்
விரும்பிய வண்ணம் குறித்த காலத்தில் செய்து
தரப்படுகிறது. வெளியூர் ஆர்டர்களை
உடனுக்குடன் கவனிக்கப்படும்.

பரீக்ஷார்த்தமாகவேனும் உங்கள் ஆர்டர்களை
ஒரு முறை கொடுத்துப் பாருங்கள்.

ஆனந்தா பிரஸ், உத்தமபாளையம்

## "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள்; உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தேழாவது ஆண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.

# 1930-ம் வருட வால்யம்

## புதிய சந்தா நேயர்கட்கோர் நல் விருந்து.

---

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களும் பெரியோரின் படங்களும், அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கியுளது. அன்றியும், சிறந்த ஆசிரியர்களாலும் பிரபல நியாயவாதிகளாலும் அறிவு தருவதாய், ஆனந்தம் நல்குவதாய், செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களை 800 பக்கங்களில் கொண்டதாயிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக நேர்த்தியான காலிகோவினால், அழகாகவும் உறுதியாகவும் பைண்ட் செய்யப்பெற்று, தங்க மசியில் காலிகோவின் மேற்புறத்திலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபாற் செலவு அணா 8 சேர்த்து ரூ. 3. அல்லது 5 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.

# விளம்பர விகிதம்.

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரதி பேரேடில் கட்டம் 1-க்கு | | | | ரூ. | 1—0—0 |
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3 ல் | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 ல் | ,, | ,, | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட கால விளம்பரஞ் செய்வோர் எழுதவும்.

---

# "பாரதி"

## ஒரு தேசீய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாலிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும்

**மாலிகை இஃது ஒன்றே யாகும்.**

**உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம் செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக் கொடுங்கள்.**

### சந்தா விபரம்

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. **2—0—0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ. **2—8—0**
அல்லது **4** ஷிலிங்

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.